# சைவ நெறி

## தரம் 7



கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# தமிழ் - அரிச்சுவடி

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |
| ஆய்த எழுத்த ∴ | | | | | | | | | | | | |

# சைவ நெறி




## தரம் 07

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

| | | |
|---|---|---|
| முதலாம் பதிப்பு | - | 2007 |
| இரண்டாம் பதிப்பு | - | 2008 |
| மூன்றாம் பதிப்பு | - | 2009 |
| நான்காம் பதிப்பு | - | 2010 |
| ஐந்தாம் பதிப்பு | | 2011 |


எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

**உங்களுக்குக் கிடைத்திருக்கும் இப்பாடநூலுக்காக அரசினால் ரூபா 110.00 செலவிடப்பட்டுள்ளது.**

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,
கருணாரத்ன அன்ட் சன்ஸ்
67, கைத்தொழிற் பேட்டை, கட்டுவான வீதி, ஹோமாகம
அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு.

**அன்பான பிள்ளைகளே!**

நாம் அன்று சுதந்திரம் பெறும்போது எம்மைவிடவும் பின்னடைந்திருந்த பல நாடுகள் இன்று எம்மைப் பின்தள்ளி நீண்ட தூரம் முன்னேறிச் சென்றுவிட்டன. எனினும், இன்று நாம் அந்த நாடுகளைப் பின்பற்றவோ அந்த அபிவிருத்திகளின் சாயலைக் கொண்டு செயற்படவோ தயாராக வேண்டியதில்லை. அதே போன்று கைவிட்டுப்போன மரபுரிமைகளைப் பற்றிப் பேசிப் பேசித் தவிக்கவும் வேண்டியதில்லை. நாம் செய்ய வேண்டியதெல்லாம் அனைத்தையும் பின்தள்ளிச் சென்று உலகுக்கு அவர்கள் அடையாத அபிவிருத்தியொன்று தொடர்பான புதிய வழிகளைக் காட்டுவதேயாகும்.

அன்பான பிள்ளைகளே! நாம் இப்போது உங்களது எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதில் ஈடுபட்டுள்ளோம்.

**மஹிந்த ராஜபக்ஷ**

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி**

(2010.08.15 ஆம் திகதியன்று அம்பாந்தோட்டை, மாகம்புர சர்வதேச துறைமுகத்திற்கு நீர்நிரப்பும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வின்போது சனாதிபதி ராஜபக்ஷ அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி).

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

அன்பான பிள்ளைகளே,

எங்கள் தாய்நாட்டின் பெறுமதிமிக்க வளம் நீங்களே. கல்வியினூடாகவே உங்கள் பெறுமதி மெருகூட்டப்படுகிறது. இப்பணியை நிறைவேற்றுவதில் தொடர்ந்து அர்ப்பணிப்புடனுள்ள எமது நோக்கம், மிகச் சிறந்தவற்றை உங்களுக்கு வழங்குவதே.

அரசுக்கு மக்களால் செலுத்தப்படும் வரியைத் திரட்டிப் பெறப்படும் தேசியச் செல்வத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட இந்நூலை உங்களுக்கு நன்கொடையாக அளிப்பது, அறிவுத் திறன்களும் நற்பண்புகளும் நிறைந்த ஒருவராக உங்களை ஆக்கும் எதிர்பார்ப்பிலேயேயாகும். இதனூடாக ஒளிபெறும் நீங்கள் தேசியச் செல்வத்திற்கு வளமூட்டுவீர்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இதயமற்ற, வன்மையான பாறையிலிருந்து கருணையையும் அன்பையும் வெளிப்படுத்துகின்ற சிலைகளை வடித்தவர்களும் கண்ணாடிச் சுவரின் மீது இலக்கிய நயமுள்ள வாசகங்களை எழுதியவர்களுமாகிய பெருமைமிக்க மூதாதையரின் வழிவந்த உங்களில் ஆக்கச் சிந்தனையை ஏற்படுத்த இந்நூல் கைகொடுக்கும்.

இந்நூலை உங்களுக்கு வழங்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய சகலருக்கும் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பந்துல குணவர்தன**
கல்வி அமைச்சர்

## முன்னுரை

பண்பும் அறிவும் வலிமையும் நிறைந்த பிள்ளைகளே வியத்தகு தேசத்தின் எதிர்பார்ப்பாகும். இதனை நிறைவேற்றத்தக்கதாக இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசு இந்நூலை உங்களிடம் வழங்குகின்றது.

இந்நூலை நன்றாகப் பயன்படுத்தி நல்லறிவு பெற்று உங்கள் வாழ்வை ஒளிமயமானதாக ஆக்கிக்கொள்வதற்கு வழிவகுப்பதுடன், தாய் நாட்டின் சௌபாக்கியத்தின் உண்மையான உரித்துடையவராக உங்களை ஆக்குவதற்கான வாயிலைத் திறந்து தருவதும் எமது எதிர்பார்ப்பாகும்.

உங்களிடம் வழங்கப்படும் இந்நூலை உங்கள் ஆப்த நண்பராகக் கருதுவதன் மூலம் நாட்டிற்குப் பயன்படும் பிரசையாக அமையும் பாதையில் நீங்கள் பிரவேசிப்பீர்கள். இப்பாதையில் நீங்கள் பிரவேசிக்கின்றமையால், இலங்கை மென்மேலும் அபிவிருத்தியடையும் என்பதில் ஐயமில்லை. அது மாத்திரமன்று. ஏழு கடலுக்கு அப்பால் உள்ள உலகை வெல்வதற்கும் இந்நூலின் மூலம் உங்களுக்கு வழங்கப்படும் அறிவு, மனப்பாங்குகள், திறன்கள் ஆகியன உதவும். ''கீழைத்தேய உலகின் மினுங்கும் முத்தின்'' பிரகாசம் தேர்ச்சிமிக்க உங்களால் மென்மேலும் அதிகரிக்கும்.

இந்நூலை வெளியிடுவதில் தமது தொழினுட்ப அறிவை வழங்கி, நேரத்தையும் உழைப்பையும் அர்ப்பணிப்புச் செய்த எழுத்தாளர்கள், பதிப்பாசிரியர்கள், பாடநூல் மதிப்பீட்டுச் சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கும் ஒத்துழைப்பை நல்கிய ஏனையோருக்கும் எனது நன்றி உரியது.

**டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
''இசுருபாய''
பத்தரமுல்ல
2011. 05. 26

கண்காணிப்பும் மேற்பார்வையும் - மீள்பதிப்பு 2011

திரு.டபிள்யூ.எம்.என்.ஜே.புஷ்பகுமார - கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

## வழிகாட்டல்

திருமதி.கே.வீ.நந்தனி ஸ்ரீயாலதா - ஆணையாளர் (அபிவிருத்தி)
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## இணைப்பாளர்

திரு. லெனின் மதிவானம் - உதவி ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## எழுத்தாளர் குழு

திரு. மு. மனோகரன் - ஆசிரிய ஆலோசகர்,
வலயக் கல்வி பணிமனை, களுத்துறை.

திரு. மு. கிருஷ்ணபிள்ளை - உதவிக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி பணிமனை, கம்பளை.

திருமதி. இ. யோகானந்தம் - ஆசிரியர்
நுகேகொடை தமிழ் வித்தியாலயம்.

திருமதி. ஜ. கணேசலிங்கம் - ஆசிரியர், எட்டியாந்தோட்டை புனித மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்.

திருமதி. ஜெ. கிருஷ்ணபிள்ளை - ஆசிரிய ஆலோசகர்
வலயக் கல்வி பணிமனை, கம்பளை.

திரு. வி. அருளானந்தம் - பிரதி ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## பதிப்பாசிரியர் குழு

| | |
|---|---|
| **திரு. எஸ். இதயராஜா** | - உதவிக் கல்விப் பணிப்பாளர்<br>இந்து சமயம், சமய விழுமியங்கள் பிரிவு,<br>கல்வி அமைச்சு. |
| **திரு. என். ஞானவேல்** | - விரிவுரையாளர்,<br>உருகுணை தேசிய கல்வியியற் கல்லூரி,<br>காலி. |

## சித்திரம்

**திரு. என்.எஸ். ஞான குருபரன்**

## அட்டைப்படம்

**திருமதி. அமித்தா இந்திராணி** - ஆசிரியை, சித்திர ஆலோசகர்.

## கணினி வடிவமைப்பு

| | |
|---|---|
| **செல்வி. கே. சுபத்திரா** | - றோயல் கல்லூரி, கொழும்பு. |
| **செல்வி. எஸ். பிரியதர்ஷினி** | - கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |

# பொருளடக்கம்


பக்கம்

01. தாயுமானவர் கதை 01 - 05
02. பாடசாலையில் சைவம் 06 - 09
03. பாடசாலை ஒழுங்கு 10 - 13
04. வாழ்வியற் பண்புகள் 14 - 31
 (அ) பிறர்நலம் பேணுதல்
 (ஆ) நல்லவற்றைக் கடைப்பிடித்தல்
 (இ) சகோதரத்துவம்
 (ஈ) பொறுமை
05. புதுமனை புகுதல் 32 - 34
06. விரதங்கள் 35 - 42
07. குங்கிலியக்கலயநாயனார் 43 - 46
08. பஞ்ச புராணங்கள் 47 - 61
 (அ) திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரம்
 (ஆ) திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்
 (இ) சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்
 (ஈ) மாணிக்கவாசகசுவாமிகள் திருவாசகம்
 (உ) திருவிசைப்பா
 (ஊ) திருப்பல்லாண்டு
 (எ) பெரியபுராணம்
09. திருப்புகழ் 62 - 63
10. ஆலய வழிபாடு 64 - 69
11. சமயகுரவர் நால்வரின் சமயப்பணிகள் 70 - 78
12. சுவாமி விபுலானந்தர் 79 - 83
13. பதி 84 - 86
14. பெண் தெய்வங்கள் 87 - 94
15. ஈழத்துச் சைவ ஆலயங்கள் 95 - 110
 (அ) விநாயகர் ஆலயம்
 (ஆ சிவாலயம்
 (இ) அம்மன் ஆலயங்கள்
 (ஈ) முருகன் ஆலயங்கள்
 (1) சித்தாண்டி முருகன்
 (2) குறிஞ்சிக் குமரன்

# 1 தாயுமானவர் கதை

கடவுள் ஒருவரே உண்மையானவர் (மெய்ப்பொருள்) என்பதை முன்னர் அறிந்து கொண்டோம். நாம் அவரைப் பக்தியுடன் வழிபடுவோமானால் அவர் எல்லா வகைகளிலும் எமக்கு உதவுவார். இத்தகைய இறைவனின் இயல்புகளை விளக்கும் தாயும் ஆகியவர் கதையினை இப்போது படிப்போம்.

தமிழகத்திலுள்ள திருவானைக்காவில் மூதாட்டி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் கடவுளில் மிகுந்த பக்தியுடையவர். ஒவ்வொருநாளும் அந்த அம்மையார் திருச்சிராப்பள்ளியில் கோயில் கொண்டுள்ள இறைவனை வழிபாடு செய்வார். அவர் பூமாலை கட்டிக்கொண்டு சென்று இறைவனுக்குச் சாத்தி வணங்குவார். அத்தொண்டினைத் தவறாது செய்து வந்தார்.

அந்த அம்மையாருக்கு மகள் ஒருத்தி இருந்தாள். அவள் ஒரு முறை பிரசவத்திற்காகத் தாயார் வீட்டிற்கு வந்திருந்தாள். ஒருநாள் தாயார் வழக்கப்படி பூமாலை கட்டிக்கொண்டு போனார். அதை சிவன்கோயிலில் கொடுத்து விட்டு சுவாமி தரிசனம் முடித்துக்கொண்டு கோயிலில் இருந்து திரும்பினார். மழை விடாது பெய்து கொண்டிருந்தது. அதன் காரணமாக காவிரியாறு பெருகி, வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அம்மையார் ஆற்றைக்கடப்பதற்கு ஒருவரும் ஓடம் விடத் தயாராகவில்லை. அவருக்கு நெஞ்சு படபடத்தது. அன்று காலை வீட்டைவிட்டுப் புறப்பட்டபோது அவருடைய மகளுக்குப் பிரசவவேதனை தொடங்கியிருந்தது. தனது இறைதொண்டினை விரைவில் முடித்துவிட்டு வந்துவிடலாமென்று எண்ணியே அவர் கோயிலுக்குச் சென்றார். ஆனால், ஆறு பெருக்கெடுத்ததால் வீடு சென்று மகளுக்கு உதவி செய்ய முடியாமல் இருந்தது.

ஆற்றங்கரையில் நின்றுகொண்டு அம்மையார் தம்மகளின் நிலைமையை எண்ணித்தவித்தார். செய்வதறியாது திகைத்தார். அவர் கடவுளில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். தன் மனக்குறையைக் கடவுளிடம் ஒப்படைத்துவிட்டு மனத்தை ஆற்றிக்கொண்டார்.

அம்மையாரின் வீடு தனிமையான ஓர் இடத்தில் இருந்தது அக்கம் பக்கத்தில் வேறுயாரும் இல்லை. மகளுக்குப் பிரசவவேதனை அதிகரித்தது. உதவிக்கு ஒருவரும் இருக்கவில்லை. கோயிலுக்குச் சென்ற தாயார் திரும்பவில்லையே என்ற மனவேதனையும், உடல் வேதனையும் சேர்ந்து அவளைப் பெரிதும் வருத்தத்துக்குள்ளாக்கியது



அப்போது, மூதாட்டி ஒருத்தி அங்கு வந்தாள். அந்த மூதாட்டி முற்றுமுழுதாக அப்பெண்ணின் தாயைப்போலவே இருந்தாள்.

அவளின் பாதி வேதனை குறைந்துவிட்டது. இறைவனின் கருணையை நினைத்து வணங்கினாள். மகள் தாயே வந்துவிட்டதாக எண்ணி மகிழ்ந்தாள்.

அந்த மூதாட்டி, அப் பெண்ணுக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்தாள். பிரசவம் சுகமாக நடந்தேறியது. அதன் பின்பு தாய்க்கும் குழந்தைக்கும் செய்ய வேண்டிய சுத்திகள் யாவற்றையும் செய்தாள். அவர்களை வெந்நீரில் குளிக்க வைத்தாள். மருந்துகள் கொடுத்தாள். பத்தியமாக உணவு சமைத்துக் கொடுத்தாள். சடங்குகளையும் நிறைவேற்றி வைத்தாள். மூன்று நாட்களாக அந்த மூதாட்டி அவளுக்குத் துணையாக இருந்தாள்.

மகளுடைய காரியம் எப்படியோ என்று அம்மையார் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார். காவிரி ஆற்றுப்பெருக்கு மூன்று நாட்களில்

குறைந்ததைக் கண்டு வீட்டுக்குப் புறப்பட்டார். மிகுந்த ஆவலோடு வாயிலினுள் நுழைந்தார். அதுவரை மகளுக்குப் பெருந்துணையாக இருந்த மூதாட்டி திடீரென மறைந்து விட்டாள்.

அம்மையார் வீட்டிற்குள் வந்து மகளும் பேரக்குழந்தையும் சுகமாக இருப்பதைக்கண்டு பூரித்துப் போனார். அவர்களைக் கட்டித்தழுவிக்கொண்டு, "மகளே உனக்குப் பிரசவகாலத்தில் உதவி புரிந்தவர் யார்?" என்று ஆவலோடு கேட்டார். மகளுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. "அம்மா ஏன் இப்படிக் கேட்கின்றீர்கள்? நீங்கள் தானே எல்லாவற்றையும் இரவுபகலாகச் செய்தீர்கள். இப்பொழுது யார் துணை செய்தார் என்று கேட்கிறீர்கள்" என்று, சற்றுப் பதற்றத்துடன் கூறினாள்.

இவற்றைக் காது குளிரக்கேட்ட அம்மையார் இது நான் வணங்கும் சிவபெருமானின் செயல்தான். எம்பெருமான் இந்த ஏழைகள் மீது இத்துணை கருணை கொண்டுள்ளாரா? இறைவன் சகலசீவ தயாபரன் அல்லவா! கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பது முற்றும் உண்மை என்று எண்ணினார். "மகளே அந்தப் பரம்பொருள் சிவபெருமான்தான் உனக்கு வேண்டிய காலத்தில் தாயாக வந்து துணையாக இருந்தார். அதற்கு நீ எவ்வளவு தவம் செய்திருக்க வேண்டும்" என்று மூதாட்டி கூறி சிவபெருமானின் திருவருள் திறத்தைப் பலவாறாகப் புகழ்ந்து போற்றினார்.

அன்றுமுதல் திருச்சிராப்பள்ளிக் குன்றுடையானுக்குத் தாயுமானசுவாமி என்னும் திருநாமம் வழங்கிவருகின்றது. சிவபெருமான் எமக்குத் தந்தை மட்டுமல்ல தாயும் ஆனவர் என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

எனவே, நாமும் சிவனை அன்போடு வழிபட்டால் அவர் எமக்கு எந்த நேரமும் உதவிசெய்வார் என்பதை அறிவோம்.

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. மூதாட்டி செய்த இறைதொண்டு யாது?
2. மூதாட்டி வீட்டிற்குச் செல்லமுடியாமற் போனதற்கான காரணம் யாது?
3. மூதாட்டி தனது மனக்குறைகளை யாரிடம் முறையிட்டார்?
4. திருச்சிராப்பள்ளிக்குன்றுடைய இறைவன் தாயுமானவர் எனப் போற்றப்படக் காரணம் யாது?
5. இக்கதையினூடாக நீங்கள் பெற்றுக்கொண்ட படிப்பினைகளைக் குறிப்பிடுங்கள்.

**02. தரப்பட்ட சொற்களை வைத்துக் கீறிட்ட இடங்களை நிரப்புக.**

பூமாலை, மனக்குறைகளை, பக்தி, உயிர்கள், தாயுமான சுவாமி

1. இறைவன் ..............................மீது கருணை கொண்டவர்.
2. இறைவனைப்.......................... யுடன் வழிபட வேண்டும்.
3. மூதாட்டி ...............கட்டிக்கொண்டு சென்று இறைவனுக்குச் சாத்தி வணங்குவார்.
4. மூதாட்டி தனது ..................................இறைவனிடம் முறையிட்டார்.
5. திருச்சிராப்பள்ளிக் குன்றுடையானுக்குத்.............................. என்னும் திருநாமம் வழங்கி வருகின்றது.

## ௐ செயற்பாடு

* சிவபெருமான் உயிர்களுக்காக அருள் புரிந்த மற்றுமொரு கதையினைத்தேடிப் பெற்றுக் கூறுக.

## பாடச்சுருக்கம்

* கடவுள் ஒருவரே உண்மையானவர் என்பதைத் தாயுமானவர் கதையினூடாக அறியமுடியும்.

* இறைநம்பிக்கை கொண்டவர்களை இறைவன் ஒரு போதும் கைவிடமாட்டார்.

* இறைவன் துன்பம் வந்தபோதெல்லாம் எம்மைக் காப்பார்.

* இறைவன் தாயும் தந்தையும் ஆனவர்.


* இறை அன்பு உண்மையானது.


K&S 1233 F.N-2

# 2 பாடசாலையில் சைவம்


சமய, சமூக விழுமியங்களை மாணவர்களின் மனங்களில் உருவாக்கும் இடம் பாடசாலை ஆகும். எனவேதான் பாடசாலைகளில் சமய வழிபாடுகளும், ஒழுக்க விதிமுறைகளும் முக்கிய இடம் பெறுகின்றன.

மாணவர்கள் நாள் தோறும் காலையில் நீராடிச் சுத்தமான உடையணிந்து விபூதி தரித்து உரிய நேரத்திற்குப் பாடசாலைக்குச் செல்லுதல் வேண்டும்.



பாடசாலைச் சூழலைச் சுத்தம் செய்து அழகாக வைத்திருத்தல் சிறப்பானதாகும். பாடசாலையில் அழகு தரக்கூடிய பூந்தோட்டங்களை அமைத்து இரம்மியமான சூழலை ஏற்படுத்தல் நன்று.

காலைப்பிரார்த்தனை நடைபெறும் போது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும். பிரார்த்தனையின் போது தோத்திரப்பாடல்களைப் பண்ணுடனும், இசையுடனும் பொருள் உணர்ந்தும் மனமுருகி அனைவரும் பாடுதல் வேண்டும். பாடசாலையில் தோத்திரப்பாடல்களைப் பண்ணோடும், இசையோடும் பாடிப்பழகுவதால் கோயில்களிலும், இல்லங்களிலும், விசேட விழாக்களின் போதும் பாடுவதற்கு எம்மை நெறிப்படுத்தும். ஓதத் தொடங்க முன்பும் ஓதிய பின்பும் திருச்சிற்றம்பலம் எனச் சொல்லுதல் வேண்டும்.



சைவசமயிகளுக்கு வாரத்தில் வெள்ளிக்கிழமை முக்கியமான நாளாகும். அத்தினத்தில் பாடசாலைகளில் விசேடவழிபாடு நடாத்தப்படும். இவ்வழிபாடு நடைபெறுவதற்கு மாணவர்கள் பூக்களைக் கொண்டு

வந்து கொடுத்து உதவுவது சிறந்த பழக்கமாகும். வழிபாட்டில் மாணவர்கள் கூட்டுப் பிரார்த்தனையிலீடுபடுவதால் மனம் தூய்மை யடைகின்றது. தொடர்ந்து நடைபெறும் நற்சிந்தனைகளும் சொற்பொழிவுகளும் மன அமைதிக்கு வழிவகுக்கின்றது. அண்மையில் ஆலயங்களிருப்பின் அங்கு சென்று பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வதும் நல்ல பழக்கமாகும். பாடசாலை நடந்து கொண்டிருக்கும் போது அயலிலுள்ள ஆலயத்தின் பூசைமணி ஒலிப்பதைக் கேட்டால் அமைதியாக இறைவனை நினைத்தல் எமக்கு நன்மை தரும்.

ஒவ்வொரு வகுப்பிலும் தெய்வங்களினதும் சமய குரவர்களினதும் திருவுருவப்படங்களை வைத்துப் பூசித்தல் சிறப்பான பழக்கமாகும். கருத்துச் செறிந்த நற்சிந்தனைகள் அடங்கிய அட்டைகளைத் தொங்கவிடுதல், வகுப்பறைக் கரும்பலகையில் நீதி வாக்கியங்கள் திருக்குறள்கள் போன்றவற்றைத் தினசரி எழுதி வருதல் நல்ல எண்ணங்களையும் சிந்தனைகளையும் உருவாக்கும்.

நவராத்திரி காலத்தில் பாடசாலைகளில் கல்வித்தெய்வமான சரஸ்வதிக்குப் பூசை செய்து வழிபடுதல் சிறப்பம்சமாகும். இறுதிநாள் ஏடு தொடக்கல் நிகழ்வு நடைபெறும். அன்றைய தினம் விசேட ஆராதனைகள், கலைநிகழ்ச்சிகள் இடம் பெறும்.

பாடசாலையில் நால்வர் குருபூசைத் தினங்களையும் நினைவுகூர்ந்து வழிபாடாற்றுவதுடன், அவர்களின் செயற்கரிய செயல்களைச் சொற்பொழிவாகவோ, வில்லுப்பாட்டாகவோ அன்றி நாடகமாகவோ நிகழ்த்துவதும் சிறப்பானதாகும்.

பாடசாலையை அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், ஆகியோரின் ஒத்துழைப்புடன் சமயச் சூழல் மிகுந்ததாக உருவாக்க வேண்டும். சமயச் சூழல் நிறைந்த பாடசாலை இறைவன் குடிகொள்ளும் கோயிலாகும். இங்கு நாம் சமயச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வளம் பெறுவோம்.

## பயிற்சிகள்

1. பாடசாலையில் கொண்டாடப்படும் சைவசமய விழாக்கள் மூன்றினைத் தருக?

2. சைவநற்சிந்தனைகளையும், சமயச் சொற்பொழிவுகளையும் கேட்பதனால் அடையும் பயன்கள் மூன்று தருக?

3. "திருச்சிற்றம்பலம்" கூறப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக?

## ௐ செயற்பாடு

* பாடசாலையில் கடைப்பிடிக்கும் சைவப்பழக்க வழக்கங்கள் சிலவற்றைப் பட்டியற்படுத்துக.

* பாடசாலையில் நடைபெற்ற ஏடு தொடக்கல் நிகழ்வினை வரைந்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

* பாடசாலை சமய, சமூக விழுமியங்களைக் கற்றுத் தரும் இடம் ஆகும்.

* நவராத்திரி விழா, நால்வர் குருபூசைத்தினங்கள், சிறப்பாக நடைபெறுகின்றன.

* விசேட சமய விழாக்களின் போது சொற்பொழிவுகள் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

* சைவசமயப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவதனால் நன்மைகள் கிட்டும்.

* பாடசாலை ஒரு கோயிலாகும்.

# 3 பாடசாலை ஒழுங்கு

கல்வியும், ஒழுக்கமும் போதிக்கும் ஒரு நிலையமாகப் பாடசாலை விளங்குகின்றது. இங்கு நடைபெறும் செயற்பாடுகள் அனைத்தும் மாணவர்களின் வாழ்க்கையை வளம்படுத்துவனவாக அமைகின்றன. பாடசாலையில் ஒழுங்கைக் கடைப்பிடிக்கும் மாணவர்கள் வளர்ந்த பின்னரும் நல்ல பிரஜைகளாக வாழ முடியும். பாடசாலை ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பதனால் கிடைக்கும் நன்மைகள் பற்றிப் பின்வரும் உரையாடல் மூலம் கற்றுக் கொள்வோம்.

(பாடசாலை இடைவேளை மணி ஒலிக்கிறது
மதனும் சேந்தனும் உணவு உண்பதற்காக ஒன்று கூடுகின்றனர்).

சேந்தன் : மதன் ஐந்து திருக்குறள்களை எழுதி, காட்சிப் படுத்துவதற்குத் தயாராக இன்று வந்திருக்கிறீர். உமக்கு இந்த விடயம் எவ்வாறு தெரிந்தது?

மதன் : நீர் இன்று காலைக் கூட்டத்திற்கு வரவில்லையா?

சேந்தன் : ஆம், நான் இன்றும் பிந்தித்தான் வந்தேன்.

மதன் : இன்று காலைக்கூட்டத்தில் அதிபர் நல்ல விடயங்கள் பலவற்றைக்கூறினார் அறிவுறுத்தல்களையும் வழங்கினார்.

சேந்தன் : வேறு என்ன விடயங்கள் நடைபெற்றன?

மதன் : உனக்குத் தெரியாதா? காலையில் வகுப்பறையைச் சுத்தம் செய்வோம், பின்பு காலைப் பிரார்த்தனையில் ஈடுபடுவோம். அதனைத் தொடர்ந்து ஓர் ஆசிரியர் நற்சிந்தனை கூறுவார். அதில் மாணவர்களாகிய எமக்குத் தேவையான நல்ல பல விடயங்கள் இடம் பெறும். அதிபர் சில முக்கியமான அறிவித்தல்களையும் கூறுவார்.

சேந்தன் : அப்படியா? நான் நேரம் பிந்தி வருவதனால் நல்ல விடயங்கள் பலவற்றை இழக்கின்றேன். இனிமேல் நேரந்தவறாது பாடசாலைக்கு வருகின்ற பழக்கத்தை நான் கடைப்பிடிப்பேன்.

மதன் : அது நல்ல விடயந்தான் சேந்தன். அது மட்டுமல்ல பாடசாலையின் ஒழுங்கு விதிகளுக்கும் நாம் மதிப்பளிக்க வேண்டும்.

சேந்தன் : பாடசாலைக்கு நேரந்தவறாது வருதல் ஒரு ஒழுக்க விதி. இவை தவிர வேறு ஒழுங்கு விதிகள்...........

மதன் : ஆம். இருக்கின்றன.

சேந்தன் : அவற்றைக் கொஞ்சம் விரிவாகச் சொல்லும்.

மதன் : வகுப்பறைக்கு ஆசிரியர் வரும்போது நாம் அனைவரும் எழுந்து நின்று வணக்கம் செலுத்துதல் வேண்டும். அதிபர், ஆசிரியர் சொற்களுக்குப் பணிந்து நடத்தல் வேண்டும்.

சேந்தன் : "மதன், உமக்குத் தெரியாதா?" வகுப்பறைக்கு ஆசிரியர் வருகை தரும்போது சில பிள்ளைகள் எழுந்து வணக்கம் செலுத்துவதில்லை.

மதன் : அவர்கள் அவ்வாறு செய்தாலும், அவர்களையும் எழுந்து ஆசிரியருக்கு வணக்கம் செலுத்த நாம் வழிப்படுத்த வேண்டும்.

சேந்தன் : அதுமட்டுமல்ல. நாங்கள் மாணவர் தலைவர்களுக்கும் வகுப்புத் தலைவர்களுக்கும் மதிப்பளிப்பதோடு சக மாணவர்களுடனும் அன்பாகப் பழகுதல் வேண்டும்.

மதன் : நல்லது சேந்தன். இன்னுமொரு விடயத்தையும் மறந்து

விட்டோம். அதிபர், ஆசிரியர்களுக்கு அடுத்தாற் போல் இங்கு வேலை செய்யும் ஊழியர்களுக்கும் நாம் மதிப்பளிக்க வேண்டும்.

சேந்தன் : பாடசாலை ஊழியர்கள் பாடசாலை மீது மிகுந்த பற்றுள்ளவர்கள். எங்களை மாத்திரமல்ல, பாடசாலைப் பொருட்களையும் அக்கறையுடன் பாதுகாக்கின்றனர். ஆகவே, அவர்களுக்கு மதிப்பளிப்பதும் பாடசாலை ஒழுக்க விதிகளுக்குள் அமைகிறதல்லவா?

மதன் : இன்று நேரம் போனதே தெரியவில்லை.

சேந்தன் : ஆம். நல்ல விடயங்கள் பலவற்றை இன்று நாம் கலந்துரையாடினோம். வாருங்கள் வகுப்பறைக்குச் செல்வோம்.

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.**

1. பாடசாலை ஆரம்பமானவுடன் நடைபெறும் முக்கிய நிகழ்வுகள் இரண்டினைத் தருக.
2. திருக்குறளை எழுத வேண்டும் என்பதனை மதன் எவ்வாறு அறிந்து கொண்டான்?
3. நாம் பாடசாலையில் கடைப்பிடிக்கும் ஒழுங்குகள் மூன்றினை எழுதுக?

## ௐ செயற்பாடு

1. பாடசாலையில் ஆசிரியர்கள் காலைக் கூட்டத்தில் கூறும் நற்சிந்தனைகள் பத்தினைத் தொகுத்து எழுதுக.

2. பாடசாலை ஒழுங்கு தொடர்பான செயற்பாடுகளில் ஒன்றினைத் தெரிவு செய்து அதனை உரையாடல் வடிவில் தருக.

## பாடச்சுருக்கம்

* ஒழுக்கவிதிகளுள் நேரந்தவறாமை மிகமுக்கியமானது.

* காலைக் கூட்டத்திலும், பிரார்த்தனையிலும் கட்டாயம் கலந்து கொள்ளுதல் வேண்டும்.

* அதிபர், ஆசிரியர், ஊழியர்கள், சகமாணவர்கள் ஆகியோருக்கு மதிப்பளித்தல் நற்பண்பாகும்.

* பாடசாலையில் நாம் கற்றுக் கொள்ளும் ஒழுக்கங்கள் எம்மை நற்பிரசையாக வாழ வழிவகுக்கும்.

# 4 வாழ்வியல் நற்பண்புகள்

மனித வாழ்வை வளம்படுத்துவதற்காக கைக்கொள்ளத்தக்க பெறுமதிமிக்க நற்பண்புகள் பல உள்ளன. தமக்கும் பிறருக்கும் தீங்கில்லாதவாறு உள்ளத்தாலும் நடத்தையாலும் ஒழுகுதலே நற்பண்புகளாகும். பிறர்நலம் பேணுதல், பணிவு, மன்னிப்பு, நீதி, நேர்மை, பஞ்சமாபாதகங்களைத் தவிர்த்தல், சகோதரத்துவம், பொறுமை போன்றவைகள் சிறப்பான வாழ்வியல் நற்பண்புகளாகக் கருதப்படுகின்றன. எனவே, நாம் இங்கே பிறர்நலம் பேணும் கதையொன்றினை அறிந்து கொள்வோம்.

## (அ) பிறர்நலம் பேணுதல்

முன்னொரு காலத்திலே சிபி என்னும் அரசன் நீதி தவறாது ஆட்சி புரிந்து வந்தான். உதவி கேட்டுத் தன்னை நாடுபவர்களுக்கு வேண்டிய உதவிகளை அளித்து உபசரிக்கும் பண்பு கொண்டவன். தன்னிடம் அடைக்கலம் என்று அடைந்தவர்களை எவ்வாறாயினும் காப்பாற்றும் சிறந்த குணம் படைத்தவன். அதனால் அவனுடைய புகழ் எங்கும் பரவியது.

ஒருநாள் சிபிச்சக்கரவர்த்தியின் இச் சிறந்த குணத்தைச் சோதிக்க இயமனும் இந்திரனும் விரும்பினர். இயமன் ஒரு புறாவாகவும் இந்திரன் ஒரு பருந்தாகவும் உருமாறினார்கள். அதன் பின்னர் பருந்து புறாவைத் துரத்துவதுபோல் விரட்டிக்கொண்டு வந்தது. அவ்வாறு துரத்தப்பட்டு வந்த புறா சிபிச்சக்கரவர்த்தியின் மடியில் பதறியபடி விழுந்தது. "என்னைக் காப்பாற்றுங்கள் எனக்கு அபயம் அளியுங்கள்" என அவலக்குரல் எழுப்பியது.

மடியில் விழுந்த புறாவை மன்னன் தடவி "பயப்பட வேண்டாம்" என ஆறுதலளித்தான். அப்போது அங்கு வந்த பருந்து அவனை நோக்கி "சக்கரவர்த்தியே அந்தப் புறாவை நான் உண்பதற்காகவே துரத்தி வந்தேன். அது என்னுடைய வேட்டைப் பொருள். அதனை என்னிடம் ஒப்படைத்து விடுங்கள்"என்று கேட்டது.

அதற்குச் சிபி "இப் புறா என்னிடம் தஞ்சம் புகுந்துள்ளது. நானும் அதனைக் காப்பாற்றுவதாக உறுதி அளித்துள்ளேன். எனவே அதனைத் தர முடியாது" என்று மறுத்து விட்டான்.

அதற்குப் பருந்து "நேர்மை மிக்க மன்னனே! என் உணவைப் பறித்துக்கொண்டு என்னைப் பசியால் வாடவைப்பது முறையா?" என்று கேட்டது.

அவ்வார்த்தையைக் கேட்ட அரசன் "அப்படியானால் உன் பசியைப்போக்க உனக்கு நான் வேறு உணவு தருகின்றேன். அதை ஏற்றுக்கொண்டு இப் புறாவை விட்டுவிடு" என்றான். அதனைக் கேட்ட பருந்து எனக்கு வேறு உணவு வேண்டாம். நான் வேட்டையாடிய புறாவின் இறைச்சி தான் வேண்டும். அவ்வாறு இல்லாவிடில், இப் புறாவின் எடைக்குச் சமமான இறைச்சியை உனது உடலிலிருந்து வெட்டிக்கொடு. அதனை ஏற்றுக்கொண்டு இப்புறாவை விட்டுவிடுகின்றேன் என்றது.

அடைக்கலம் கொடுத்த புறாவைக் காப்பாற்ற ஒருவழி கிடைத்து விட்டதேயென மகிழ்ந்த மன்னன் பருந்தை நோக்கி "அவ்வாறே செய்கின்றேன்" என்றான். பின்பு அவன் ஒரு தராசைக் கொண்டு வரச் செய்து அதன் ஒரு தட்டில் அப் புறாவை வைத்தான். பின்பு மற்றொரு தட்டிலே தன் தொடையிலிருந்து தசையை வெட்டி வைக்க ஆயத்தமானான்.

அங்கு நின்ற அமைச்சர்கள் அதனைத் தடுத்து நிறுத்த முயன்றார்கள். ஆனால் அது பலனளிக்கவில்லை. அரசன் "நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றக் கடமைப்பட்டவன். எனவே நீங்கள் இதில் தலையிட்டு வீணாக என் பெயருக்கு இழுக்கு ஏற்படுத்தாதீர்கள்". என்று கூறிவிட்டான்.

அரசன் தனது தொடையிலிருந்து தசையை வெட்டித் தட்டில் வைத்தான். புறாவின் தட்டு சற்றும் உயராமல் தாழ்ந்தே இருந்தது. பின்னர் மன்னன் தனது மற்றைய தொடையிலிருந்தும் தசையை வெட்டி வைத்தான். அப்பொழுதும் புறா இருந்த தட்டு மேலே உயரவில்லை.

இறுதியில் அரசன் தசைத்துண்டங்கள் வைத்த தட்டிலே தானே ஏறி நின்றான். அப்பொழுது தான் புறாவின் தட்டு மேல் உயர, தட்டுகள் சமனாக நின்றன. அரசன் அப்பொழுது "என்னையே நீ உணவாக உட்கொள்" என்றான்.



ஒரு சிறிய பறவைக்காக தன்னுடம்பையே கொடுக்க ஆயத்தமாக இருந்த மன்னனின் பெருமை கண்டு பருந்தாக வந்த இந்திரனும், புறாவாக வந்த இயமனும் மட்டில்லாத மகிழ்சியடைந்தனர். அவர்கள் தங்களுடைய உண்மையான உருவத்தை அரசனுக்குக் காண்பித்து, அறுக்கப்பட்ட அரசனது உடம்பைத் தங்கள் அருளால் முன்பைக் காட்டிலும் அழகுற விளங்குமாறு செய்து, அவனை வாழ்த்தி மறைந்தனர்.

"பிறர் நலம் பேணி நற்பண்புள்ளவர்களாக வாழ்வோம்"

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. சிபிச்சக்கரவர்த்தி கொண்டிருந்த நற்பண்புகள் எவை?
2. சிபியின் செயலை அமைச்சர்கள் தடுத்து நிறுத்த முயன்றது ஏன்?
3. வாழ்வியல் நற்பண்புகள் சிலவற்றைப்பட்டியற் படுத்துக?
4. பருந்தினால் துரத்தப்பட்ட புறா என்ன செய்தது?
5. இக் கதையினூடாக நீர் பெறும் படிப்பினை யாது?

**02. பொருத்தமான சொற்களை வைத்துக் கீறிட்ட இடங்களை நிரப்புக.**

சிபி, புறா, பருந்து, அடைக்கலம், தொடை

1. .....................................புகுந்த புறாவைக் காப்பாற்ற வழி கிடைத்ததையிட்டு மன்னன் மகிழ்ந்தான்.
2. பருந்தினால் துரத்தப்பட்ட .............................. சிபியின் மடியில் பதறி விழுந்தது.
3. .................................. சிபியை நோக்கி அந்தப் புறாவை உண்பதற்காகவே வந்தேன் என்றது.
4. பிறர் நலம் பேணுவதில் சிறப்புடையவன்...........................
5. சிபிச்சக்கரவர்த்தி தனது .................................யிலிருந்து ஒரு துண்டுத் தசையை வெட்டித் தராசில் வைத்தார்.

## செயற்பாடு

- நீங்கள் பிறருக்கு உதவிய சந்தர்ப்பங்கள் இரண்டினை எழுதிக் காட்சிப் படுத்துக.
- தன்னைப்போல் பிறரையும் நேசி என்பதற்கு ஏற்ப நீங்கள் நடந்து கொண்ட சந்தர்ப்பங்கள் இரண்டினை எழுதுக.
- வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் நற்பண்புகள் மூன்றினை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

* நாம் பிறர் நலம் பேணி வாழப் பழக வேண்டும்.
* ஆபத்தான வேளையில் பிறருக்கு உதவுதல் நல்ல பண்பாகும்.
* பிறருக்கு உதவுவோர்க்கு இறைவன் கருணை காட்டுவார்.
* நற் பண்புகளைக் கடைப்பிடித்து வாழ்வில் நல்லவர்களாக வாழ்வோம்.

## (ஆ) நல்லவற்றைக் கடைப்பிடித்தல்

எமது வாழ்வைக் காக்கும் அறங்களை இளமையில் இருந்தே மேற்கொள்ளப்பழகுதல் வேண்டும். எம்மை விட வயதில் மூத்தோர்களிடமும், ஆசிரியர்களிடமும், பெற்றோரிடமும், மேலதிகாரிகளிடமும் பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும். பணிவு எம்மை ஒரு போதும் தாழ்த்தி விடாது. பணிவுள்ளவர்கள்தான் பண்புள்ளவர்களாகவும் உருவாக முடியும். இதை நாம் சிறு வயது முதல் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு வாழும் போது தான் நாம் நல்லவர்களாக முடியும்.

நற்செயல்கள் எனக் கூறத்தக்க பணிவு, மன்னிப்பு, நீதி, நேர்மை, போன்ற பண்புகளை வளர்ப்பதில் சமூகச் சூழலின் பங்கு குறிப்பிடத்தக்கது. சமூகச்சூழல் நன்றாக அமையும் போது எம்மிடம் நற்பண்புகள், நல்ல பழக்கவழக்கங்கள் உருவாகின்றன. இவற்றினடிப்படையில் எமது மனதில் நல்ல எண்ணங்கள் எழுகின்றன. அறிவாற்றலிலும், நற்பண்புகளிலும் சிறந்தவர்களை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகும் போது நல்லவற்றை நாமும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற மனப்பாங்கு விருத்தியடைகின்றது. நமது வாழ்விற்கு வழிகாட்டியாக, உயர்ந்த நிலையை அடைவதற்கு உதவியாக இருந்த பெரியோர்களிடம் பணிவு, அடக்கம், பயபக்தி, கட்டுப்பாடு உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். மேலும், அவர்களின் நற்போதனைகளக் கடைப்பிடித்து ஒழுகுதலும் இன்றியமையாததாகும்.

மன்னிப்பு எனும் பண்பை எடுத்து நோக்குமிடத்து எம்மிடம் இருக்க வேண்டிய உயர்ந்த பண்பாகும். இறைவன் எம்மீது கருணை உள்ளவர். மன்னிக்கும் இயல்பும் உள்ளவர். ஆதலால் தான் தானிருக்கும் கைலாய மலையையே இராவணன் பெயர்க்க முன்வந்த வேளையிலும் கூட அவனது சாமகானத்தில் மயங்கிய நிலையிலே அவனை மன்னித்தார். எனவே நாம் கடவுளை மதிக்க வேண்டும்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

என்கிறது திருக்குறள். மன்னிப்பதென்பதும், மறப்பதென்பதும் மனிதனின் இயல்பாக இருக்கவேண்டும்.

அவசியமற்றவைகளை, தீமையானவைகளை உடன் மறந்து விடுதலும் மன்னிக்கக்கூடியவர்களுக்கு மன்னிப்பு வழங்குதலும் உயர் மானிடப் பண்புகளாம்.

எந்தக் கடமையைச் செய்யும் பொழுதும் நீதியுடன் செய்ய வேண்டியது சைவ சமயத்தவரின் கடமையாகும். கடவுள் துணையுடன் நீதியாகச் செய்யப்படும் கடமைக்கு உண்மையான பலன் கிடைக்கும் என்பது சைவ மக்களின் நம்பிக்கை. மனுநீதிகண்ட சோழனின் கதை எமக்கு நீதி தவறாமையை உணர்த்துகிறது. நீதியுடன் தன் கடமையைச் செய்த மனுநீதி கண்ட சோழன் தன் செயலால் இறையருளைப் பெறும் வாய்ப்பினைப் பெற்றான் என்பது வரலாறு.

வாழ்வில் நாம் எந்தக்காரியத்தைச் செய்யும் போதும் நேர்மையினின்று தவறாது பாரபட்சமின்றிச் செயற்படல் வேண்டும். நாம் செய்கின்ற ஒவ்வொரு செயல்களையும் இறைவன் பார்த்துக்கொண்டுதானிருக்கிறான். ஆதலால் நாம் பயபக்தியுடனும் நேர்மையுடனும் நடப்பதால் எமது வாழ்வு வளம் பெறும். மகிழ்வாக வாழ்வோம்.

மேலும், எமது வாழ்வு புனிதமானதாக அமைவதற்கு எமது முன்னோர் கூறிய அறிவுரைகளின்படி ஒழுகுவது அவசியம். பாதகமான விளைவுகளைத் தரும் செயல்களை நாம் செய்யக்கூடாது. ஏனைய உயிர்களை வருத்தாது எமது வாழ்வை நடத்த நாம் பழகவேண்டும். பிற உயிர்களை வருத்தாமல் இருப்பதற்காகப் பஞ்சமாபாதகங்கள் எனும் ஐந்து தீய செயல்களையும் விலக்க வேண்டும் என எம் முன்னோர் அறிவுறுத்தியுள்ளனர். கொலை, களவு, பொய், கள்ளுண்ணல், காமம் என்பன அப் பஞ்சமாபாதகங்களாகும். பிற உயிர்களைக் கொல்லாமலும் பிறரது பொருள் மேல் ஆசைப்படாமலும் இகழ்ச்சியாகப் பேசாமலும் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். இவை நல்ல பழக்கங்கள் ஆகும்.

சைவம் போற்றும் உயர் பண்புள்ளவர்களாக நாம் வாழ்வது எமக்கு எப்போதும் சிறப்புடையதாக அமையும். எனவே சைவம்

கூறும் நல்லவற்றை வாழ்வில் கடைப்பிடித்து பணிவு, மன்னிப்பு, நீதி, நேர்மையுடையவர்களாக பஞ்சமாபாதகங்களைத் தவிர்த்து வாழ்பவர்களாக வாழ்வோம்.

"மேன்மைகொள் சைவநீதி உலகெல்லாம் பரவும்
வகையில் வாழ்ந்து காட்டுவோம்"

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.**

1. பஞ்சமாபாதகங்கள் எவை?
2. மனுநீதி தவறாது தன்கடமை செய்த அரசன் யார்?
3. நல்லவைகள் எனக்கூறத்தக்க பண்புகள் மூன்று தருக?
4. இன்னா செய்தாரை ஒறுத்தல் எனத் தொடங்கும் அடி எந்த நூலில் இடம் பெறுகிறது?

**02. பின்வரும் சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக**

பணிந்து, மூத்தோர்களிடம், அறங்களை, சைவம், பழக்க வழக்கங்கள், பயபக்தி

1. எம்மை விட வயதிற்கு .......................... பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும்.
2. சமூகச்சூழல் நன்றாக அமையும் போது பிள்ளைகளிடம் நல்ல .............................. ஏற்படுகின்றன.
3. எமது வாழ்வைக் காக்கும் ...................... இளமையில் இருந்தே மேற்கொள்ளப் பழகுதல் வேண்டும்.


K&S 1233 F.N-3

4. நாம் ......................... நடப்பதால் தான் பெருமையுடையவர்களாக முடியும்.

5. ............................. போற்றும் உயர் பண்புள்ளவர்களாக நாம் வாழ்தல் வேண்டும்.

## ॐ செயற்பாடு

* வகுப்பறையில் நீங்கள் தவறு செய்த உங்கள் நண்பர்களை மன்னித்த சந்தர்ப்பங்கள் இரண்டு தருக?

* நீதியுடன் தன் கடமையைச் செய்த மனுநீதிகண்ட சோழனுடைய கதையைத் தேடி அறிக. அதன் சுருக்கத்தை வகுப்பறையில் பேசிக்காட்டுக?

## பாடச்சுருக்கம்

* நாம் பெற்றோர், குரு (ஆசிரியர்) வயதில் மூத்தோருடன் பணிவாக நடத்தல் வேண்டும்.

* மன்னிப்பு, நீதி, நேர்மை போன்ற பண்புகளை வளர்ப்பதில் சமூகச் சூழல் முக்கியம் வகிக்கிறது.

* மன்னிக்கும் பண்பு உயர்வானது.

* பஞ்சமாபாதகச் செயல்களினின்று விடுபட்டு நல்லவர்களாக வாழ்வோம்.

* நல்ல அறங்களே எமது வாழ்வை மேம்படுத்துகின்றன.

## (இ) சகோதரத்துவம்


இன்றைய உலகில் மனிதனிடமே பகைமை, எதிர்ப்பு, பொறாமை என்பன மிகத் தீவிரமாகக் காணப்படுகின்றன. மனிதனுக்கு மனிதன் அடித்துக் கொள்கின்றான். தினமும் மரணிக்கின்றான். இவைகளை விடுத்து நாம் எப்போதும் சண்டை சச்சரவுகளின்றி அனைவரிடமும் சகோதரத்துவத்துடன் பழகிக் கொள்வோமானால் தூய உலகத்தைக் கட்டியெழுப்பலாம். இந்தப் பக்குவத்தை ஆரம்பத்தில் இருந்து குடும்பத்தின் மூலம் வளர்த்துக் கொள்ள வேண்டும். பாடசாலையும் இதற்குச் சிறந்த களமாக அமைகிறது.

ஓர் ஊரிலே ஜனார்த்தனன் என்ற சிறுவன் ஒருவன் இருந்தான். சிறுவயது முதலே சிவபெருமானிடம் அதிக பக்தி கொண்ட இவன் தினமும் ஆலயங்களுக்குச் சென்று இறைவனை வழிபடுவான். வீட்டிலும், பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பான். நூலகங்களில் நல்ல அறிவு தரும் நூல்களைத் தேடிப் படிப்பான். தனது வகுப்பறையில் எல்லா மாணவர்களிடமும் சகோதரத்துவத்துடன் பழகும் ஜனார்த்தனன்மீது பாடசாலையில் உள்ள சகல ஆசிரியர்களும் விருப்பம் உடையவர்களாக இருந்தார்கள். இதைக் கண்ட அவன் வகுப்பில் உள்ள கிருபா என்ற மாணவன் இவன் மேல் பொறாமை கொண்டான்.

ஒருநாள் பாடசாலை மட்டங்களுக்கான விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. முப்பதுக்கும் மேற்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் பாடசாலைகள் இதில் பங்கேற்றன. விளையாட்டுப் போட்டி மிக விறுவிறுப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. சகல பாடசாலை மாணவர்களும் தங்கள் பாடசாலை வெற்றிபெற வேண்டுமென்ற எதிர்பார்ப்பில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஓட்டப் போட்டி ஆரம்பமாகியது. இதில் இறுதிச்சுற்றுக்கு ஜனார்த்தனன், கிருபா ஆகிய இருவருமே தங்கள் பாடசாலையில் இருந்து தெரிவாகி இருந்தார்கள். ஏனைய நால்வரும் ஏனைய பாடசாலை மாணவர்கள். போட்டி ஆரம்பமாவதற்குச் சற்று முன் அனைவரும் தங்கள் தங்கள் பாடசாலை மாணவர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

'குளுக்கோசை' எடுத்த ஜனார்த்தனன் தன் சக நண்பனான கிருபாவுக்குக் கொடுத்து தானும் உண்ட பின் ஏனைய சக போட்டியாளர்களுக்கும் கொடுக்கலானான். இதைக் கண்ட கிருபா முணு முணுத்தான். ஜனார்த்தனனின் இச் செயலைப்பார்த்த ஏனைய பாடசாலை ஆசிரியர்கள் சந்தோசப்பட்டார்கள்.

போட்டி ஆரம்பமாகியது. போட்டியாளர்கள் ஓடுகின்றார்கள். இறுதியில் ஜனார்த்தனன் வெற்றிபெறத் தவறுகின்றான். ஆனால், கிருபா முதலாம் இடத்தைத் தட்டிக் கொண்டான். எவ்விதமான அழுக்காறுமின்றி வெற்றி பெற்றோரைக் கைகுலுக்கிப் பாராட்டிய ஜனார்த்தனன் அவ்விடத்தை விட்டுச் செல்லலானான். ஆனால், இவனைச்சூற்றி ஏனைய பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் குழுமிவிட்டார்கள். இவனது செயலை மெச்சி இவனைப் பாராட்டினார்கள்.



கிருபாவுக்கோ சரியான கோபம். வெற்றிபெற்ற தன்னைவிட ஜனார்த்தனனை எல்லோரும் பாராட்டுவதைக் கண்டு மனதுக்குள்ளேயே பொறாமைப்பட்டான். ஜனார்த்தனன் அருகில் சென்று "வெற்றி பெற்ற என்னை விடுத்து உன்னை எல்லோரும் பாராட்டுகிறார்களே! இது நியாயமோ?" என்று வினவினான்.

இதைக் கேட்ட ஜனார்த்தனன் புன்னகைத்து விட்டு, கிருபாவின் தோள்பட்டையில் தனது கரத்தை அன்புடன் வைத்தவாறே " நாம் எப்போதும் ஏனையவர்களிடம் அன்பாகவும், நட்பாகவும் சகோதரத்துவத்துடனும் பழக வேண்டும். தோத்திரப் பாடல்கள் பாடிய பின்பு இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க! என்று இதற்காகவே கூறுகின்றோம். நமது சமயத்தினூடாக மனிதத்துவம், சகோதரத்துவம், நட்பு, சகிப்புத் தன்மை, ஏனைய மதத்தவர்களையும், சமூகத்தவர்களையும் மதிக்கும் மனப்பாங்கை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். இதனூடாகச் சிறந்த ஒழுக்க நெறியைக் கடைப்பிடிக்க முடியும். இவ்வுலகில் மனிதத் தன்மையை இழந்து எந்த மனிதனாலும் எதையும் சாதித்துவிட முடியாது." என்றான். இதைக் கேட்ட கிருபா அனைத்தும் தெளிவடைந்தவன் போல் ஜனார்த்தனனின் இதயத்தில் குடிகொண்டுள்ள அன்பும், அதன்பால் வெளியாகிய சகோதரத்துவத்தையும் எண்ணி அவனுக்கு நன்றி கூறி விடைபெற்றுச் சென்றான்.

"அன்பே சிவம்"

## பயிற்சிகள்

**01.பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சகோதரத்துவத்தை வளர்க்கும் குடும்பம் சாராத வேறொரு நிறுவனத்தின் பெயரை எழுதுக?
2. நமது சமயத்தினூடாக நாம் எதை வளர்த்துக் கொள்ள வேண்டும்?
3. ஜனார்த்தனனிடம் காணப்பட்ட சிறந்த பண்புகள் என்ன?
4. சகோதரத்துவத்துடன் வாழ்வதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

**02. பின்வருவன சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடைப்புக்குறிக்குள் அடையாளமிடுக.**

1. சகோதரத்துவத்துடன் வாழ்தல் சிறப்பான பண்பாகும்( )
2. ஜனார்த்தனன் தீய குணம் கொண்டவன். ( )
3. இவ்வுலகில் மனிதத்தன்மையை இழந்து எந்த மனிதனும் எதையும் சாதிக்கலாம். ( )
4. எமது சமயத்தினூடாக மனிதத்துவம், சகோதரத்துவம், நட்பு, சகிப்புத் தன்மை என்பவற்றை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். ( )

## ॐ செயற்பாடு

1. சகோதரத்துவத்தை நம்மில் வளர்ப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகளைப் பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுக.

2. சகோதரத்துவத்துடன் வாழ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் ஒரு துண்டுப் பிரசுரத்தை எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

3. பிற சமயத் தலைவர்கள் அல்லது ஆசிரியர்களை உங்கள் வகுப்பறைக்கு அழைத்து சிறு சொற்பொழிவு ஆற்ற ஆசிரியரின் உதவியை மேற்கொள்க.

## பாடச்சுருக்கம்

* சகோதரத்துவத்தை வளர்க்க குடும்பம், பாடசாலை ஆலயங்கள், போன்றவை முக்கிய பங்கு வகிக்கின்றன.

* சமயத்தினூடாகச் சகோதரத்துவம் வளர்க்கப்படுகின்றது.

* சகோதரத்துவத்துடன் பழகும் போது எல்லோரும் நண்பர்கள் ஆகின்றார்கள்.

* இதனால் பொறாமை போன்றவை நம் மனதை விட்டு அகன்று செல்கின்றது.

## (ஈ) பொறுமை

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற குறள் தரும் கருத்துப்படி நாம் உலகத்திலே வாழ்வதற்கேற்ற ஒழுங்குமுறைப்படி வாழப்பழகுதல் வேண்டும். இதில் பொறுமையைக் கடைப்பிடித்தல் வாழ்வில் மிக முக்கியமானதாகும். பொறுமையுடன் செயற்பட்டவர்களுக்கு அதில் வெற்றியும், உயர்ந்த வாழ்வும் கிடைக்கின்றது.

சைவர்களாகிய நாம் நம்முடைய மனத்தைப் பொறுமையின் பக்கம் நிலை நிறுத்தி வைக்க வேண்டும். மனமென்பது சில சமயங்களில் அவசர முடிவெடுக்கக் கூடியது. எந்தெந்த நேரத்தில் அவசரமுடிவெடுக்க மனம் தூண்டுகின்றதோ அந்தந்த இடத்தில் நாம் பொறுமையைக் கடைப்பிடிப்பது முக்கியமாகும். பொறுமையில் நிலைத்தவர் சகலதிலும் வெற்றி பெறுவார். நற்போகங்களை அனுபவிப்பர். பொறுமை என்னும் உத்தமபண்புடைய கிரிசாம்பாள் கதையை நாம் இப்போது படித்துப் பயன் பெறுவோம்.

பல வருடங்களுக்குமுன் ஒரு நாட்டில் மிகப் பெரும் பஞ்சம் உண்டானது. இதனால் அங்கு வாழ்ந்த மக்கள் எல்லோரும் பட்டினியால் வாடினார்கள். சிறியவர்கள் எல்லாம் மிகவும் துன்பமான வாழ்வைச் சந்தித்தார்கள். இதே நேரம் அந்த நாட்டில் ஒரு செல்வந்தப் பிரபுவும் வாழ்ந்து வந்தார். இவர் ஏழைகளிடத்தே மிகவும் இரக்ககுணம் உடையவர். அதனால் பட்டினியால் துன்பமடையும் சிறுபிள்ளைகளின் மேல் கருணை கொண்டார். இவர்கள் கஷ்டமடைவதைக் கண்டு மனம் உருகினார்.

ஒருநாள் சிறுவர்கள் அனைவரையும் தன்னுடைய இல்லத்துக்கு அழைத்தார். தனது சேவகர்களை அழைத்து அனைவருக்கும் ஒவ்வொரு மோதகம் கொடுக்கும் படி கட்டளையிட்டார். சேவகர்களும் பிரபுவின் கட்டளைக்கிணங்க ஒரு கூடையில் மோதகங்களைக் கொண்டு வந்து அவர்கள் முன் வைத்தார்கள். "பஞ்சம் முடியும் வரை நீங்கள்

இங்கே வாருங்கள், நான் உங்களுக்கு மோதகம் தந்து உங்கள் பசியைப் போக்குகின்றேன்'' என்றார் பிரபு.

பட்டினியால் வேதனைப்பட்ட பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒருவருடன் ஒருவர் இடிபட்டுப் பெரிய மோதகங்களை எடுக்க முண்டியடித்தார்கள். இவ்வாறு சகல பிள்ளைகளும் பெரிய மோதகங்களை எடுத்துக் கொண்டு பிரபுவிற்கு நன்றி சொல்லாமல் கூட ஓடினார்கள். ஆனால் கிரிசாம்பாள் என்னும் சிறுமி மட்டும் இறுதிவரை பொறுமையுடன் தனியே நின்றாள். அனைவரும் பெரிய மோதகங்களை எடுத்துக் கொண்டு சென்ற பின்பு எஞ்சியிருந்த சிறிய மோதகத்தை எடுத்துக் கொண்டு பிரபுவின் அருகில் சென்று அவருக்கு நன்றி கூறிச் சென்றாள்.

இவ்வாறு ஒவ்வொரு நாளும் கழிந்தன. தினமும் பொறுமையுடன் கடைசி மட்டும் காத்திருக்கும் கிரிசாம்பாளுக்கு சிறிய மோதகமே கிடைத்தது. இந்த சம்பவத்தைத் தொடர்ந்து அவதானித்து வந்த பிரபுவிற்கு அவள் மேல் இரக்கம் உண்டாயிற்று. கிரிசாம்பாளின் பொறுமையைக் கண்டு அவர் வியந்தார்.

ஒரு நாள் வழக்கம் போல் அனைத்துச் சிறுவர்களும் முண்டியடித்துப் பெரிய மோதகத்தை எடுத்துச் சென்ற பின்பு எஞ்சிய சிறிய மோதகத்தைக் கிரிசாம்பாள் எடுத்தாள். அதைக் கொண்டு போய்த் தன்னுடைய தாயிடம் கொடுத்தாள். தாய் அந்தச் சிறிய மோதகத்தைப் பிரித்த போது அதற்குள் இருந்து ஒரு பொற்காசு கீழே விழுந்தது. இருவரும் வியந்தார்கள். பின்பு, கிரிசாம்பாள் அந்தப் பொற்காசைக் கொண்டு போய்ப் பிரபுவிடம் கொடுத்தாள். பிரபுவும் அதை வாங்கிப் பார்த்தார். பின்பு தலையை அசைத்து விட்டு "மகளே நான் இப் பணத்தை உனது பொறுமைக்குப் பரிசாகக் கொடுத்தேன் நீயே அதை வைத்திரு". என்றார். கிரிசாம்பாளுக்கு மிக்க மகிழ்ச்சி. அப் பணத்தைத் தன் தாயிடம் கொண்டு வந்து கொடுத்தாள்.

"பொறுத்தார் பூமி ஆள்வார்"

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. எந்தெந்த நேரத்தில் நாம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்?
2. பிரபு சிறுவர்களிடத்தே ஏன் இரக்கம் கொண்டார்?
3. யாருக்கு சிறிய மோதகம் கிடைத்தது?
4. கிரிசாம்பாளுக்குத் தொடர்ந்தும் சிறிய மோதகமே கிடைத்ததற்கான காரணம் என்ன?
5. பொறுமையைக் கடைப்பிடித்ததற்காகக் கிரிசாம்பாளுக்குக் கிடைத்த பரிசு என்ன?

**02. பின்வரும் சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

**செல்வந்தப் பிரபு, சேவகர்கள், தாய், பொற்காசு**

1. ........................... கூடையில் மோதகங்களைக் கொண்டு வந்து வைத்தார்கள்.
2. ஏழைகளிடத்தே ........................... மிகவும் இரக்க குணம் உடையவர்.
3. கிரிசாம்பாள் மோதகத்தைத் ........................... இடம் கொடுத்தாள்.
4. மோதகத்திற்குள் இருந்து ........................... கீழே விழுந்தது.

## ॐ செயற்பாடு

01. பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என்ற தலைப்பில் ஐந்து நிமிடங்கள் வரை உரை நிகழ்த்திக் காட்டுக.

02. பொறுமையைக் கடைப்பிடித்து வாழ்வில் உயர்ந்த பெரியார்களின் விபரங்களைச் சேகரியுங்கள்.

03. கிரிசாம்பாள் கதையைச் சுருக்கமாக எழுதுக.

04. நீங்கள் பொறுமைகாத்து அதன் மூலம் நன்மை பெற்ற சந்தர்ப்பம் ஒன்றைக் கூறுக.


## பாடச்சுருக்கம்

* மனிதனுக்குப் பொறுமை மிக அவசியம்.
* பொறுமையைக் கடைப்பிடிப்பதன் மூலம் வெற்றி பெறலாம்.
* பொறுமை காத்ததன் மூலம் கிரிசாம்பாள் பலனை அனுபவித்தார்.
* எச்சந்தர்ப்பத்திலும் பொறுமையை இழக்கக் கூடாது.
* பொறுமை விலை மதிப்பற்றது.
* பொறுத்தார் அரசாள்வார்.

# 5 புதுமனை புகுதல்

சைவ சமயத்தவர்களின் சமுதாய மரபின் ஓர் அம்சமாக புதுமனை புகுதல் இடம் பெறுகின்றது. இதனைக் கிருகப்பிரவேசம் என்றும் குறிப்பிடுவர். புது வீடு ஒன்றைக்கட்டி அதில் நிலையாக வாழவேண்டும் என்ற எதிர்பார்ப்பு எமது சமுதாயத்தில் பேணப்பட்டு வருகின்றது.

வீடு ஒன்றை மனையடி சாஸ்திர முறைப்படி கட்டுவது முக்கியமானதாகும். அதில் நிலத்தைத் தெரிதல், அதற்கான அளவுகளைத் தீர்மானித்தல், அத்திபாரம் இடல் என்பன இடம் பெறும். அதன்போது நவதானியம், ஐம்பொன், செப்பில் மந்திரித்த அச்சரத்தகடு என்பனவற்றை வைத்து கல்வைத்து அத்திபாரம் இடப்படும். அதனைத் தொடர்ந்து நிலைவைத்தல், கூரைவைத்தல் என்பனவும் இடம்பெற்று வீடு பூரணமாகக் கட்டி முடிக்கப்படும். பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுபநேரத்தில் பல்வேறு கிரியைகள் செய்து புதிய வீட்டிற்கு குடிபுகுதல் நிகழ்வு இடம்பெறும்.



புதுமனை புகுதல் நிகழ்வின் முன்னர் வீட்டைத் துப்பரவு செய்து காவல் செய்வர். கிருகசாந்தி என்னும் கிரியையும் நடைபெறும். பின்னர் வெள்ளை நிறப்பசுவை வீட்டினுள்ளே கட்டிவைத்து வீடு புனிதமடையச் செய்தல், அடுத்தநாள் சிவாசாரியாரைக் கொண்டு கிரியைகள் செய்து, காவல் செய்தல், இதன் போது விநாயகர், லட்சுமி முருகன் முதலிய தெய்வங்களுக்கு கும்பம் வைத்தல், காப்புக் கட்டல், யாகம் என்பனவும் இடம் பெறும். நீற்றுப் பூசனிக்காய் கட்டுதல், காவல் செய்யும்போது புற்றுமண், ஆற்றுமண், கடல்மண் முதலியனவும், ஆற்றுநீர், குளத்துநீர், கடல்நீர், சங்கு போன்றனவும் பயன்படுத்தி காவல் செய்தல் இடம்பெறுவதையும் காணலாம்.

வீட்டினுள்ளே குத்துவிளக்கு, நிறைகுடம், தெய்வப் படங்களையும் (விநாயகர், இலட்சுமி, முருகன்), கண்ணாடி, பணப்பை, உப்பு, மஞ்சள், நெல், தாம்பூலம், தென்னங்கன்று முதலானவைகளும் முதலில் எடுத்துச் செல்லப்படும்.

இவ் விழாவில் விருந்தோம்பல் நிகழ்ச்சி இடம்பெறும். உற்றார், உறவினர்கள் நண்பர்களுக்கு அழைப்பு விடுத்து பால், பழம், இனிப்பு வகைகளுடன் விருந்துபசாரம் இடம்பெறும். வீட்டு நிர்மாணத்தில் பங்குபற்றிய விஸ்வகர்மர்கள், கொத்தனார்களும் இத்தினத்தில் பரிசளித்து கௌரவிக்கப்படுவார்கள்.

புதுமனை புகுவிழா பற்றிச் சைவ மக்களிடையே பல்வேறு சடங்கு முறைகளும் நம்பிக்கைகளும் காணப்படுகின்றன. அவற்றில் மனமகிழ்ச்சி, சிறந்த புத்திரப்பேறு, குறைவிலாச் செல்வம், நீண்ட ஆயுள், கல்வி, தொழில், பணவரவு, நோயில்லா வாழ்வு முதலியன கிடைக்கும் என்பது முக்கியமானவைகளாகும்.

புதுமனை புகுதல் இலங்கையின் பற்பல பிரதேசங்களில் வாழ்கின்ற சைவ மக்களின் சமய நம்பிக்கைகளுக்கும் மரபுகளுக்கும் ஏற்பபல்வேறு செயற்பாடுகளைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன.

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. புதுமனை புகுதல் என்றால் என்ன?
2. புதுமனை புகுதல் என்பதன் மறு பெயர்கள் எவை?
3. புதுமனை புகுதலின் போது வீட்டில் முதலில் கொண்டு செல்லப்படும் பொருட்கள் எவை?
4. புதுமனை புகுதலில் இடம்பெறும் நிகழ்வுகளைப் பட்டியற் படுத்துங்கள்.

## செயற்பாடு

புதுமனை புகுதல் பற்றிய உங்கள் பிரதேச நடைமுறையினைச் சேகரித்து எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.

'புதுமனை புகுதல்' என்னும் தலைப்பில் ஐந்து நிமிடங்கள் பேச்சு ஒன்றை நிகழ்த்துங்கள்.

## பாடச்சுருக்கம்

* மனையடி சாஸ்திர முறையில் அதன் பிரமாணங்களுக்கு அமைய புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட வீட்டில் பஞ்சாங்கம் குறிப்பிடும் சுபவேளையில் பல்வேறு கிரியைகள் செய்து குடிபுகுதல் புதுமனை புகுதலாகும்.

* புதுமனை புகுதல் கிருகப் பிரவேசம், வீடுகுடிபுகுதல் எனவும் அழைக்கப்படும்.

* புதுமனை புகுதல் நிகழ்வின் ஊடாக கடவுள் வழிபாட்டுடன் சமய நம்பிக்கைகளும் மேம்படுத்தப்படுகின்றன.

* புதுமனை புகுதலில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

# 6 விரதங்கள்

"விரதமானது மனம், பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு வழிபடுதலாகும்." என்று ஆறுமுக நாவலர் குறிப்பிட்டுள்ளார். விரதங்கள் நாள் விரதம், மாத விரதம், கடவுளுக்குரிய விரதங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவ்விரதங்கள் பற்றியும் அதன் அம்சங்களையும் இங்கு கற்போம்.

## அ) கிழமை விரதங்கள்

### 01. வெள்ளிக்கிழமை விரதம்.

கிழமை விரதங்களில் வெள்ளிக்கிழமை விரதமும் ஒன்றாகும். இதனை சுக்கிரவார விரதம் எனவும் அழைப்பர். இவ்விரதம் அம்பிகை, விநாயகர், முருகன் என்னும் தெய்வங்களுக்காக அனுட்டிக்கப்படுகின்றது.

இவ்விரதம் வருடத்தில் வாரந்தோறும் வரும் வெள்ளிக்கிழமைகளில் அனுட்டிக்கப்படுகின்றது. அவ்வாறு அனுட்டிக்க இயலாதவர்கள் ஐப்பசி மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமைகளில் அனுட்டிப்பது சிறப்பானதாகும். இத்தினங்களில் அம்பிகை, விநாயகர், முருகன் ஆலயங்களில் சிறப்பான பூசை வழிபாடுகள் அனுட்டிக்கப்படுகின்றன.

வெள்ளிக்கிழமை விரத நாளில் வீடுகளில் தூய்மையையும், சைவ உணவு முறைகளையும் கடைப்பிடிப்பர். இவ்விரத நாளில் ஆலயங்களுக்குச் சென்று விரதம் அனுட்டித்து உபவாசம் இருத்தல் உத்தமம். அதற்கு இயலாதோர் இரவிலே பழம் முதலியன உட்கொள்ளலாம். இதற்கும் இயலாதோர் ஒரு பொழுது பகலில் உணவு உட்கொண்டு இவ்விரதத்தை இறைபக்தியுடன் அனுட்டிப்பது அவசியமாகும்.

சைவமக்கள் வெள்ளிக்கிழமையை விரத நாளாக மட்டுமன்றி

புனிதமான நாளாகவும் கருதி, இறைவழிபாட்டிலும், நற்செயல்களிலும் ஈடுபடுவர். இந்நாட்களில் பணக்கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுதல் போன்றவற்றை தவிர்த்துக்கொள்ளும் வழக்கமும் காணப்படுகிறது.

### 02. செவ்வாய்க்கிழமை விரதம்.

நாள் விரதங்களில் செவ்வாய்கிழமை விரதமும் ஒன்றாகும். ஆடிச்செவ்வாய் "மங்கள வாரம்" எனவும் அழைக்கப்படும். செவ்வாய்க்கிழமை முருகன், அம்பிகை, வைரவர், வீரபத்திரர் அனைவருக்கும் சிறப்பு வாய்ந்த நாளாகும்.



செவ்வாய்க்கிழமை விரதத்தினை தொடர்ச்சியாக ஏழு செவ்வாய்க்கிழமை அனுட்டிப்பது முறையாகும். இவ்விரதத்தினை ஆடிமாதம் முதல் செவ்வாயில் ஆரம்பித்து, அம்பிகை, முருகன் ஆகியோரை வழிபடுதல் வேண்டும். முருகன் செவ்வாய்க் கிரகத்துக்குரியவர். அதனால் அவர் "அங்காரகன்" எனவும் போற்றப்படுகின்றார்.

தை மாதம் முதற்செவ்வாயில் தொடங்கி செவ்வாய்தோறும் விரதமிருக்கலாம். சிறப்பாக ஆடிச்செவ்வாய் விரதம் இவ்விரதங்களில் சிறப்பானதாக அனுட்டிக்கப்படுகின்றது. ஒரு பொழுது அன்னமோ, பால், பழமோ உண்டு இறைபக்தியுடன் இவ்விரதத்தினை அனுட்டிக்க வேண்டும்.

## ஆ) மாத விரதங்கள்.

மாதந்தோறும் கடைப்பிடிக்கப்படும் விரதங்கள் மாத விரதங்களாகும். இதன்படி வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிப் பூரம் என்பன குறிப்பிடத்தக்கன.

### 01. வைகாசி விசாகம்.

வைகாசி விசாகம் என்பது முருகப் பெருமான் உதித்த திருநாளே ஆகும். இந்நாள் வைகாசி விசாக விரதமாக அனுட்டிக்கப்படுகின்றது. சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு ஒளிப்பிழம்புகள் சரவணப்

பொய்கையில் வீழ்ந்து ஆறுதாமரை மலர்களிலே ஆறு குழந்தைகளாக உருவெடுத்தன. அவ் ஆறு குழந்தைகளையும் உமையம்மாள் ஒன்றாக அணைத்து ஒரு தெய்வக் குழந்தையாக ஆறு முகங்களும் பன்னிரெண்டு கைகளும் கொண்ட முருகக் கடவுளாகத் தோற்றுவித்தார். அவ்வாறு முருகப்பெருமான் உதித்த தினமே வைகாசி விசாகமாகும். இக்குழந்தைகளை கார்திகைப் பெண்கள் வளர்த்தப்படியால் முருகனுக்கு கார்த்திகேயன் என்னும் பெயரும் ஏற்படலாயிற்று.

இப்புண்ணிய தினத்தில் சிறப்பாக முருகன் ஆலயங்களிலும் பொதுவாக மற்றைய ஆலயங்களிலும் விஷேட அபிஷேகம், பூசை வழிபாடுகள், விரத அனுட்டானங்கள் என்பன இடம்பெறுகின்றன. முருகன் உதித்த இத்தினத்தில் பக்தர்கள் விரதமிருந்து தமக்கு வேண்டியவற்றை முருகப்பெருமானிடம் கேட்டுப் பெற்றுக்கொள்கின்றனர். எனவே நாமும் முருகப்பெருமானின் சக்தியை உணர்ந்து அவர் உதித்த இத்தினத்தில் விரதமிருந்து வழிபடுவோம்.

## 02. ஆனி உத்தரம்.

ஆனி மாதம் முழுவேனிற் காலம் உக்கிரமான காலமாகும். பங்குனி உத்தரம் சிவபெருமானின் திருமணத்தால் விஷேடம் பெற்றது போல ஆனி உத்தரம் சிதம்பர நடராஜர் தரிசனத்தினால் விஷேடம் உற்றதாக காணப்படுகின்றது.



உத்தரம் என்பது சிம்ம, கன்னி ராசிகளுள் உள்ள இரண்டு நட்சத்திரங்களுள்ள மண்டலம். இவ்விரண்டு நட்சத்திரங்களும் பூரத்தில் உள்ள இரண்டு நட்சத்திரங்களும் சேர்ந்து சிறப்பாய் அமைந்து நற்பலன்களைக் கொடுக்கும்.

இத்தினங்களில் ஆலயங்களையும், வீடுகளையும் சுத்தப்படுத்தியும் எண்ணெய் முழுக்கு முதலியவற்றைத் தவிர்த்தும் விரதம் பிடிப்பர். இத்தினங்களில் நாம் இறை சிந்தனையுடன் இவ்விரதத்தைக் கடைப்பிடித்து சகல பலன்களையும் பெறுவோம்.

### 03. ஆடிப் பூரம்.

ஆடி மாதம் தெட்சணாயணகாலத்தில் ஆரம்பமாகும். அதனால் மக்கள் உலக விஷயங்களை எல்லாம் முற்றாகத் தவிர்த்து இறை வழிபாட்டுக்கு உரிய மாதமாக ஏற்றுக்கொள்கின்றனர்.

ஆடிப் பூரம் அம்பிகை பூப்பெய்திய (ருதுவான) தினமெனப் பரவலாகக் கூறப்படுகின்றது. இதில் மிக ஆழமான தெய்வீகத் தத்துவமும் பிரபஞ்ச படைப்புத் தத்துவமும் அடங்கியிருக்கின்றது.

"பூத்தவளே புவனம் பதினான்கையும்" என்னும் அபிராமிப் பட்டரின் அருட்தொடர்கள் அம்பிகை புவனங்களைப் படைத்தமைக்குரிய அருட்தத்துவத்தினைக் காட்டுகின்றது.

இவ்விரதம் ஆடிமாதம் வரும் பூர நட்சத்திரத்தில் அனுட்டிக்கப்படுகின்றது.

### இ) கடவுளுக்குரிய விரதங்கள்.

கடவுளுக்குரிய விரதங்கள் பல வகைப்படுகின்றன. அவற்றில் விநாயகர் சதுர்த்தி, திருக்கார்த்திகை விரதம், வரலட்சுமி விரதம் என்பன முக்கியமான விரதங்களாகக் காணப்படுகின்றன. அவை பற்றிக் கற்போம்.

## 01. விநாயகர் சதுர்த்தி



விநாயகர் சதுர்த்தி விரதம் பற்றி கதையொன்று உண்டு. ஒரு முறை நாரதர் கயிலையில் ஒரு மாங்கனியை சிவனுக்குக் கொடுத்தார். சிவபெருமான் அம்மாங்கனியைத் தம் மக்களில் யாருக்கு இதனை அளிப்பது என பிரமதேவரை யோசனை கேட்டார்.

உடனே பிரமதேவர் முருகப் பெருமானுக்கு அளிக்கலாம் என்று சொல்ல அதனைக் கேட்ட விநாயகர் கோபங் கொண்டார். இதனைக் கண்ட சந்திரன் சிரித்தார். விநாயகருக்கு கோபம் வந்து "பெரியோர் முன்னிலையில் என்னைச் சிரித்து பரிகாசித்த உனது ஒளி உலகில் பரவாதிருக்கக் கடவது" எனச் சந்திரனைச் சபித்தார். அங்கிருந்தவர்களெல்லாம் சாபநீக்கம் செய்யவேண்டுமென்று விநாயகப் பெருமானை வேண்ட அவர் அதற்கொரு பரிகாரம் சொன்னார்.

ஆவணிச் சதுர்த்தியன்று சந்திரனைப்பாராமல் தன்னைச் சிறப்பாகப் பூசிக்கின்றவர்கள் தம் அருளைப் பூரணமாகப் பெற்றுக் கொள்ளலாம் எனக் கூறினார். எனவேதான் ஆவணி மாத அமாவாசை கழித்து நான்காம் நாள் இவ்விரதம் அனுட்டிக்கப்படுகின்றது.

### விரத பலன்கள்.

இவ்விரதத்தை மிகவும் பக்தியுடன் அனுட்டிப்பவர்களுக்கு சிறந்த கல்வி அறிவும், தெளிந்த ஞானமும், சிறந்த செல்வமும், பிள்ளைப்பேறும், துன்பங்கள் விலகி இன்பமும், காரியசித்தியும் உண்டாகும், விக்கினங்கள் (இடையூறுகள்) விலகும், பெரும் புகழுடன் சகலநோய்களும் நீங்கி வாழ்வார்கள்.

### விரத மகிமை.

குமுத முனிவரின் அறிவுறுத்தலின்படி காட்டில் அஞ்ஞாதவாசம் செய்து கொண்டிருந்த பஞ்ச பண்டவர்கள் இவ்விரதத்தை அனுட்டித்து கௌரவர்களை வென்று தங்கள் நாட்டைப் பெற்றனர். பகீரதன் ஆகாய கங்கையை பூமிக்கு கொண்டுவந்ததும், இராமர் சீதையை மீட்டதும், தமயந்தி நளனுடன் மீண்டும் இணைந்து கொண்டதும்

இவ்விரதத்தை அனுட்டித்த மகிமையினாலேயே எனக் கூறப்படுகின்றது.

## 02. திருக்கார்த்திகை விரதம்.

கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திர தினத்தில் முருகப்பெருமானுக்குரிய இவ்விரதம் அனுட்டிக்கப்படுகிறது.

இந்நாளில் ஸ்ஞானஞ் செய்து சந்தியா வந்தனம் செய்து முருகனைத் தியானித்து மாலையில் முருகன் ஆலயங்களில் நடைபெறும் பூசைகள், அபிஷேகம், உற்சவம் என்பவற்றைத் தரிசித்து இரவில் உபவாசம் இருந்து மறுநாள் பாரணை பண்ணுதல் உத்தமமானது.

## விரத மகிமை.

அம்பிகை மகிஷாசுரவதம் செய்தபோது தவறுதலாக உடைந்த சிவலிங்க தோசத்தை நீக்கக் கார்த்திகை விரதம் அனுட்டித்தார். மாபலிச்சக்கரவர்த்தி தன் உடல் வெப்பநிலை நீங்க இவ்விரதம் அனுட்டித்தார். பகீரதன் ஆகியவர்களும் இவ்விரதத்தை கடைப்பிடித்து மேன்மையடைந்தனர்.



இவ்விரதத்தின் கால எல்லை முடிவுறும் போது முருகப் பெருமானுக்கு அபிஷேகம், சகஸ்ரநாம அர்ச்சனை என்பன செய்து விரதத்தை நிறைவேற்றலாம். கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை விரதமானது "திருக்கார்த்திகை" என்ற சிறப்புப் பெயரோடு அனுட்டிக்கப்பட்டுவருகின்றது. இத்தினத்திலேதான் "குமாராலய தீபம்" என்னும் தீபவிழா முருகன் ஆலயங்களில் இடம்பெறுவது வழக்கமாகும்.

## 03. வரலட்சுமி விரதம்.

சக்தி விரதங்களில் வரலட்சுமி விரதமும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. மாங்கல்யத்தைத் தந்து மங்களவாழ்வைத்தருபவள் ஸ்ரீலக்ஷ்மி என்பதனால் சுமங்கலிகள் தங்கள் கணவன் நீடுழி வாழவும், தங்கள் மாங்கல்யத்தைக் காக்கவும், கன்னியர்கள் தங்களுக்கு நல்ல கணவன் கிடைக்க வேண்டும் எனவும் இவ்விரதத்தை அனுட்டிக்கின்றனர்.



இவ்விரதம் ஆவணி மாதப் பூரணைக்கு முதல் வெள்ளிக் கிழமையில் அனுட்டிக்கப் படுகின்றது. இத்தினத்தில் தாமரைக் கோலத்தின் மீது பச்சையரிசியால் நிரப்பப்பட்ட கும்பத்தை வைத்தல், மஞ்சளில் தோய்த்து ஒன்பது நூலிழைகளைமுடிந்து காப்பை பூசை முடிவில் வலக்கையில் கட்டிக் கொள்ளல், நெய்ச்சாதம் படைத்தல் என்பன நடை பெறும். நண்பகல் போசனம், இரவு பலகாரம் உண்ணல் இவ்விரத அனுட்டானத்துக்கு உரியன ஆகும்.

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

01) விரதம் என்றால் என்ன?
02) விரதங்களின் வகைகள் எவை?
03) மாத விரதங்களைக் குறிப்பிடுக?
04) விநாயக விரதங்களைக் குறிப்பிடுக?

## செயற்பாடு.

01) மாதந்தோறும் அனுட்டிக்கப்படும் விரதங்களைப் பட்டியற்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
02) கடவுளுக்குரிய விரதங்கள் பற்றி பத்திரிகைகளில் வெளிவரும் தகவல்களைச் சேகரித்து காட்சிப்படுத்துக.
03) நீங்கள் அனுட்டித்த விரதம் பற்றி ஐந்து நிமிடங்கள் பேச்சு ஒன்றை நிகழ்த்துக.

## பாடச் சுருக்கம்.

* விரதமானது மனம், பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் விதிப்படி இறைவனை வழிபடுதலாகும்.

* விரதங்கள் நாள் விரதம், மாத விரதம், கடவுளுக்குரிய விரதம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

# 7 குங்கிலியக்கலய நாயனார்

அன்பு வழி நின்று இறைவனை வழிபட்ட மெய்யடியார்களின் வரலாற்றைக் கூறும் நூல் பெரிய புராணம் ஆகும். பெரியபுராணம் சேக்கிழாரால் பாடப்பட்டது. பெரியபுராணம் சிறப்பித்துக் கூறும் மெய்யடியார்களில் குங்கிலியக் கலய நாயனாரும் ஒருவர் ஆவார்.

இந்தியாவிலே, சோழ நாட்டிலே உள்ள திருக்கடவூரில் கலயர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் சிவபெருமான் மீது கொண்ட அளவற்ற பக்தி காரணமாக, திருக்கடவூர்ச் சிவன் கோவிலுக்குச் சென்று குங்கிலியத் தூபம் இடும்பணியைத் தவறாது செய்து வந்தார். இதனால் அவர் "குங்கிலியக் கலயர்" என அழைக்கப்பட்டார்.



குங்கிலியக் கலயர் தமது செல்வங்கள் அனைத்தையும் விற்றுக் குங்கிலியம் வாங்கியதால், பொருள் வளம் குன்றியது. இதனால் அவர் குடும்பம் வறுமையால் வாடியது. பிள்ளைகளின் துன்பநிலையைக் கண்டு கலயரின் மனைவி மனவேதனை அடைந்தார். விற்பதற்கு ஒன்றுமில்லை. தாம் அணிந்திருந்த தாலியைக் கழற்றிக் கணவரிடம் கொடுத்து "இதனை விற்று நெல் வாங்கி வந்தால் உணவு சமைக்கலாம்" என்று கூறினார். கலயர் தாலியை வாங்கிக் கொண்டு நெல் வாங்குவதற்காகச் சென்றார்.

குங்கிலியக் கலயர் சென்று கொண்டிருந்தபோது எதிரே ஒருவன் பொதியுடன் வந்து கொண்டிருந்தான். "என்ன பொதி அது?" என்று குங்கிலியக் கலயர் கேட்டார். "குங்கிலியம் ஐயா" என்று அவன் கூறினான். கலயர் தன்னை மறந்தார். "ஆகா! குங்கிலியம் நல்ல நறுமணம் உடையதாக இருக்கின்றது. இதுவன்றோ இறைவனுக்கு உகந்தது." என்று நினைத்து, தாலியைக் கொடுத்து குங்கிலியத்தை வாங்கினார். குங்கிலியத்தை ஆலயத்தின் களஞ்சிய சாலையில் வைத்தார். தனது பணிக்கு இடையூறு ஏற்படாது என்று மனம் மகிழ்ந்தார். வீட்டுக்குச் செல்லாமல் ஆலயத்தில் சிவத்தியானத்தில் ஆழ்ந்திருந்தார். வீட்டுக்கு நெல் வரும். உணவு சமைத்துப் பசியாற முடியும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த மனைவியும் பிள்ளைகளும் பசியால் சோர்ந்து நித்திரையாகிவிட்டனர்.

கலயரின் மனைவி ஒரு கனவு கண்டார். அது ஒரு அதிசயமான கனவு. வீட்டில் நெல்லும் பொருளும் நிறைந்திருக்கும் காட்சி. உடனே எழுந்து பார்த்தார். இறைவன் அருளால் வீடு முழுவதும் பொருட்கள் குவிந்து காணப்பட்டன. இறைவனின் கருணையை நினைத்து நெஞ்சம் உருகினார். அமுதம் ஆக்கத் தொடங்கினார்.

அன்றிரவு கலயனார் நித்திரை செய்யும்போது அவர் கனவில் "அன்பனே நீ பசியுடன் இருக்கிறாய் உனது வீட்டில் நெல்லும் பொருளும் வைத்திருக்கின்றேன். சென்று பசியாறுவாயாக!" என்று இறைவன் அருளினார். கலயனார் வீடு சென்று பார்த்தபோது எல்லாம் உண்மையாக இருந்தது. இறைவனின் பெருமையை நினைத்து மகிழ்ந்தார். தாம் பெற்ற செல்வத்தாலே இறைவனுக்குக்

குங்கிலியத்தூபம் இடும் திருப்பணியுடன் சிவனடியார்களுக்கு திருவமுது செய்விக்கும் திருப் பணியையும் செய்து வந்தார். அவ்வாறு இறைபணி செய்து வரும் நாளில் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் அங்கு வந்தனர். அவர்களை வரவேற்று உபசரித்து அவர்களின் அன்பைப் பெற்றார். இறைபணி செய்து உத்தமராய் வாழ்ந்து சிவபதமடைந்தார்.

"குங்கிலியத் தூபமிட்டு கொன்றை வேந்தன் பணிபுரிந்த
மங்கல நாயகன் பணிதனை எந்நாளும் போற்றுவோம்."

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

01) பெரியபுராணத்தைப் பாடியவர் யார்?

02) குங்கிலியக் கலயர் என்று பெயர்வரக் காரணம் யாது?

03) குங்கிலியக் கலயரின் குடும்பம் வறுமையால் வாடியதன் காரணம் யாது?

04) இறைவன் குங்கிலியக் கலயருக்கு எவ்வாறு அருள் புரிந்தார்?

05) குங்கிலியக் கலய நாயனாரின் கதை மூலம் நீங்கள் கற்றுக்கொண்ட படிப்பினை யாது?

## செயற்பாடு

* குங்கிலியக் கலய நாயனாரின் வரலாற்றை நாடகமாக வகுப்பறையில் நடித்துக்காட்டுக.

## பாடச் சுருக்கம்.

* மெய்யடியார்கள் வரலாற்றைக் கூறும் நூல் பெரியபுராணம் ஆகும்.

* பெரியபுராணம் கூறும் மெய்யடியார்களில் குங்கிலியக் கலய நாயனாரும் ஒருவர் ஆவார்.

* குங்கிலியத் தூபம் இடும் இறைபணியைச் செய்ததால் குங்கிலியக் கலய நாயனார் என்ற பெயர் வந்தது.

* குங்கிலியக் கலய நாயனார் தமது குடும்பம் வறுமையால் வாடியபோதும் இறைபணியை உறுதியுடன் தொடர்ந்து செய்ததால் இறையருளைப் பெற்றார்.

# 8 பஞ்சபுராணங்கள்

திருமுறைகள் தெய்வத்தன்மை பொருந்திய அருட்பாக்கள் ஆகும். இப்பாக்கள் ஆலயங்களிலும், வீடுகளிலும், கல்விச்சாலைகளிலும் ஓதப்பட்டு வருகின்றன. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பன பஞ்சபுராணத்தில் அடங்கும். பஞ்சபுராணத்தைப் பண்ணுடனும், பக்தியுடனும் மேற்குறிப்பிட்ட ஒழுங்கு முறையிலும் ஓதுதல் வேண்டும். பஞ்சபுராணத்தை ஓதுவதால் எம்மிடம் மனநிம்மதி, இறைபக்தி, ஆன்மீக உணர்வு என்பன மேம்படுகின்றன.

கீழே தரப்பட்டுள்ள அருட்பாக்களை மனனம் செய்து ஓதிப்பயன் பெறுவோம்.

## (அ) திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் - தேவாரம்

மூன்றாந்திருமுறை

### பாடல் 01

திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டின் திருத்தலங்கள் பலவற்றையும் தரிசித்ததன் பின், இராமேஸ்வரம் என்ற தலத்திற்கு வந்து அங்கு எழுந்தருளியுள்ள இறைவனை வணங்கிப் பதிகங்களைப் பாடினார். பின்னர் அங்கிருந்தவாறே இலங்கையில் அமைந்துள்ள சிவத்தலங்களுள் ஒன்றாகிய திருக்கோணேஸ்வரத்தில் உறைந்து அருள்புரியும் கோணேஸ்வரப் பெருமானையும் அக்கோயிலின் இயற்கைக் காட்சிகளையும் ஞானக் கண்களாற் கண்டு கசிந்துருகிப் பாடினார். அப் பாடல்களில் ஒன்று கீழே தரப்படுகின்றது.

தலம் - திருக்கோணேஸ்வரம் பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

நிரைகழ லரவம் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே

திருச்சிற்றம்பலம்

## பொழிப்புரை

திருகோணமலைக் கடலில் ஓங்கி ஒலிக்கும் அலையானது சந்தனக் கட்டைகளையும், பொன், மணி, முத்து முதலியவற்றையும் அள்ளி வீசுகின்றது. அக் கடற்கரையில் கோணேஸ்வரப் பெருமான் கோயில் கொண்டுள்ளார். அப் பெருமான் வீரக்கழலின் ஒலியோடு சிலம்பொலியும் கலந்து ஒலிக்கும் திருவடிகளையுடைய குற்றமில்லாத குணத்தினர். திருநீறு அணிந்த திருமேனியையும் உமாதேவியாரைத் தமது இடப்பாகத்தில் இருத்தித் தழுவிக் கொண்ட தோற்றத்தையும் உடையவர். அழகிய இடபத்தின் உருவம் தீட்டப்பெற்ற வெற்றிக் கொடியையும் உடையவர்.

## பதவிளக்கம்

நிரைகழலரவம் - வரிசையாக்கப்பட்ட வீரக்கழலின் ஓசை, சிலம்பொலி - சிலம்பிலிருந்து எழுகின்ற ஓசை, நிமலர் - இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கியவர், வரைகெழுமகள் - மலையரசன் மகளாகிய உமையம்மை, கொடியணிவிடையர் - இடபத்தின் உருவம் பதித்த கொடியை உடையவராகிய சிவபெருமான், கரைகெழு சந்து - கரையின் கண்ணே உள்ள சந்தனக்கட்டை, காரகிற் பிளவு - கரிய அகிற்கட்டை, அளப்பரும் - அளவிட்டுக் கூற முடியாத, கனமணி - பொன்மணி, நித்திலம் - முத்துக்கள்

திருஞான சம்பந்தர் பாண்டி நாட்டின் பல திருத்தலங்களையும் தரிசித்துக் கொண்டு இராமேஸ்வரத்துக்கு வந்தார். அங்குள்ள இறைவனை வணங்கிப் பதிகங்கள் பாடினார். அங்கிருந்தவாறே ஈழநாட்டில் சிறப்புப் பெற்று விளங்கும் சிவத்தலங்களில் ஒன்றாகிய திருக்கேதீஸ்வரத்தில் உறைந்து அருள்புரியும் திருக்கேதீஸ்வர நாதரை அகத்தால் தரிசித்துப் பாடிய பாடல் இதுவாகும். கேது பகவான் பூசித்துப் பேறுபெற்ற திருக்கேதீஸ்வரத்தலம் மன்னாரில் உள்ள மாதோட்ட நகரில் பாலாவியின் கரையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**தலம் - திருக்கேதீஸ்வரம் பண் - நட்டராகம்**

திருச்சிற்றம்பலம்

விருது குன்றமா மேருவி னாணர
வாவன லெரியம்பாய்ப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை**

திரிபுரத்து அசுரர்களுடைய வெற்றி கெடும்படி, பெரிய மேருமலையை வில்லாகவும், ஆதிசேடனை நாணாகவும், அக்கினியை எரிகின்ற அம்பாகவும், கொண்டு போர்புரிந்து, முப்புரங்களையும் நீறாகும்படி அழித்தருளிய சிவபெருமான் விரும்பி உறைகின்ற தலமானது அடியவர்கள் நாள்தோறும் நினைக்கின்ற ஊரும் ஒலிக்கும் கடல் சூழ்ந்த நறுமணம் பொருந்திய சோலைகள் அழகைச் செய்கின்றதுமான மாதோட்டத்தில் உள்ள திருக்கேதீஸ்வரம் ஆகும். அங்குள்ள ஈசனை எந்நாளும் கை தொழுது போற்றக் கொடிய வினைகள் வருத்தமாட்டாது

**பதவிளக்கம்**

விருதுகுன்ற - வெற்றிகெடும்படி, அரவு - பாம்பு, நாண் - கயிறு, மூவெயில் - (மூன்று கோட்டைகள்) முப்புரங்கள் (தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி எனும் மூன்று அரசர்களின் பொன், வெள்ளி, இரும்பு என்னும் மூன்று உலோகங்களிலான கோட்டைகள்): அனல் - நெருப்பு, பொருது - போர்புரிந்து, செற்றவன் - அழித்தவன், கனைகடல் - ஒலிக்கின்ற கடல், கடிகமழ் பொழில் அணி - நறுமணம் பொருந்திய சோலைகள் அழகைச் செய்கின்ற, கடுவினை - கொடிய வினைகள்.

**"மூவெயில் செற்றவன்"**

தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்ற மூன்று அசுரர்கள் பொன், வெள்ளி, இரும்பு என்னும் மூன்று உலோகங்களிலான பறக்கும் கோட்டைகளால் தேவர்களுக்குத் துன்பம் செய்தனர். இத் துன்பத்தைப் பொறுக்க முடியாத தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். பூமியைத் தேராகவும், சந்திர, சூரியர்களைச் சில்லாகவும் அக்கினியை அம்பின் நுனியாகவும், கொண்டு போர்புரிய தயாரான வேளையில் அவைகள் யாவும் தமில்லாவிட்டால் இக்காரியம் நடைபெறாது எனத் தருக்குற்றன. இதை உணர்ந்த சிவபெருமான் முப்புரங்களையும் பார்த்துப் புன்னகைத்தார். முப்புரங்களும் எரிந்து சாம்பலாயின. அதனுள் இருந்த அசுரர் சிவபெருமானைப் பணிந்து துவாரபாலகராயும், வாத்தியம் முழக்குவோனாயும் அருள் பெற்றுய்ந்தனர்.

**(ஆ) திருநாவுக்கரசு நாயனார் - தேவாரம் நான்காந் திருமுறை**

**பாடல் - 01**

திருநாவுக்கரசர் திருக்கைலாயத்திற்குச் சென்று இறைவனைத் தரிசிக்க வேண்டும் என்ற நோக்கில் கைகளால் தாவியும் நெஞ்சால் உந்தியும், புரண்டும் சென்றார். இதனால் அங்கம் எல்லாம் நைந்தது. இந்நிலையில் ஈசன் திருவருளால் வடக்கே மானசரோவர் என்னும் பொய்கையில் மூழ்கி தமிழ்நாட்டில் திருவையாற்று குளத்தில் எழுந்து, திருக்கைலாயத் திருக்காட்சியைக் கண்டு தரிசித்து இத் திருப்பதிகத்தை அருளிச் செய்தார்.

தலம் - திருவையாறு பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான்மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்

திருச்சிற்றம்பலம்

## பொழிப்புரை

அழகிய பிறைச்சந்திரனைத் தரித்திருப்பவரான சிவபெருமானை மலையரசன் மகளாகிய உமாதேவியாருடன் பூசிப்பதற்கு நன்னீரும், அருச்சிப்பதற்குப் பூக்களும், ஏந்திக் கொண்டு புகழ்ப்பாக்களைப் பாடிச் செல்லும் அடியவர்கள் பின்னால் யானும் புகுவேன். உடல் தேய்ந்தும், ஊர்ந்தும் செல்லும் போது பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் சுவடுபடாமல் எழுகின்ற பெரும் பேற்றை அடைந்தேன். அப்போது பெண் யானையும், ஆண் யானையும் போன்று அம்பிகையுடன் விளங்கும் ஈசனைக் கண்டேன். யாரும் காண்பதற்கரிய அப்பெருமானின் திருப்பாதங்களை யான் காணும் பேற்றினைப் பெற்றேன்.

## பதவிளக்கம்

மாதர்ப்பிறை - அழகியபிறை, கண்ணி - மாலை, போதொடு நீர் - மலருடன் நீரும், புகுவார் - அடியவர்கள், சுவடுபடாமல் - (உடலுறுப்புகள் நிலத்தில் படாமல்) எவ்வித உபாதையுமில்லாது, ஐயாறு - திருவையாறு (ஐந்து ஆறுகள் சங்கமிக்கும் இடம்), பிடி - பெண்யானை, களிறு - ஆண்யானை.

பாடல் - 02 ஐந்தாந் திருமுறை

மேலைக்கடம்பூரில் உள்ள திருக்கோயில் தேர் வடிவமாகச் சக்கரங்களோடு அமைக்கப்பட்ட திருக்கோயில் ஆகும். இத்தலத்தின் மீது திருநாவுக்கரசுநாயனார் "நங்கடம் பனை......" எனத் தொடங்கும்

திருக்குறுந் தொகையைப் பாடியுள்ளார். இப்பாடல் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள அமிர்த கடேசுவரரின் பெருமைகளைக் கூறுகின்றது. அத்துடன் திருநாவுக்கரசு நாயனார் கடைப்பிடித்த தாசமார்க்கத்தின் சிறப்பு "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் வரிகள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

**தலம் - மேலைக்கடம்பூர்** **பண் - காந்தாரம்**

திருச்சிற்றம்பலம்

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டனடியே னையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே

திருச்சிற்றம்பலம்

### பொழிப்புரை

நமது முருகனைப் பெற்ற உமாதேவியாரை இடப்பாகமாகக் கொண்டவர். அழகிய கடமபூர்த் திருக்கரக் கோயிலில் அமிர்தகடேசுவரர் என்னும் பெயரோடு வீற்றிருக்கும் சிவபெருமான். அவரின் கடமை ஏனைய உயிர்களைப் போல அடியேனையும் காத்தலாகும். எனது கடமை தொண்டு செய்து வாழ்வதேயாகும்.

### பதவிளக்கம்

கடம்பன் - கடம்ப மாலையை உடையமுருகன், பங்கினன் - பாகமாகக் கொண்டவன், தென்கடம்பை - தெற்கிலுள்ள கடம்பூர், திருக்கரக் கோயில் - கரக்கோயில் என்ற கட்டடக்கலைப் பாணியில் கட்டப்பட்ட கோயில், பணி - தொண்டு

## (இ) சுந்தரமூர்த்தி நாயனார் ஏழாந் திருமுறை
பாடல் - 01

சுந்தரமூர்த்திநாயனார் இராமேஸ்வரத்துக்குச் சென்று இறைவனை வழிபாடு செய்தபின் இலங்கையிலுள்ள திருக்கேதீச்சரத்தின் பெருமைகளைக் கேட்டு உணர்ந்து உள்ளமுருகப் பாடியதே திருக்கேதீச்சரப் பதிகம் ஆகும்.

தலம் - திருக்கேதீச்சரம் பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனைக் கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே

திருச்சிற்றம்பலம்

### பொழிப்புரை

பாஞ்ச சன்னியம் என்னும் சங்கினைப் படையாகக் கொண்ட திருமாலாகிய இடபத்தில் ஏறியவரும், மதம் பொருந்திய யானையின் தோலை உரித்துப் போர்த்தவரும், என்றும் திருமணக் கோலத்தில் விளங்குகின்றவரும் இறந்தவர்களது எலும்புகளை அணிகின்றவருமாகியவர் யாவரென்றால் அன்பே உருவமாகிய தொண்டர்கள் நாள்தோறும் வணங்குகின்ற பெருமையை உடையதும், பாலாவியின் கரையிலே விளங்குகின்றதுமாகிய திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியுள்ளவருமான சிவபெருமானேயாவார்.

### பதவிளக்கம்

நத்து - பாஞ்சசன்னியம் என்னும் சங்கு, ஆர்படை - சிறந்த படை, ஞானன் - மெய்யுணர்வு உடையவன், பத்தாகிய தொண்டர் - அன்புடைய அடியவர், செத்தார் எலும்பு அணிவான் - இறந்தவர்களுடைய எலும்பை மாலையாக அணிபவன்

(நத்தார் புடை ஞானன் என்பது பாடபேதம்)

**"திருமால் இடபமாகியமை"**

சிவபெருமான் இடபவாகனர். திரிபுர தகன காலத்தில் சிவபெருமானின் தேரில் அச்சு முறிந்த போது திருமால் இடபவடிவம் எடுத்து அவரைத் தாங்கிக் கொண்டார்.

**யானையுரி போர்த்த மணவாளன்**

மதங்கொண்ட யானைவடிவுடைய கயாசுரன் தேவர்களுக்குப் பல கொடுமைகள் செய்தான். அவன் செய்த துன்பங்களைப் பொறுக்க முடியாத தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டுக் கண்ணீர் வடித்தனர். அடியார்க்கு எளியவரான சிவபெருமான் ஆயிரங்கோடி சூரிய பிரகாசத்தோடு கூடிய வடிவத்தை எடுத்து கயாசுரனைக் கொன்றார். சிவபெருமானின் திருமேனியின் திவ்விய ஒளியைக் கண்டு தேவர்கள் கண்ணொளி மழுங்கினர். அப்போது சிவபெருமான் யானையின் தோலை உரித்து தமது திருமேனியைப் போர்த்துப் பேரொளியைப் போக்கியருளினார்.

**பாடல் 02** பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

தம்மையே புகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தருஞ் சோறுங் கூறையு
மேத்தலா மிடர் கெடலுமாம்
அம்மையே சிவ லோக மாள்வதற்
கியாது மையுற வில்லையே

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை**

புலவர்களே! போலி வாழ்வு நடத்தும் மனிதர்கள். மற்றவர்கள் தங்களைப் புகழ வேண்டும் இனிக்கப் பேச வேண்டும்: சார்ந்து வாழ வேண்டும், என்று விரும்புவார்கள். தொண்டர்களுக்குப் பொருள் தந்து உதவமாட்டார்கள். இத்தகைய பொய்மையாளர்களது கதைகளைப் பாடாமல் திருப்புகலூரில் எழுந்தருளியுள்ள தந்தை போன்ற ஈசனைப் புகழ்ந்து பாடுங்கள். இவ்வீசன் இவ்வுலக

வாழ்விற்குத் தேவையான உணவையும், சேலையையும் தருவதுடன், தொண்டர்களின் துன்பங்களை ஒழித்து அவர்களை மறுமையில் சிவலோகத்தில் உயர்ந்த நிலையை அடையச் செய்வார் என்பதிலும் சந்தேகமில்லை.

**பதவிளக்கம்**

இச்சை பேசுதல் - ஒருவர் விரும்பும் முறையில் இனிக்கப் பேசுதல், சார்வு - ஒருவரைச் சார்ந்து வாழுதல், பொய்ம்மையாளர் - சொல்வேறு செயல் வேறாக வாழ்பவர், இம்மை - இவ்வுலகம், கூறை - சேலை, இடர் - துன்பம்.

### (ஈ) மாணிக்கவாசகர் சுவாமிகள் - திருவாசகம் எட்டாந் திருமுறை

திருவாசகம் மாணிக்கவாசகரால் பாடப்பட்டதாகும். இது எட்டாந் திருமுறையில் அடங்குகிறது. திருவாசகத்தில் திருச்சதகம், திருச்சாழல், திருவம்மானை, திருவெம்பாவை, பிடித்தபத்து முதலிய பல்வேறுவகைப் பாடல்கள் அடங்குகின்றன. பிடித்தபத்து என்னும் தொகுதியில் உள்ள பாடல் ஒன்று கீழே தரப்படுகின்றது. மாணிக்கவாசக சுவாமிகள் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு சீர்காழிக்கு வந்து இறைவனை வணங்கிய பின் தில்லை நடராசரின் எடுத்த பொற்பாதம் நினைவுக்கு வர இப்பதிகத்தைப் பாடியருளினார்.

தலம் - திருத்தோணிபுரம்.

திருச்சிற்றம்பலம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே!

திருச்சிற்றம்பலம்

### பொழிப்புரை

தாயும் தந்தையும் ஆனவரே, ஒப்புவமையற்ற மணியே, அன்பிலிருந்து வெளிப்பட்ட நிறைந்த அமுதமே, சிவசிந்தனைக்குரிய நேரத்தைக் குறைத்து இழிவான வாழ்வை நடத்திய எனக்கு உயர்வான சிவலோக நிலையை அருளிய செல்வரே! சிவபெருமானே! இவ்வுலகில் உம்மை இறுகப் பற்றிக் கொண்டேன். இனி நீர் வேறு எங்கு எழுந்தருள முடியும்? என் மனக்கோயிலில் குடிகொள்வீராக.

### பதவிளக்கம்

ஆரமுது - நிறைந்த அமுதம், பொழுது - நேரம், புலையனேன் - இழிவான யான், செம்மை - உயர்வு, மேன்மை, சிவபதம் -சிவபதத்தை அடைதலாகிய சிவலோக நிலை, சிக்கென - இறுக, இம்மை - இவ்வுலகம்.

### (உ) சேந்தனார் - திருவிசைப்பா ஒன்பதாந் திருமுறை

திருவிசைப்பா என்பது இறைவனின் பெருமையைப் பாடுகின்ற தெய்வத்தன்மை பொருந்திய இசைப்பாடல் எனப் பொருள்படும். திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர், சேந்தனார், முதலிய ஒன்பதின்மார் பாடிய பாடல்கள் இதில் இடம் பெறுகின்றன. இங்கு தரப்படுகின்ற "கற்றவர் விழுங்கும்......." என்று தொடங்கும் பாடல் சேந்தனாரால் பாடப்பட்டது.

தலம் - திருவீழிமிழலை பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை**

சிவபெருமான் ஞான நூல்களைக் கற்று உணர்ந்தவர்கள் உணர்ந்து அனுபவிக்கின்ற கற்பகக் கனியானவர். எல்லையில்லாத அருட் பெருங்கருணைக்கடல். மெய்ஞ்ஞான நூல்களைக் கல்லாதவர்கள். அறிந்து கொள்ள முடியாத மாணிக்கமலை. தம்மை மதித்து வழிபடுவோரது மனத்திலே தூண்டாமணி விளக்குப்போல பிரகாசிப்பவர். பகைகொண்டு எழுந்த அசுரர்களது (தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி) முப்புரங்களையும் அழித்தவர். திருவீழிமிழலை என்னும் தலத்தில் வீற்றிருக்கின்ற வெற்றியாளன். அவனைக் கண்களால் காணக்காண என் மனம் ஆனந்தத்தால் குளிர கண்களும் குளிர்ந்தன.

**பதவிளக்கம்**

விழுங்கும் - அனுபவிக்கும், மனமணிவிளக்கு- மனதிலே தூண்டாமணி விளக்குப் போல பிரகாசிப்பவர், செற்ற எம் சிவன் - அழித்த எம் சிவபெருமான், கொற்றவன் - வெற்றியாளன்.

**(ஊ) சேந்தனார் - திருப்பல்லாண்டு ஒன்பதாந் திருமுறை**

ஆதியும் அந்தமும் இல்லாத இறைவனைச் சிவனடியார்கள் "பல்லாண்டு வாழ்வாயாக" என்று வாழ்த்திப் பாடுகின்ற திருப்பாடல்கள் "திருப்பல்லாண்டு" எனப்படும். பதின்மூன்று பாடல்கள் கொண்ட இதனைச் சேந்தனார் பாடியருளினார். தில்லைக் கோயிலில் மார்கழித் திருவாதிரை அன்று ஓடாதிருந்த சிவபெருமானின் தேரை ஓடச் செய்வதற்குச் சேந்தனார் திருப்பல்லாண்டு பாடினார். திருப்பல்லாண்டுப் பாடல்களில் ஒன்று கீழே தரப்படுகின்றது.

தலம் - கோயில் பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்
பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே
திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை**

பசியினால் பாலை வேண்டி அழுத குழந்தை உபமன்யுவுக்குப் பாற்கடலை தோற்றுவித்து உண்ணக் கொடுத்தவர். சிவபெருமான் திருமாலுக்குச் சக்கரப்படையைக் கொடுத்தவர். வேதங்களை ஓயாது ஒலிக்கின்ற அந்தணர்கள் நிலைபெற்றுள்ள தில்லையிலுள்ள சிற்றம்பலப் பொற்சபையைத் தமக்கு இடமாகக் கொண்டு ஆடவல்லவர் அவரைப் புகழ்ந்து "பல்லாண்டு வாழ்க" என்று கூறி நாம் வாழ்த்துவோம்.

**பதவிளக்கம்**

பாலகன் - குழந்தை, மால் - திருமால், ஆலிக்கும் - ஒலிக்கும், மன்னிய - நிலைபெற்றுள்ள, நட்டம் - நடனம்.

**(எ) சேக்கிழார் - பெரியபுராணம் பன்னிரண்டாந் திருமுறை**

இறைவனுக்கும் இறையடியார்களுக்கும் தொண்டு செய்து முத்தியடைந்த அறுபத்து மூன்று அடியார்கள் வரலாற்றைக் கூறும் நூல் பெரியபுராணம் ஆகும். இறைவன் "உலகெலாம்......." என்று அடியெடுத்துக் கொடுக்க சேக்கிழார் பெருமானால் பாடப்பட்டதாகும். இந்நூலுக்குச் சேக்கிழார் இட்ட பெயர் "திருத்தொண்டர் புராணம்" என்பதாகும். செயற்கரிய செயல்கள் செய்த அடியார்களின் பெருமைகளைக் கூறுவதால் இந்நூல் பெரியபுராணம் என அழைக்கப்படுகிறது.

திருச்சிற்றம்பலம்

வேதநெறி தழைத் தோங்க மிகுசைவத் துறைவிளங்க
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவளவயற் புகலித் திருஞான சம்பந்தர்
பாத மலர் தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

திருச்சிற்றம்பலம்

## பொழிப்புரை

வேதங்கள் கூறும் வாழ்க்கை நெறி செழித்து வளரவும். மிகவுயர்ந்த சைவ வணக்க முறை பொலிவுற்று விளங்கவும் மன்னுயிர்கள் சிவபெருமான் திருவருள் மேவி பெருவாழ்வு பெறவும் தூய்மையான திருவாய் மலர்ந்தழுதவரான குளிர்ச்சியும், செழிப்பும் மிக்க வயல்கள் சூழ்ந்த சீர்காழிப் பதியில் தோன்றியருளிய திருஞான சம்பந்தரின் மலர் போன்ற திருவடிகளை வணங்கி, அவரின் சிவப்பணிகளைப் பரவும் வகையில் போற்றுதல் செய்வோமாக.

## பதவிளக்கம்

வேதநெறி - வைதீகநெறி, பூதம் - உயிர்கள், சீதவளவயல் - குளிர்ச்சியும் செழிப்பும் மிக்க வயல், புகலி - சீர்காழிப்பதி, பாதமலர் - மலர்போன்ற திருப்பாதங்கள்

(வைதீகநெறி - வேதங்கள் கூறும் வாழ்க்கை நெறி)

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

1. திருமுறைகள் என்பதன் பொருளைக் கூறுக?
2. பஞ்சபுராணங்கள் ஓதும் போது முதலில் ஓதப்படுவது யாது?
3. பஞ்சபுராணங்கள் ஓதுவதால் ஏற்படும் பயன்கள் இரண்டைக் கூறுக?
4. திருத்தொண்டர் புராணம் "பெரியபுராணம்" என அழைக்கப்படுவதன் காரணம் யாது?

## செயற்பாடு 1

01. **பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.**

| திருமுறைப் பாடல்கள் அடி | அடங்கும் திரு முறைகள் | பாடல் வகை | பாடியவர் | பாடப்பட்ட தலம் |
|---|---|---|---|---|
| 01. நிரைகழலரவம் | | | | |
| 02. விருதுகுன்ற | | | | |
| 03. மாதர்ப்பிறை | | | | |
| 04. நங்கடம்பனைப் | | | | |
| 05. நத்தார்படை | | | | |
| 06. தம்மையே | | | | |
| 07. அம்மையே | | | | |
| 08. கற்றவர்விழுங்கும் | | | | |
| 09. பாலுக்குப் பாலகன் | | | | |
| 10. வேதநெறி | | | | |

## செயற்பாடு 2

தரப்பட்டுள்ள அருட்பாடல்களை மனனம் செய்து பண்ணோடு பொருளுணர்ந்து பாடுங்கள்

## பாடச்சுருக்கம்

* திருமுறைகள் தெய்வத்தன்மை வாய்ந்த அருட்பாக்கள் ஆகும்.

* திருமுறைகளில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம், என்பவற்றைப் பஞ்சபுராணம் என்பர்.

* திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், ஆகிய மூவரும் பாடிய பாடல்கள் தேவாரம் ஆகும்.

* மாணிக்கவாசகர் அருளியது திருவாசகம் ஆகும்.

* திருவிசைப்பா என்பது தெய்வத்தன்மை பொருந்திய இசைப்பாடல் ஆகும்.

* இறைவனைப் "பல்லாண்டு வாழ்க" என வாழ்த்திப் பாடுவது திருப்பல்லாண்டு ஆகும்.

* சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணம் பெரிய புராணம் எனவும் அழைக்கப்படுகிறது.

* பஞ்சபுராணங்களை பக்தியுடனும், பண்ணுடனும் ஒழுங்கு முறையிலும் ஓதுவதால் மனநிம்மதி, இறைபக்தி என்பன மேம்படுகின்றன.

# 9 திருப்புகழ்

**அருணகிரிநாதர் - திருப்புகழ்**

சைவத்திருமுறைகள் தொகுக்கப்பட்ட காலத்தின் பின்னர் எழுந்த அருட்பாடல்கள் பிற்காலத் தோத்திரப்பாடல்கள் எனப்படும். பிற்காலத் தோத்திரப் பாடல்களில் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழும் ஒன்றாகும். திருப்புகழ் பாடல்களில் "இறவாமல் பிறவாமல்........." எனத் தொடங்கும் பாடல் இலங்கையில் உள்ள கதிர்காமம் என்ற முருகன் தலம் மீது பாடப்பட்டதாகும்.

திருச்சிற்றம்பலம்

இறவாமல் பிறவாமல்
எனையாள் சற் குருவாகிப்
பிறவாகித் திரமான
பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே
குகனே சொற் குமரேசா
கறையானைக் கிளையோனே
கதிர்காமப் பெருமாளே

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை**

குறவர்குலப் பெண்ணாகிய வள்ளி நாயகியாரைத் திருமணம் செய்தவரே, அடியார்களின் மனக்குகையில் வாழ்பவரே, சொல்லுக்கு அரசனே, உரல் போன்ற கால்களும், யானை முகத்தையும் உடைய கணபதியின் தம்பியே, கதிர்காமத்தில் உறையும் தலைவனே, இறப்பு பிறப்பு என்பன இனிமேல் தொடராது நிலையான பேரின்பப் பெருவாழ்வை அடைய நல்ல குருநாதராக வந்து அருள் வீராக.

**பதவிளக்கம்**

சற்குரு - ஞானகுரு, திரமான - நிலையான/உறுதியான, குறமாது - குறவர்குலப் பெண், கறை - உரல் போன்ற கால்,
கறையானைக் கிளையோன் - உரல் போன்ற கால்களும் யானை முகத்தையுமுடைய விநாயகரின் தம்பி.

## பயிற்சிகள்

**01. கீறிட்ட இடம் நிரப்புக**

1. சைவத்திரு முறைகள் தொகுக்கப்பட்ட காலத்தின் பின்னர் எழுந்த அருட்பாடல்கள் ........................ என அழைக்கப்படும்.
2. திருப்புகழ் பாடியவர் ........................ ஆவார்
3. அடியார்களின் மனக்குகையில் உறைந்து அருள் புரிவதால் முருகப்பெருமானை ........................ என அழைப்பர்.

## செயற்பாடு

"இறவாமல் பிறவாமல் ......" எனத் தொடங்கும் திருப்புகழ் பாடலை ஆசிரியரின் உதவியுடன் பாடுங்கள்.

## பாடச்சுருக்கம்

* சைவத்திருமுறைகள் தொகுக்கப்பட்ட காலத்தின் பின் எழுந்த அருட்பாக்கள் பிற்காலத் தோத்திரப் பாடல்கள் ஆகும்.
* அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பிற்காலத் தோத்திரப் பாடல் வகையைச் சேர்ந்ததாகும்.
* அருணகிரிநாதர் கதிர்காமத் தலத்தின் மீது திருப்புகழ் பாடல்களைப் பாடியுள்ளார்.

# 10 ஆலய வழிபாடு



எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை உருவவடிவில் வழிபடும் இடம் ஆலயமாகும். ஆலயம் என்பது ஆன்மா லயப்படும் இடமாகும் என்பதனை ஆறாம் தரத்தில் அறிந்து கொண்டோம். ஆ என்பது ஆன்மா எனவும் லயம் என்பது லயப்படுதல் எனவும் பொருள் கொள்ளப்படுவதால் ஆன்மா லயப்படும் இடம் ஆலயம் எனப்படுகின்றது.

ஆலயங்கள் ஆன்மாக்கள் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் இறைவனை வழிபடுவதற்கு உகந்த இடமாக விளங்குகின்றது. இறைவனையும் வழிபடும் பக்தர்களையும் ஒன்றிணைப்பது ஆலயங்களில் நடைபெறும் பூசையாகும். இப்பூசைகள் நாள்தோறும் நடைபெறும் நித்தியபூசை, விசேட காலங்களில்

நடைபெறும் நைமித்தியபூசை, பயன் கருதிச் செய்யப்படும் காமியபூசை என மூன்று வகைப்படும்.

நித்தியபூசைகளாவன உஷாக்காலப்பூசை, காலைச்சந்திப் பூசை, உச்சிக்காலப்பூசை, சாயங்காலப்பூசை, இரண்டாம்சாமப்பூசை, அர்த்தசாமப்பூசை என ஆறு வகைப்படும்.

நைமித்தியபூசைகளாவன வருடப்பிறப்பு தைப்பொங்கல், சிவராத்திரி, பூரணை, வெள்ளிக்கிழமை போன்றனவாகும். காமிய பூசை என்பது நித்திய, நைமித்திய பூசைகள் தவிர்ந்து ஒருவர் தமது வேண்டுதலை நிறைவேற்றல்ப்பொருட்டு (பயன் கருதி) செய்யப்படும் இப்பூசையும் உலகநன்மை கருதிச் செய்கையில் நிஸகாமிய பூசை எனப்படும். இப்பூசைக் காலங்களில் ஆவாகனம், அபிடேகம், அலங்காரம், தீபாராதனை, அர்ச்சனை, துதி, நிருத்தியம், வாழ்த்து ஆகிய ஆரம்பக் கிரியைகளும் இடம்பெறும்.

**பூசைப்பொருட்கள் :-**

நாம் ஆலயத்திற்குச் செல்லும்போது நீராடி தோய்த்துலர்ந்த ஆடைதரித்து, விபூதி அணிந்து, உடல் தூய்மையுடனும் உளத்தூய்மையுடனும் சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு செல்லுதல் வேண்டும். அன்றைய தினம் அதிகாலை மலர்ந்த வண்டுகள் மொய்க்காத பூக்கள், பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய், கற்பூரம் போன்ற பூசைப்பொருட்களையும் பால், தயிர், இளநீர் போன்ற அபிடேகத்திரவியங்களையும் ஆலயத்திற்குக் கொண்டு செல்லலாம். பூசைப்பொருட்கள் புனிதமானவை. அவற்றினை ஒரு தூய்மையான தட்டில் வைத்து அரைக்கு மேலே தாங்கிய வண்ணம் கொண்டு செல்ல வேண்டும்.


**வழிபடும் முறை :-**

ஆலயங்களில் கோபுரங்கள் மிக உயரமாகக் கட்டப்பட்டிருக்கும். இதனை தூலலிங்கம் என்றும் அழைப்பர். ஆலயத்தினை நோக்கிவரும் அடியவர்கள் கோபுரத்தினைக் கண்டவுடன் இறைசிந்தனையில் மூழ்கிவிடுவர். ஆலயத்தினை அண்மித்ததும் ஆலயக்கிணற்றில் கால் கழுவி சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு துவாரபாலகரை வணங்கி கோயிலுக்குட் செல்வர். அங்கு பலிபீடத்திற்கு இப்பால் ஆண்கள் தலை, மோவாய், தோள் இரண்டு, கையிரண்டு, காலிரண்டு என எட்டு அவயவங்களும் நிலத்தில் பொருந்தும் வண்ணம் அட்டாங்க நமஸ்காரம் செய்தல் வேண்டும். பெண்கள் தலை,

## அட்டாங்க நமஸ்காரம்



## பஞ்சாங்க நமஸ்காரம்



கையிரண்டு, முழந்தாள் இரண்டு என ஐந்து அவயவங்களும் நிலத்தில் பொருந்தும் வண்ணம் பஞ்சாங்க நமஸ்காரம் செய்தல் வேண்டும். பின்னர் நந்திதேவரை வழிபடல் வேண்டும். தொடர்ந்து விநாயகரை வழிபட்டு மூலமூர்த்தியைத் தரிசிக்க வேண்டும். அதன் பின் உள்வீதியில் உள்ள பரிவாரத் தெய்வங்களை வழிபடல் வேண்டும். இறுதியில் மும்முறை கைகொட்டி சண்டேஸ்வரரை வழிபட்டு சிவதரிசன பலனைத் தரும்படி வேண்டி சிவசந்நிதியை அடைந்து மூலமூர்த்தியை வழிபட்டு அமைதியான ஓர் இடத்தில் அமர்ந்து இறை தியானத்தில் ஈடுபட வேண்டும்.

ஆலயவீதிகளை வலம்வரும்போது சிவசிந்தனையுடன் இறைவனை இரு கைகளாலும் கூப்பி வணங்கிக் கொண்டு மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு என்ற நியதிப்படி வீதிவலம் வருதல் வேண்டும். அவ்வாறு வலம்வரும்போது விக்கிரகங்களைத் தொட்டு வணங்குதல் தகாத செயலாகும்.

**இறை தொண்டுகள்.**

கோவிலைக் கூட்டுதல், கழுவுதல், பூசை உபகரணங்களை விளக்குதல், பூந்தோட்டம் அமைத்தல், பூப்பறித்துக் கொடுத்தல், மாலை கட்டுதல் போன்ற சரியைத் தொண்டுகளையும் தேவாரம் பாடுதல், மந்திரங்களை உச்சரித்தல் போன்ற கிரியைத் தொண்டுகளையும் நாம் செய்யலாம். அச் செயல்கள் எமக்கு நன்மைகளைத் தரும்.

அடியவர்களுக்கு ஆலயவழிபாடும், ஆலயத்தொண்டும் மனநிறைவைத் தருகின்றன. அன்பை வளர்க்கின்றன. வாழ்வை மேம்படுத்துகின்றன. இறுதியில் ஆன்மா விடுதலை அடைய வழிவகுக்கின்றன. இவற்றை நாங்களும் வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழவேண்டும்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்."

## பயிற்சிகள்

**01 கீழே தரப்பட்ட சொற்களை வைத்து வாக்கியங்களை நிறைவு செய்க.**

(தூலலிங்கம், அபிடேகத் திரவியங்கள், நைமித்திய பூசை, சண்டேஸ்வரர்)

01) பால், இளநீர், தயிர் என்பன ..........................................

02) ............................................... எனப்படுவது கோபுரமாகும்.

03) விசேட காலங்களில் நடைபெறும் பூசை ..........................

04) சிவதரிசனபலனைத் தரும் கடவுள் ...............................

**02. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

01) கோவிலில் நடைபெறும் மூன்றுவகைப் பூசைகளும் எவை?

02) கோவிலுக்கு கொண்டு செல்லும் பூசைப் பொருட்கள் நான்கு தருக.

03) ஆண்கள், பெண்கள் செய்யும் நமஸ்காரங்களின் பெயர்களைத் தருக.

04) ஆலயத்தில் நாம் செய்யும் சரியைத் தொண்டுகள் நான்கு தருக.

05) ஆலய வழிபாட்டினால் நாம் அடையும் பயன்கள் மூன்று தருக.

## ॐ செயற்பாடு

01) ஆசிரியரின் உதவியுடன் ஆலயத்திற்குச் சென்று, வழிபாட்டு முறையினை மேற்கொண்டு அதனை ஒழுங்கான முறையில் பட்டியற்படுத்துக.

02) ஆசிரியரின் உதவியுடன் குழுக்களாகப் பிரிந்து உங்கள் பாடசாலையில் உள்ள அல்லது அயலில் உள்ள ஆலயத்தில் தொண்டில் ஈடுபடுக.

## பாடச் சுருக்கம்.

* ஆலயத்தில் நடைபெறும் பூசைகள் பக்தர்களை இறைவனுடன் இணைக்க வழிவகுக்கின்றன.
* ஆலய பூசைகள் மூன்று வகைப்படும்.
* பூசையின் போது நடைபெறும் நியதிகள் முக்கியமானவை.
* பூசைப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு விதிமுறைகள் உண்டு.
* ஆலயவழிபாட்டில் ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
* இறைதொண்டு செய்வதன் மூலம் நாம் நமது வாழ்வில் நன்மை அடைகின்றோம்.


K&S 1233 F.N-6

# 11 சமயகுரவர் நால்வரின் சமயப்பணிகள்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகியோர் சைவசமய குரவர்கள் என்பதனை முன்பு கற்றுக் கொண்டோம். இவர்கள் சைவசமயமே மெய்ச்சமயம் என்று நிலை நிறுத்தப் பதிகங்களைப் பாடினர். ஆலயவழிபாடு செய்தல், சிவ சின்னங்களுக்கு மதிப்பளித்தல், சிவனடியாரைப் போற்றுதல், பதிகங்களைப் பாடுதல் முதலான சிவதொண்டுகள் மூலம் சைவநெறியைத் தழைக்கச் செய்தவர்கள். இத்தகைய அருளாளர்களின் வரலாற்றினைக் கற்பதன் மூலம் நாமும் இயன்றளவு சமய சமூகப் பணிகளைச் செய்து வாழப் பழகுவோம்.

### திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்.



சோழ நாட்டில் சீர்காழிப்பதியில் சிவபாத விருதயருக்கும் பகவதி அம்மையாருக்கும் மகனாகத் திருஞான சம்பந்தர் பிறந்தார். அவர் தனது மூன்று வயதில் உமாதேவியாரிடம் ஞானப்பாலுண்டு தோணிபுரத்து ஈசனை நோக்கி "தோடுடைய செவியன்" என்ற பதிகத்தைப் பாடினார்.

சிவபெருமானிடமிருந்து முத்துக் குடை, முத்துச் சின்னம் முத்துப்பலலாக்கு ஆகியவற்றைப் பெற்றார். பலதலங்களுக்கும் தலயாத்திரை செய்து பதிகம் பாடினார். இதனால் இவருடன் பல அடியார் கூட்டமும் சேர்ந்து பதிகம் பாடியது. பாம்பு தீண்டி இறந்த வணிகனை உயிர்ப்பித்தார். திருவீழிமிழலை என்ற இடத்தில் மக்கள் பஞ்சத்தால் வாடினர். அத்தலத்திற்கு திருநாவுக்கரசருடன் சென்ற சம்பந்தர் இறைவனை வேண்டிப் பதிகம் பாடிப் படிக்காசு பெற்று மக்களுக்கு அன்னதானம் வழங்கினார். பின் சம்பந்தரும் அப்பரும் திருமறைக்காட்டை அடைந்து நீண்டகாலமாக பூசை எதுவுமின்றி பூட்டப்பட்ட கதவினை திருநாவுக்கரசர் திறக்கப்பாடினார். சம்பந்தர் அதனை மூடவும் திறக்கவும் கூடியவகையில் பதிகம் பாடினார். இதனால் பக்தர்கள் இறைவழிபாடு செய்ய வழி அமைத்தனர்.

பாண்டி நாட்டில் சைவம் நலிவுற்றிருந்தது. அந்நாட்டுப் பாண்டிய மன்னன் சமண சமயத்தைத் தழுவினான். அது கண்ட பாண்டிமாதேவியான மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் சம்பந்தரை மதுரைக்கு அழைத்தனர். மதுரைக்கு வந்த சம்பந்தர் ஒரு மடத்தில் தங்கிய போது சமணர்கள் அம்மடத்திற்கு தீ வைத்தனர். சம்பந்தர் இறைவனை நினைத்து பதிகம் பாட அத்தீ பாண்டிய மன்னனுக்கு வெப்புநோயை உண்டாக்கியது. சமணர்கள் எவ்வளவு முயன்றும் பாண்டிய மன்னனின் வெப்பு நோய் தீரவில்லை. பின் பாண்டியனின் சம்மதத்தோடு மங்கயற்கரசியார் சம்பந்தரை தனது அரண்மனைக்கு அழைப்பித்தார். சம்பந்தர் "மந்திரமாவது நீறு" என்ற பதிகத்தினைப் பாடி பாண்டியனின் உடல் எங்கும் விபூதியைப் பூசிய போது பாண்டியனின் வெப்பு நோய் நீங்கியது. இறைவனின் கருணைத்திறனை உணர்ந்த பாண்டியன் சைவ சமயத்திற்கு மாறினான். தொடர்ந்தும் சம்பந்தர் சமணர்களுடன் அனல்வாதம், புனல்வாதங்களில் போட்டி இட்டு சைவசமயமே உண்மை என நிலைநாட்டினார்.

சம்பந்தர் இறைவனைத் தந்தையாகவும் தன்னை மகனாகவும் கொண்டு சற்புத்திர மார்க்க நெறியில் வாழ்ந்தார். அவர் பதினாறு வயது அடைந்தபோது பெற்றோர் அவருக்குத் திருமணம் செய்து வைத்தனர். அவ்வேளை சோதியொன்று தோன்றியது. அச்சோதியில் திருமணத்திற்கு வந்த அனைவருடனும் சேர்ந்து சம்பந்தரும் கலந்து சிவப்பேறு பெற்றார். அவ்வாறு சோதியுள் கலந்த தினம் வைகாசி மூல நட்சத்திரமாகும். இத்தினம் இவரது குருபூசைத் தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

## திருநாவுக்கரச நாயனார்



திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வாழ்ந்த புகழனாருக்கும் மாதினியாருக்கும் மகனாக திருநாவுக்கரசர் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்டபெயர் மருள்நீக்கியார் என்பதாகும். இவரது தமக்கையாரின் பெயர் திலகவதியார். சிறுவயதில் பெற்றோரை இழந்த மருள்நீக்கியார் தமக்கையாரின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தார். இளமைக்காலத்தில் பலவிதமான துன்பங்களையும் அனுபவித்தார். அதனால் சமண சமயத்தில் சேர்ந்து புலமைபெற்று தருமசேனர் என்ற பெயருடன் சமணசமயக் குருவாகத் திகழ்ந்தார். இதனை அறிந்த திலகவதியார் திருவதிகைவீரட்டான இறைவனிடம் முறையிட்டார்.

இறையருளால் மருள் நீக்கியாருக்கு குடலை வருத்தும் சூலைநோய் உண்டானது. சமணர்களினால் இந்நோயைக் குணப்படுத்த முடியவில்லை. எனவே மருள் நீக்கியார் தமக்கையாரிடம் வந்தார். அவர் விபூதி கொடுத்து இறைவனை வேண்டும்படி கூறினார். அப்போது மருள்நீக்கியார் இறைவனை வேண்டி ''கூற்றாயினவாறு'' என்று தொடங்கும் பதிகத்தினைப் பாட அவரது

சூலைநோய் மாறியது. பதிகத்தின் மூலம் மகிழ்ந்த இறைவன் அவருக்கு "நாவுக்கரசன்" என்ற நாமத்தினைச் சூட்டினார். அதன் பின் தீவிரமான சைவ சமயியாக அவர் மாறினார். அச் செயலை அறிந்த சமணர்கள் மகேந்திரபல்லவ மன்னனிடம் முறையிட்டனர். மன்னர் அனுமதியுடன் நாவுக்கரசரை சுண்ணாம்பு அறையில் அடைத்தனர். நஞ்சு கலந்த பாற்சோற்றைக் கொடுத்தனர். யானையை ஏவிவிட்டனர். அவை யாவற்றிலும் இருந்து இறையருளால் நாவுக்கரசர் பிழைத்துக் கொண்டார். இறுதியாக சமணர்கள் அவரைக் கல்லோடு கட்டிக் கடலில் விட்டனர். அப்போது நாவுக்கரசர் "சொற்றுணை வேதியன்" என்ற பதிகத்தினைப் பாட கல் தெப்பமாகி திருப்பாதிரிப் புலியூர் என்ற இடத்தில் கரை சேர்ந்தது.

நாவுக்கரசர் பலதலங்களுக்கும் தலயாத்திரை சென்று பதிகம் பாடினார். சம்பந்தருடன் சேர்ந்து தலயாத்திரை சென்ற அவர் படிக்காசு பெற்று மக்கள் பஞ்சம் போக்கினார். திருமறைக்காட்டில் வேதங்களால் பூட்டப்பட்ட கதவு திறக்கப்பாடினார். ஆலயங்களில் உழவாரம் என்ற கருவி கொண்டு புல், பூண்டு முதலியவற்றை நீக்கி சரியைத் தொண்டு செய்தார். அதனால் அவர் 'உழவாரப் படையாளி' என்று அழைக்கப்படுகின்றார்.

திருப்பழையாறை என்ற இடத்தில் உள்ளவடதளி என்னும் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள சிவலிங்கத்தை சமணர்கள் மறைத்துவிட்டு அக்கோயிலை சமணப் பள்ளி ஆக்கினர். அக் கொடுமையை அறிந்த நாவுக்கரசர், அப்பள்ளி அருகே உண்ணாவிரதம் இருந்து அவ்வாலயத்தினை மீட்டு மக்கள் வழிபாடு ஆற்றவும் சிவநெறி தழைக்கவும் வழிவகுத்தார். நாவுக்கரசரின் பக்தியின் சிறப்பினை அறிந்த அப்பூதியடிகள் நாவுக்கரசரின் பெயரில் தண்ணீர்ப் பந்தல், மடம் அமைத்து சிவதொண்டு ஆற்றிவந்தார். அப்பூதியடிகள் மனைக்கு வந்த நாவுக்கரசருக்கு அமுது அளிக்க முனைந்த போது அவரது மைந்தன் பாம்பு தீண்டி இறந்தான். நாவுக்கரசர் இறைவனை வேண்டிப் பதிகம் பாடி அச்சிறுவனை உயிர்ப்பித்ததோடு, அப்பூதியடிகளின் சமூகப்பணிக்கும் ஆதரவாக இருந்தார்.

இவ்வாறு எண்பத்தொரு ஆண்டுகள் வாழ்ந்து இவ்வுலகில் சமயப்பணிபுரிந்த நாவுக்கரசர் இறைவனைத் தலைவனாகவும் தன்னை அடிமையாகவும் கொண்டு தாசமார்க்கத்தில் நின்று தொண்டு செய்து வாழ்ந்தவர். அவர் சித்திரை மாத சதய நன்னாளில் சிவபிரானின் திருவடிகளை அடைந்து பேரின்ப நிலை பெற்றார்.

## சுந்தர மூர்த்தி நாயனார்



சுந்தர மூர்த்தி நாயனார் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் மகனாகப் பிறந்தார். இவரது பிள்ளைத் திருநாமம் நம்பியாரூரன் என்பதாகும். அவருக்குத் திருமணம் நடந்த வேளை இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டவர். அவ்வேளை இறைவனை வன்மையாகப் பேசியமையால் வன்தொண்டர் என்ற நாமத்தினையும் பெற்றார். அவர் முதற்பாடிய பதிகம் "பித்தா பிறை சூடி" என்பதாகும்.

இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்ட சுந்தரர் பின் பரவையார், சங்கிலியார் என்ற இரு பெண்களைத் திருமணம் செய்தார்.

தனது தேவைகள் அனைத்தையும் தோழமை உறவுடன் இறைவனிடம் கேட்டுப் பெற்றுக் கொண்டார். அதனால் அவர் தம்பிரான் தோழர் எனவும் அழைக்கப்பட்டார்.

அவர் பல தலங்களுக்கும் தலயாத்திரை சென்று பாடினார். அங்குள்ள இறைவனைப் போற்றிப்பாடி செங்கற்களைப் பொன்கற்களாக்கினார். ஆற்றில் இட்ட பொன்னைக் குளத்தில் எடுத்தார். முதலை உண்ட பாலகனை மீட்டெடுத்தார். குன்றையூரில் நெல் பெற்றார். சுந்தரர் சிவனடியார் மீது தீவிரபற்றுக் கொண்டவர். சிவனடியார்களைப் போற்றி "தில்லை வாழ் அந்தணர்" என்ற

திருத்தொண்டர் தொகையைப் பாடினார். சுந்தரரின் சிறப்புக்களை அறிந்த சேரமான் பெருமாள் என்ற மன்னன் அவருடன் நட்புக்கொண்டு வாழ்ந்தார். அதனால் சுந்தரர் சேரமான் தோழர் எனவும் அழைக்கப்பட்டார். திருமணக் கோலத்துடன் இம்மண்மீது பதினெட்டு ஆண்டுகள் சகமார்க்க நெறியைக் கடைப்பிடித்து வாழ்ந்து வெள்ளை யானை மீது திருக்கயிலையை அடைந்து பேரின்பப் பெருவாழ்வு பெற்றார். இத்தினம் ஆடிச் சுவாதி நட்சத்திர தினமாகும்.

## மாணிக்கவாசகர்



மாணிக்கவாசகர் திருவாதவூரில் வாழ்ந்த சம்புபாதாசிரியருக்கும் சிவஞானவதியாருக்கும் மகனாகப் பிறந்தார். அவர் பாண்டிய மன்னனின் முதல் அமைச்சராக இருந்தபோது "தென்னவன் பிரமராயன்" என்ற சிறப்புப் பெயர் பெற்றார். பாண்டிய மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்க குதிரை வாங்கச் சென்றபோது திருப்பெருந்துறையில் குருந்த மரநிழலில் அருட்குரவராக வந்த இறைவனால் ஆட்கொள்ளப் பட்டார். தான் குதிரை வாங்க வந்த நோக்கத்தினை மறந்து அருட்குரவருடன் இருந்தார். குதிரை வாங்க வைத்திருந்த பணத்தை தருமங்கள் செய்து செலவிட்டார். அதனால் கோபமடைந்த மன்னன் திருவாதவூரரைத் தண்டித்தான். அடிகள் இறைவனை வேண்ட இறைவன் நரிகளைப் பரிகளாக்கி பாண்டிய மன்னனுக்கு அளித்தான். அன்றிரவு பரிகள் எல்லாம் நரிகளாக மாறி தீமை விளைவித்தன. அச்செயல் மூலம் கோபமடைந்த மன்னன் திருவாதவூரரை மீண்டும் தண்டித்தான். அடியார்களின் துயரைத் தீர்ப்பவன் இறைவன் ஆகவே

அவர் வைகையாற்றைப் பெருக்கெடுக்க வைத்தார். மன்னன் பெருகிவரும் ஆற்றை அணைகட்டும்படி மக்களைப் பணித்தான். அவ் வேளை செம்மனச் செல்வி என்ற மூதாட்டியின் பொருட்டு கூலியாளாக உருமாறி வந்த இறைவன் பிரம்படியும்பட்டார். அவ்அடி எல்லா உயிர்கள் மீதும்பட்டது. அங்கு இருந்தவர்கள் இறைவனின் சிறப்பினை உணர்ந்து வழிபட்டனர். மன்னனும் இறைவன் திருவிளையாடலை புரிந்து கொண்டு வாதவூரரை சிறையிலிருந்து விடுவித்தார். இறைவனின் கருணைத் திறனை உணர்ந்த வாதவூரர் தனது அமைச்சர் பதவியைத் துறந்து இறைபணியை மேற்கொண்டார்.

அவர் இறைவன் மீது திருவாசகம், திருக்கோவையார் ஆகிய பாடல்களைப் பாடினார். திருவாசகம் அரிய தத்துவக்கருத்துக்களைக் கொண்ட பாடல் தொகுதியாகும். திருவாசகத்தின் சிறப்புக் காரணமாக "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்." என்னும் தொடர் சைவர்களிடையே வழங்கி வருகின்றது. திருக்கோவையார் வாதவூரன் சொல்ல இறைவன் எழுதிய சிறப்புடையது. இறைவன் மீது மணியான பாடல்களைப் பாடியமையால் இறைவன் இவருக்கு "மணிவாசகர்" என்ற நாமத்தினைச் சூட்டினார். மணிவாசகர் முப்பத்திரண்டு ஆண்டுகள் இவ்வுலகில் இறைவனைக் குருவாகவும் தன்னைச் சீடனாகவும் கொண்டு சன்மார்க்க நெறியில் நின்று ஆனிமாத மகநட்சத்திரத்தில் முத்தி அடைந்தார்.

## பயிற்சிகள்

| நாயன்மார்கள் | அற்புதங்கள் | நின்ற மார்க்கம் | சமயசமூகப் பணிகள் | முத்தியடைந்த தினம் |
|---|---|---|---|---|
| | | | | |

## செயற்பாடு

01) "நாயன்மார்கள் சமயப்பணிகள்" என்ற தலைப்பில் மாணவர்கள் நான்கு குழுக்களாக பிரிந்து கலந்துரையாடி அதனைத் தொகுத்து வகுப்பறையில் வாசித்துக் காட்டுக.

02) நாயன்மார் வரலாற்றின் ஒரு காட்சியை நாடகமாக நடித்துக் காட்டுக.

## பாடச் சுருக்கம்

* சமயகுரவர்கள் நால்வரும் இறையருள் பெற்ற அருளாளர்கள்.
* சமயகுரவர்கள் பண்ணோடு இறைவனைப் பாடிப் பரவியவர்கள்
* அற்புதங்கள் பலவற்றைச் செய்து சைவசமயம் மெய்ச்சமயம் என உணர்த்தியவர்கள்.
* பிற சமய வாதிகளுடன் வாதிட்டு இறைவனின் அருட்சிறப்பினை வெளிப்படுத்தியவர்கள்.
* தலயாத்திரை சமய சமூகப் பணிகளை மேற்கொண்டவர்கள்.
* நான்கு மார்க்கங்களைக் கடைப்பிடித்து முத்தியடைந்தவர்கள்.

# 12 சுவாமி விபுலானந்தர்



ஈழத்தில் சமயத்தை வளர்த்த பெரியார்களான சுவாமி ஞானப்பிரகாசர், ஆறுமுக நாவலர் வரிசையில் சுவாமி விபுலானந்தரும் குறிப்பிடத்தக்கவர். அவர் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு பெரும்பணி புரிந்தார்.

விபுலானந்த அடிகள் மட்டக்களப்பு பிரதேசத்தின் தெற்கே உள்ள காரைதீவு என்னும் ஊரில் சாமித்தம்பி என்பவருக்கும் கண்ணம்மைக்கும் மகனாக 1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் பிறந்தார். இக்குழந்தைக்கு பெற்றோர். இட்ட பெயர் மயில்வாகனன் ஆகும். இவர் தனது ஆரம்பக் கல்வியை குஞ்சித்தம்பி ஆசிரியரிடமும் வசந்தராசப்பிள்ளை அவர்களிடமும் கற்றதோடு வைத்தியலிங்க தேசிகரிடம் நன்னூல், சூடாமணிநிகண்டு போன்றவற்றையும் கற்றார்.

மயில்வாகனன் இளமையில் பெற்ற தமிழ்க் கல்வி அறிவினால் மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டிதர் பரீட்சையில் சித்தியெய்தினார். இப்பாடசாலையில் சித்தயெய்திய முதலாவது இலங்கையர் என்ற பெருமையும் அவருக்குரியது. தனது பதினாறு வயதில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட தேர்வில் முதன்மையாகத் தேறினார். அதன் பின் தான் படித்த புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினார். தனது விடா முயற்சியால் ஆங்கிலப் பயிற்சி பெற்ற ஆசிரியராகவும், இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானமாணிப் பட்டதாரியாகவும் உயர்ந்தார். கல்முனை கத்தோலிக்க திருச்சபைப் பாடசாலை, யாழ்ப்பாணத்திலுள்ள புனித சம்பத்திரிசியார் கல்லூரி மற்றும் வைத்தீஸ்வரா வித்தியாலயம் என்பவற்றிலும் கடமையாற்றினார். 1920 ஆம் ஆண்டு மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபரானார்.

1922 ஆம் ஆண்டு மயில்வாகனனார் துறவியாகி தூய்மை வாழ்வுபெற சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்தார். அப்போது அவருக்கு பிரபோதசைதன்னியர் என்னும் பிரமச்சரிய நாமம் வழங்கப்பட்டது. 1924 ஆம் ஆண்டு சித்திரை மாதம் சுவாமி சிவானந்தா அவர்கள் பிரபோதசைதன்னியருக்கு சுவாமி விபுலானந்தர் என்ற பெயரை வழங்கினார்.

மயில்வாகனர் பிறந்த காலப்பகுதியில் ஆங்கிலேயர் ஆட்சி நிலவியது. அக்காலத்தில் சைவசமயம் நலிவுற்றிருந்தது. நாவலரைப் போல மயில்வாகனனுக்கும் சைவத்தையும் தமிழையும்

வளர்க்க வேண்டிய தேவை இருந்தது. அதனால் 1925 ஆம் ஆண்டு இலங்கை வந்த விபுலானந்த அடிகள், இந்து தமிழ்ப் பிள்ளைகள் தமது சூழலில் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்குடன் கல்விப்பணியாற்றினார். மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம், திருகோணமலை இந்துக் கல்லூரி என்பன அவர் அமைத்த பாடசாலைகளாகும். பாடசாலைகளில் சமயக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தார். அத்தோடு வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனை நடத்தல், பக்திப் பாசுரப் பாராயணம் செய்தல். வாரஇறுதியில் சைவசமய வகுப்புக்கள் நடத்துதல், பண்ணிசைப்பயிற்சி நடத்துதல் முதலான சமய முயற்சிகளிலும் ஈடுபட்டார். அத்துடன் சமய அனுட்டான வழிமுறைகளையும் வகுத்துக் கொடுத்தார். பிரசங்கம் புரிந்தார். விவேகானந்தன், கலைமகள், இராமகிருஷ்ண விஜயம் முதலிய சஞ்சிகைகளில் சமயக் கட்டுரைகள் எழுதினார். சமய மாநாடுகளுக்கு தலைமை தாங்கி கருத்துரை வழங்கினார். இலங்கை, இந்தியப் பல்கலைக்கழகங்களில் முதலாவது தமிழ்த்துறை பேராசிரியராகவும் இருந்து கடமைபுரிந்தார். மேலும் கல்விப்பகுதிப் பாடநூல்சபை, தேர்வுச்சபை, கல்வி ஆராய்ச்சி சபை, ஆகியவற்றிலும் உறுப்பினராக இருந்து பணியாற்றினார். சமயபாடத்திற்கான பாடத்திட்டத்தையும் சங்கீத பாடத்திற்கான பாடத்திட்டத்தையும் வடிவமைத்துக் கொடுத்தார். கணேசதோத்திர பஞ்சகம், கதிரையம்பதிமாணிக்கப்பிள்ளையார் இரட்டைமணிமாலை, குமரவேல் நவமணிமாலை, மகாலட்சுமி தோத்திரம், ஈசன் உவர்க்கும் இன்மலர் மூன்று போன்ற சமய நூல்களையும் எழுதி வெளியிட்டார். இது அவரது சமய பக்தியையும் ஆழ்ந்த புலமையையும் வெளிப்படுத்துபவையாக அமைகின்றது.

சைவத்தையும் தமிழையும் வளர்த்த விபுலானந்தரின் அரிய நூலாகிய யாழ் நூல் 1947ஆம் ஆண்டு யூன் மாதம் ஐந்தாம் ஆறாம் திகதிகளில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. இவ்வாறு பலதரப்பட்ட பணிகளை ஆற்றிய சுவாமி விபுலானந்தர் 1947ஆம் ஆண்டு யூலை மாதம் 19ஆம் திகதி இறைவனுடன் இரண்டறக் கலந்தார். இவரது பூதவுடல் சிவானந்தா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது.

அடிகளாரின் செயற்கரிய பணிகளை நினைவூட்டும் வகையில் மட்டக்களப்பில் விபுலானந்த மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இன்றும் சமயக்கல்வியின் கேந்திர நிலையமாக இது விளங்குகின்றது. விபுலானந்தர் எமக்களித்த அறிவுரைகளில் சிறந்தது "உள்ளத்தினை இறைவனுக்கு அர்ப்பணித்து வழிபடுவதே சிறந்தது" என்பதாகும். இதனை ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று என்ற பாடல் தொகுதியில் விளக்குகிறார்.

"வெள்ளை நிறமல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது."

## பயிற்சிகள்

01) சுவாமி விபுலானந்தர் பிறந்த இடம் யாது?

02) சுவாமி விபுலானந்தரின் பிள்ளைத்திரு நாமம் யாது?

03) விபுலானந்தர் என்ற தீட்சை நாமத்தை மயில்வாகனனுக்கு வழங்கியவர் யார்?

04) விபுலானந்தர் இயற்றிய சமயம் சார்ந்த நூல்கள் மூன்று தருக?

05) விபுலானந்தர் அமைத்த பாடசாலைகள் எவை?

## ௐ செயற்பாடு

01) "விபுலானந்த அடிகளின் சமயப்பணிகள்" என்ற தலைப்பில் குழுக்களாக தகவல்சேகரித்து வகுப்பறையில் வாசித்துக் காட்டுக.

## பாடச் சுருக்கம்

* விபுலானந்த அடிகள் மட்டக்களப்பில் உள்ள காரைதீவில் பிறந்தார்.
* இவரது பிள்ளைத் திருநாமம் மயில்வாகனன் என்பதாகும்.
* சுவாமி சிவானந்தரினால் "விபுலானந்தர்" என்ற தீட்சை நாமம் வழங்கப்பட்டது.
* விபுலானந்தருக்கு சமயப்பற்று மிகுந்து காணப்பட்டது.
* ஆசிரியர், அதிபர், பேராசிரியர் என்ற பதவிகளை வகித்தவர்.
* விபுலானந்தர் பல சமய நூல்களை எழுதினார்.
* பாடசாலைகளை நிறுவி தமிழ்மொழியையும் சைவ சமயத்தையும் வளர்த்தார்.
* இவர் எழுதிய நூல்களில் இறைவழிபாட்டை சிறப்பித்து நிற்பது "ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று" என்ற நூலாகும்.

# 13 பதி

சைவசமயம் கூறும் முப்பொருள் உண்மைகளைச் "சைவசித்தாந்தம்" என்று கூறுவர். பதி, பசு, பாசம் என்பவையே அவ்வுண்மைப்பொருள்கள் ஆகும். இவை அழிவில்லாதவை, நித்தியமானவை, அநாதியானவை. இவை அநாதியானவை என்பதைத் திருமூலர் திருமந்திரத்தில்

"பதி, பசு, பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு, பாசம் அநாதி"

என்று தெளிவாகக் கூறியுள்ளார். பதி, பசு, பாசம் ஆகிய முப் பொருள்கள் பற்றி ஏற்கனவே கற்றீர்கள். பதியின் இலக்கணம், பசுவின் இலக்கணம், பதிக்கும், பசுவுக்கும் உள்ள தொடர்புகள் பற்றி இப்பாடத்தில் அறிந்து கொள்வோம்.

பதி, இறைவன், ஆண்டவன், கடவுள், பசுபதி என்றெல்லாம் அழைக்கப்படுகின்றார். பதி என்பது பேரறிவை உடையது. பதிக்கு இரண்டு இலக்கணங்கள் கூறப்படுகின்றன. அவை சொரூபலக்கணம், தடத்தலக்கணம் என்பவை ஆகும். சொரூபலக்கணம் பதியின் உண்மைத் தன்மையைக் குறிக்கின்றது. இந்நிலையில் கடவுளுக்கு குணங்கள், குறிகள் இல்லை. பெயர்கள் இல்லை. ஆனந்தமயமானது. கடவுள் உயிர்கள் மீது கொண்ட கருணையினால் சொரூப இலக்கணத்திலிருந்து பலபடிகள் இறங்கிவந்து கொள்ளும் இலக்கணம் தடத்தலக்கணம் ஆகும். இந்நிலையில் பதிக்கு குணம், குறிகள் கூறப்படும். அருவம், உருவம், அருவுருவம் என்னும் முத்திருமேனிகள் மூலம் உயிர்களுக்கு அருள்புரிகின்றார். கடவுளுக்கு எண்குணங்களும் கூறப்படுகின்றன. பதி படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், என்னும் ஐந்தொழில்களைப் புரிவதன் மூலம் பசுவின் முத்திக்கு வழிகாட்டுகிறார். தடத்தலக்கணத்தில் பதிக்குப் பல பெயர்கள் கூறப்படுகின்றன. இதனை

"ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ"

என்று மணிவாசகர் திருவாசகத்தில் பாடியுள்ளார்.

பசு என்பது பாசத்தால் கட்டுண்டது. எனப் பொருள்படும். பசு உயிர், ஆன்மா ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகின்றது. உயிர்கள் எண்ணற்றவை. அறிவித்தால் மட்டும் அறியக்கூடியவை. எனவே அவை சிற்றறிவை உடையன எனக் கூறப்படுகின்றன.. உயிர்கள் சார்ந்ததன் வண்ணம் உள்ள பொருள் ஆகும். உயிர்கள் வினைகளைச் செய்வதன் காரணமாகப் பல பிறவிகளை எடுக்கின்றன. இக்கருத்தை மாணிக்கவாசகர்,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகி
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் ......"

என்று பாடியுள்ளார்.

உயிர்களின் இறுதி இலட்சியம் இறைவனை அடைதலாகிய முத்தியைப் பெறுதலாகும். உலகப்பொருள்களால் பெறப்படும் இன்பங்கள் சிற்றின்பங்கள் என்று தெளிந்து பேரின்பப் பொருளாகிய இறைவனை அடைவதற்கு உயிர்கள் முயற்சி செய்ய வேண்டும்.

பதி பேரறிவுடையது. பசு அறிவித்தால் மட்டும் அறியும் திறனுடையது. பசு பாவங்களிலிருந்து நீங்கி பதியின் அருள் பெற்று முத்தியடைவதற்காக பதி வழிகாட்டுகின்றது. முத்தி நிலையில் பதியுடன் பசு இணைகின்றது. ஆனால் பதியின் இயல்பும் பசுவின் இயல்பும் தனித்தனியே காணப்படும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய தொழில்களைப் புரியும் இறைவனே எக்காலமும் ஆன்மாக்களின் புகலிடமாக விளங்கு கின்றான். இதன் மூலம் பதிக்கும் பசுவுக்கும் உள்ள தொடர்புகளை விளங்கிக் கொள்ள முடியும்.

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

01) சைவசித்தாந்தம் கூறும் முப் பொருள்கள் எவை?
02) பதியின் இயல்புகள் இரண்டினைக் கூறுக.
03) பசுவின் இயல்புகள் இரண்டினைக் கூறுக.
04) பசுவின் இறுதி இலட்சியம் யாது?
05) பதிக்கும் பசுவிற்கும் இடையிலான தொடர்பு ஒன்றைத் தருக.

## ௐ செயற்பாடு

* பதியின் இலக்கணம், பசுவின் இலக்கணம், பதிக்கும் பசுவிற்கும் இடையிலான தொடர்புகள் என்பவற்றை உள்ளடக்கிய பேச்சு ஒன்றைத் தயார் செய்து பேசிக்காட்டுங்கள்.

## பாடச் சுருக்கம்

* சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் அழிவில்லாதவை, அநாதியானவை.

* பதி சொரூபலக்கணம், தடத்தலக்கணம் என இரண்டு இலக்கணங்களை உடையது.

* உயிர்கள் பல்வேறு இயல்புகளை உடையது. அதன் இறுதி இலட்சியம் முத்தியைப் பெறுதலாகும்.

* பதி முத்திக்கு வழிகாட்டுவதன் மூலம் பசுவுடன் தொடர்பைக் கொண்டிருக்கின்றது.

# 14 பெண் தெய்வங்கள்

எமது வழிபாட்டு முறைகள் ஆகமம் சார்ந்தன என்றும், ஆகமம் சாராதன என்றும் இரு வகைப்படும். ஆகமம் சார்ந்ததில் கிரியைகளும், ஆகமம் சாராததில் சடங்குகளும் அடங்குகின்றன. ஆகமம் சாராவழிபாடு பல பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன. நாட்டார் வழிபாடு, கிராமிய வழிபாடு, ஊர்த்தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, மலைத்தெய்வவழிபாடு, எல்லைப்புறத்தெய்வ வழிபாடு என்பன அவற்றுள் சிலவாகும். இவ்வாறு பல பெயர்களால் ஆகமம் சாராவழிபாடு அழைக்கப்பட்டாலும் இதில் வழிபடப்படுகின்ற தெய்வங்களை நாட்டார் தெய்வங்கள் என அழைப்பர்.

நாட்டார் தெய்வ வழிபாட்டில் சடங்குகள் இடம்பெறும். இச்சடங்குகள் ஆண்டுப் பொங்கலன்றே மேற்கொள்ளப்படும். இச்சடங்கை பூசாரி என்பவரே நிகழ்த்துவார். ஆண்டுப் பொங்கல் பஞ்சாங்கம் பார்த்தே நடாத்தப்படும்.பெரும்பாலும் மாசி மாதம் தொடக்கம் வைகாசி மாதத்திற்குள் இது இடம்பெறும்.ஆண்டுப் பொங்கலைத் தவிர செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை போன்ற தினங்களில் விளக்கும் வைக்கப்படும். இத்துடன் பண்டிகை காலங்களிலும் சிறுமடை, விளக்கு வைத்தல் போன்றவற்றிலும் இத்தெய்வங்கள் வழிபடப்படும்.

நாட்டார் தெய்வங்கள் குளக்கரைகள், வயல்வெளிகள், ஆற்றோரங்கள், மரநிழல்கள் தெருவோரங்கள் என்பவற்றில் குடிகொண்டிருக்கும். பெரிய கட்டடங்களைக் காண முடியாது. பந்தல் அமைப்பான சிறுகட்டடங்களில் குடிகொண்டிருப்பதால் நித்திய வழிபாடு, ஆசாரங்கள் பெரிதும் கைக்கொள்ளப்படுவதில்லை. மந்திர உச்சாடனங்கள் போன்றவற்றால் இவை வழிபடப்படுகின்றன. கற்கள், மரங்கள், புற்றுக்கள், தடிகள், சூலம் என்பவற்றில் இத்தெய்வங்கள் காணப்படும்.

இவ்வழிபாட்டில் சடங்குகள் பிரதான இடத்தைப் பெற்றாலும் இவற்றைப் பூசாரி குறித்த தெய்வத்தின் உத்தரவு பெற்றே மேற்கொள்வார். இச்சடங்கை பிரதேச ரீதியாக உட்படுத்தி பின்வருமாறு எடுத்துக்கூறலாம். ஊர்காவல் செய்தல், பாக்குத் தண்டுதல், பண்டம் எடுத்தல், மடைபரவுதல், தூளிபிடித்தல், சந்தனக் காப்பிடல், பரிகலம் அழைத்தல், தெய்வமாடல், தாலாட்டுப்போடுதல், கட்டுச் சொல்லுதல், குளிர்த்திப்பாடல் பாடல், பலியிடல், நூல்முடிதல், கழிப்புக் கழித்தல், தண்ணீர் ஓதிக் கொடுத்தல், தீப்பள்ளம் ஏறுதல், வழிவிடுதல் என்பன இவற்றுள் சிலவாகும்.

இச்சடங்குகள் சில பாடல்கள் வாயிலாகவும் மேற்கொள்ளப்படும். இதனைச் சடங்குப்பாடல்கள் என்று அழைப்பர். இச்சடங்குகளுக்கு கிராமிய இசைக்கருவிகளான பறை, உடுக்கு, சங்கு, சேமக்கலம், தப்பு போன்றன இசைக்கருவிகள் பயன்படுத்தப்படும்.



இந்த வழிபாட்டினூடாகவே கூத்து. கரகாட்டம், காவடி, கும்மி, கோலாட்டம், மயிலாட்டம், பாம்பாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரை யாட்டம், மோகினி யாட்டம் என்பன வளர்ச்சியடைந்தன. அத்துடன் கிட்டிப்புள், கிளித்தட்டு, பம்பரம் ஆடுதல், தாயம் ஆடுதல், வாரோட்டம், போர்த்தேங்காய் அடித்தல், சடுகுடு, பாண்டி விளையாடல், கண்ணாம்பூச்சி, கொக்கான் வெட்டுதல், கொம்பு முறித்தல் போன்ற கிராமிய விளையாட்டுகளும் வளர்ச்சியடைந்தன.

நாட்டார் தெய்வங்களை ஆண்தெய்வங்கள், பெண் தெய்வங்கள், கற்கள் என மூன்று வகையாகப்பிரிக்கலாம். ஆண்தெய்வங்கள் என்ற வகையில் ஐயனார், வைரவர், வீரபத்திரர், அண்ணாமார் பெரிய தம்பிரான், முனியப்பர், காத்தவராயன், நரசிங்கர், வதனமார், பூதராயர், பிறத்திசங்கிலி, மதுரை வீரன், றோதைமுனி, கம்பிமுனி, வால் ராஜா, அனுமன், கல்லறிமாடன், சுடலைமாடன், கறுப்பசாமி, மாடாசாமி என்பவற்றைக் கூறலாம். மாரியம்மன், கண்ணகியம்மன்,


திரௌபதியம்மன், நாச்சிமார், காளி, பேச்சியம்மன், சீதையம்மன், கடலாட்சியம்மன், கொத்தி, வராகி, பிடாரி என்பவற்றை பெண்தெய்வங்களுக்குள்ளும் கற்தெய்வங்களில் எல்லைக்கல், நாட்டார்கல் என்பவற்றையும் அடக்கிக் கொள்ளலாம். இவ்வாறன தெய்வங்கள் குலதெய்வங்கள், வீரவணக்கதெய்வங்கள், குளிர்த்தித் தெய்வங்கள் என்ற வகைகளில்தான் வழிபடப்படுகின்றன. இந்த மூன்று வகையான நாட்டார் தெய்வங்களில் பெண் தெய்வங்களான கண்ணகியம்மன், மாரியம்மன், திரௌபதியம்மன் ஆகியவற்றின் வழிபாட்டுச் சிறப்புக்களைத் தனித்தனியாகப் பார்ப்போம்.

### அ) கண்ணகியம்மன் :-



நாட்டார் பெண் தெய்வங்களுள் கண்ணகியம்மன் குறிப்பிடத்தக்கவள். பரந்தளவில் இவளுக்கான ஆலயங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் இவள் வழிபடப்பட்டாலும் மட்டக்களப்பில்தான் இவ் வழிபாட்டின் சிறப்பினைக் காணமுடியும். சிங்கள பௌத்த மக்களும் பத்தினி என்று இவளை வழிபடுகின்றனர்.

பத்தினி கோயில்களும் பல உள்ளன. கண்ணகியம்மன் வழிபாட்டில் ஊர்காவல் பண்ணுதல், பாக்குத்தெண்டுதல், கதவு திறத்தல், கல்யாணக்கால் வெட்டுதல், கும்பம் வைத்தல், ஏடு படித்தல்நெல்லுக் குற்றுதல், பொங்கல் வைத்தல், மடைபரவுதல், குளர்த்திப்பாடல் என்பன இடம்பெறும். அத்துடன் கண்ணகி வழக்குரை காவியம்படித்தல், கோவலன் கதைகூறல், சிலம்பு கூறல், காவடி எடுத்தல், போர்த்தேங்காய் அடித்தல், கும்மியடித்தல், கூத்தாடல், பிள்ளைவிற்றல், வழிவிடுதல் போன்றனவும் இடம்பெறும்.




காவல் தெய்வம் ஒழுக்கத்துக்குரிய தெய்வம் என்ற வகைகளில் இவள் வழிபடப்படுகின்றாள். நினைத்த காரியம் கைகூடல். கண்ணூறுபடாதிருத்தல் எதிரிகளை வெல்லுதல் போன்றவற்றின் சிறப்புக்களைத் தருபவள். இதனால் புவனேஸ்வரி, இராஜராஜேஸ்வரி போன்ற பெயர்களாலும் வழிபடப்படுகின்றாள்.

**ஆ) மாரியம்மன் :-**



நாட்டார் பெண்தெய்வங்களுள் மாரியம்மனும் அடக்கப்படுகிறாள். முத்துமாரி. ஆங்காரமாரி என்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டு வழிபடப்படுகின்றாள். மாரி என்றால் மழை எனப்படும். அதனால் மழையைத்தருபவள் என்றும் அழைக்கப்படுகின்றாள். மாரியம்மன் வழிபாடு யாழ்ப்பாணம், வன்னி, மலையகம் போன்ற பிரதேசங்களில் காணப்பட்டாலும், இவ்வழிபாடு மலையகத்திற்கே சிறப்பானதாகும்.

ஆங்காங்கே இவளுக்கான ஆலயங்கள் பல உண்டு. நேர்த்தி வைத்து குளிர்த்தி செய்வதே இவ்வழிபாட்டிற் சிறப்பம்சமாகும். இவ்வழிபாட்டில் வேப்பிலை முதன்மைப்படுத்தப்பட்டமையால் இவள் வேப்பிலைக்காரியாகவும் கருதப்படுகின்றாள். பொங்கல் வைத்தல், மடைபரவுதல், நீர்க்கஞ்சி வார்த்தல், பாற்செம்பு எடுத்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், கண்மடல் எடுத்தல், அலகுபாய்ச்சல், முள்மிதியடி எடுத்தல், காவடி எடுத்தல் என்பன பிரதான வழிபாட்டு முறைகளாகும். இவ்வழிபாட்டுமுறைகள் யாவும் கைகளில் வேப்பிலை வைத்தே மேற்கொள்ளப்படும். அத்துடன் மாரியம்மன் தாலாட்டுப்பாடுதல். கரகமாடுதல் என்பனவும் பறை, உடுக்கு என்பவற்றின் இசைக்கேற்ப வழிபடப்படுவாள். சில பிரதேசங்களில் இவ்வழிபாட்டுடன் தொடர்புடைய காத்தவராயன் கூத்தும் நேர்த்திக்கடன் செலுத்தும் வகையில் இடம்பெறும்.




கண்ணோய், அம்மை, உடம்பில் பருக்கள், பாலுண்ணி, கண்ணில் பூ விழுதல், கக்குவான போன்ற நோய்கள் வராமலிருக்க நாளாந்தக் கடமைகள் நிறைவேற்றுதல், பில்லிசூனியம் போன்றவற்றைத் தடுப்பவள் என்ற காரணங்களால் இவள் வழிபடப்பட்டு வருவதால் சிறந்த பெண் தெய்வமாகக் கருதப்படுகின்றாள்.

இ) திரௌபதியம்மன் :-

நாட்டார் பெண் தெய்வங்களுள் காவல் தெய்வமாக போற்றப்படுகின்றாள். இவளுக்கான ஆலயங்கள் மிகக் குறைவாகும். இருந்தும் மட்டக்களப்பு, உடப்பு போன்ற பிரதேசங்களில் ஒரு சில ஆலயங்களைக் காணமுடியும். இந்த வழிபாடு உடப்பிலே சிறந்த முறையில் மேற்கொள்ளப்படுகின்றது. பதினெட்டு நாட்கள் கொண்ட பொங்கலே இதன் சிறப்பம்சமாகும். பாண்டவர்கள் வாழ்க்கையுடன் தொடர்பான சம்பவங்கள் இவ்வழிபாட்டில் காணப்படுகின்றன. சகாதேவன் தவிர்ந்த ஏனைய பாண்டவர்களுக்கான விக்கிரகங்கள் வைத்து வழிபடப்படுகின்றன. பதினெட்டாம் நாட்சடங்கின் போது பாண்டவர் வரலாற்றுடன் தொடர்பான பாடல்கள் படிக்கப்படும். அத்துடன் பாண்டவர்வனவாசம் செல்லுதல் மிகச் சிறப்பாக பிரதேசமக்களால் நடாத்தப்படும். தீப்பள்ளம் ஏறுதல் என்ற பூமித்தல் மிகச்சிறப்பானதாகும். பூசாரியால் மந்திரித்து தீயில் எறியப்படும் பூக்களும் இலைகளும் நீண்ட நேரம் சென்றாலும் வாடாது காணப்படுதல் வழிபாட்டின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது எனலாம்.





திரௌபதியம்மன் வழிபாட்டினூடாக கொடிய நோய்கள் தடுக்கப்படுதல், வேளாண்மை பெருகுதல், பட்டி பெருகுதல், குடும்ப சமூக ஒற்றுமைகள் மேலோங்குதல், பெண்கள் சமூகத்தில் மதிக்கப்படுதல் போன்றன மேலோங்கும்.

## பயிற்சிகள்

**01. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

(பூசாரி, கும்மியும், கலை ஆடுதல், மாத்தளையில், பறை, வயலின் உடுக்கு, பரதம்.)

01) கிராமிய இசைக்கருவிகளுள் ......................................., ....................... என்பனவாகும்.

02) நாட்டார் தெய்வ வழிபாட்டில் ஆண்டுப் பொங்கலை ....................................... மேற்கொள்வர்.

03) நாட்டார் தெய்வ வழிபாட்டில் சடங்குகளில் ஒன்றாக ....................................... இடம்பெறுகிறது.

04) மலையகத்தில் பிரசித்தி பெற்ற முத்துமாரியம்மன் ஆலயம் ....................................... காணப்படுகின்றது.

05) கிராமியக் கலைகளுள் ....................................... ஒன்றாகும்.

**02. சுருக்கமான விடை தருக.**

01) எமது வழிபாட்டு முறைகள் இரண்டும் யாவை?

02) உமது பிரதேசத்தில் வழிபடப்படும் ஆண் தெய்வங்கள் இரண்டைப் பெயரிடுக.

03) கிராமிய விளையாட்டுக்கள் இரண்டைத் தருக.

04) கண்ணகியம்மன் வழிபாடு சிறப்பாக நடைபெறும் பிரதேசம் யாது?

05) நாட்டார் தெய்வங்களை வழிபடுவதால் ஏற்படும் சமூக நன்மைகள் இரண்டைத் தருக.

## ॐ செயற்பாடு

01) “நாட்டார் தெய்வங்கள்” என்ற தலைப்பில் ஐந்து நிமிடங்களில் பேச்சு ஒன்றை நிகழ்த்துக.

02) திரௌபதியம்மன் வழிபாட்டுடன் தொடர்பான பாண்டவர் வனம் புகுதலை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

03) காவடி, கரகாட்டம் என்பவற்றை வகுப்பறையில் ஆடிக்காட்டுக.

## பாடச்சுருக்கம்

* நாட்டார் தெய்வங்கள் சடங்கிற்கு முதன்மை கொடுத்து வழிபடப்படுகின்றன.

* சடங்கு பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டது.

* நாட்டார் தெய்வ வழிபாட்டில் ஆண்டுப் பொங்கல் முக்கியமானது.

* நாட்டார் தெய்வங்களை ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள், கற்கள் என மூன்று வகையாக வகைப்படுத்திக் கூறமுடியும்.

* நாட்டார் பெண் தெய்வங்களுள் கண்ணகியம்மன், மாரியம்மன், திரௌபதியம்மன் என்பன முக்கியமானவை.

# 15 ஈழத்துச் சைவ ஆலயங்கள்

அ) விநாயகர் ஆலயம்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் :-



இலங்கையில் பிரசித்தி பெற்ற விநாயகர் ஆலயங்கள் பல உள்ளன. அவற்றுள் மருதடி விநாயகர் ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலயம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள மானிப்பாயில் முக்கோணத்திடர் என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்திற்கு முற்பட்டதென்று கூறுவர். சிதம்பரத்தைப் போல யோக நிஷ்டை கைவரப்பெற்ற சிவயோகி ஒருவரால் ஸ்தாபிக்கப்பட்டு வந்த புண்ணிய தலம் என்று கூறுவர். இவ்வாலயம் போர்த்துக்கேயர் காலத்தில் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. எனினும் மறைவாக பூசைகள், வழிபாடுகள் நடைபெற்று வந்தன. அதனைக்கண்ட தியாகராயக் குருக்கள்

அடியார்களின் வழிபாட்டுக்காக விநாயகர் சிலை ஒன்றை வைத்துப் பூசை செய்து வந்தார். அத்திருவுருவமே ஆலயத்தில் இருக்கும் சிவன் கோயிலுக்கும் மேற்கே வைக்கப்பட்டு பூசை செய்யப்படுகிறது.

மருதமரத்தின் கீழ் மேற்குத் திசையை நோக்கியவாறு கர்ப்பக்கிரகமும் அர்த்த மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு வீரகத்தி விநாயகரின் அருளாட்சி நடைபெறுகின்றது. இவ்வாலயச் சூழலில் பல மண்டபங்களும் காணப்படுகின்றன.

நித்தியபூசை, திருவிழாக்கள், நித்திய பொங்கல் என்பன இவ்வாலயத்தில் சிறப்பாக நடைபெறுகின்றன. பங்குனித் திங்கள் பதினைந்தாம் நாள் கொடியேற்றமும் சித்திரைத்திங்கள் முதலாம் நாள் தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். வருடப்பிறப்பன்று நடைபெறும் இவ்வாலயத்தின் தேர்த்திருவிழா சிறப்பு மிக்க பெருவிழா ஆகும். விநாயகர் சதுர்த்தி, விநாயகர் சஷ்டி ஆகிய விரதகாலங்களில் இவ்வாலயத்தில் விசேட பூசைகள் வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

01) மருதடி விநாயகர் ஆலயம் எங்கு அமைந்துள்ளது?
02) மருதடி விநாயகர் ஆலயக் கொடியேற்றம் எப்போது நடைபெறுகின்றது?
03) இவ்வாலயம் எத்திசையை நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ளது?
04) இங்கு நடைபெறும் விசேட விழாக்கள் இரண்டு தருக.

## செயற்பாடு

01) உங்கள் பிரதேசத்தில் உள்ள விநாயகர் ஆலயங்களை எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

02) மருதடி விநாயகர் ஆலய வரலாற்றுக் கதைகளைத்தொகுத்து எழுதுக.

## பாடச் சுருக்கம்

* மருதடி விநாயகர் ஆலயம் வரலாற்றுச் சிறப்புமிக்கது.
* போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட ஆலயங்களில் இதுவும் ஒன்று.
* இவ்வாலயம் மேற்கு நோக்கிய வாயிலை உடையது.
* மகோற்சவம், விசேட விழாக்கள் என்பன சிறப்பாக இவ்வாலயத்தில் நடைபெறுகின்றன.
* இவ்வாலயத்தின் தேர்த்திருவிழா சித்திரை வருடப்பிறப்பன்று நடைபெறுவது சிறப்புமிக்கதாகும்.

## ஆ) சிவாலயம்

### திருக்கேதீச்சரம்.



இலங்கையின் மன்னார் மாவட்டத்தின் மாந்தை என்னும் பிரிவில் பாலாவி தீர்த்தக்கரையில் திருகேதீச்சர ஆலயம் அமைந்துள்ளது. கேது என்னும் கிரகம் வழிபட்ட தலம் என்ற காரணத்தால் திருகேதீச்சரம் என்ற பெயருடன் விளங்குகின்றது. இந்த ஆலயத்தை மயன் மாதுவட்டா என்னும் தேவதச்சர்கள் நிர்மாணித்தார்கள் என்று கர்ண பரம்பரைக் கதை குறிப்பிடுகின்றது. அருச்சுனனும் இத்தலத்தை வழிபட்ட செய்தியை மகாபாரதக் கதைமூலம் அறிய முடிகின்றது.

இத்தகைய சிறப்புடைய ஆலயம் 1690 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரினால் அழிக்கப்பட்ட பின்னர் கடற் பெருக்கால் இருந்த இடமும் மறைந்தது. ஏறத்தாள இருநூறு ஆண்டுகள் கழிந்த பின்னர் 1894 ஆம் ஆண்டு நடைபெற்ற அகழ்வராய்ச்சியின் பயனாக இவ்வாலயம் கண்டு பிடிக்கப்பட்டது.

இவ்வாலயத்தின் இறைவன் திருக்கேதீச்சரநாதன் என்றும் தேவி கௌரியம்பாள் என்றும் அழைக்கப்படுகின்றனர். தல விருட்சம் வன்னிமரமாகும். அத்தலத்தின் மீது சுந்தரரும், சம்பந்தரும் இராமச்சரத்தில் இருந்தவாறே ஆலயச் சூழல், செழிப்பு, இறைவன், தேவி, தீர்த்தப் பெருமைகளையும் போற்றிப் பாடியுள்ளனர். இங்கு ஆறுகாலப் பூசைகள் நடைபெறுகின்றது. மகாசிவராத்திரி, பங்குனி உத்தரம் போன்ற பூசைகளும் நிகழ்கின்றன. இவ்வாலய மகோற்சவம் வைகாசி விசாகத்திற்குப் பத்து நாட்களுக்கு முன்பாக ஆரம்பித்து வைகாசி விசாகத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெறும்.

இவ்வாலயத்தருகில் அடியார்கள் தங்குவதற்கு சம்பந்தர் மடம், சுந்தரர் மடம், சிவராத்திரி மடம், மாணிக்கவாசகர் மடம், கௌரீசர் மடம், திருவாசக மடம், நாவலர் மடம், கதிர்காமத் தொண்டர் சபை மடம் என்பன காணப்படுகின்றன. தட்சண கைலாய மான்மியம், மாந்தைப்பள்ளு, திருக்கேதீச்சரப் பதிகம், திருக்கேதீச்சரநாதர் கிள்ளைவிடுதூது, திருக்கேதீச்சர நாதர் ஊஞ்சல், திருக்கேதீச்சர புராணம் என்பன இவ்வாலயத்தின் சிறப்பைக் கூறும் நூல்களும் பிரபந்தங்களுமாகும்.

## பயிற்சிகள்

01) திருக்கேதீச்சர ஆலயம் எங்கு அமைந்துள்ளது?
02) இத்தலத்தின் மீது தேவாரம் பாடிய நாயன்மார்கள் யாவர்?
03) திருக்கேதீச்சர ஆலயத்தின் மகோற்சவம் எந்த மாதத்தில் நடைபெறுகின்றது?
04) இவ் ஆலயத்தின் தீர்த்தம் யாது?
05) திருக்கேதீச்சர ஆலயத்தைச் சூழவுள்ள இரண்டு மடங்களைக் குறிப்பிடுக.

## ௐ செயற்பாடு

01) இலங்கையிலுள்ள சிவாலயங்களைப் பட்டியற்படுத்தி அவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
02) திருக்கேதீச்சர ஆலயத்தின் சிவராத்திரி விழாவின் சிறப்பினை ஆசிரியர் உதவியுடன் கேட்டறிந்து அதனைக் குழுவாக செயற்பட்டு தொகுத்து எழுதுக.

## பாடச் சுருக்கம்

* திருக்கேதீச்சர ஆலயம் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலமாகும்.
* போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட இவ்வாலயம் மீண்டும் புனரமைக்கப்பட்டு பூசைகள், வழிபாடுகள் நடைபெறுகின்றன.
* இவ் ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்பு உடையது.
* திருக்கேதீச்சர ஆலயச் சூழலில் பல மடங்கள் காணப்படுகின்றன.
* இவ் ஆலயச் சிறப்புக்களைக் கூறும் நூல்களும் பிரபந்தங்களும் உள்ளன.

## இ) அம்மன் ஆலயங்கள்.



இலங்கையிலுள்ள அம்மன் ஆலயங்களுள் நயினை நாகபூசனி அம்மன் ஆலயம், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம் மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயம் என்பன குறிப்பிடத்தக்கன. இந்த அம்மன் ஆலயங்கள் யாவும் வரலாற்றுச் சிறப்பு மிக்கவையாகும். அத்துடன் மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புகளையும் கொண்டவையாகும்.

நயினை நாகபூசனி அம்மன் ஆலயம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்காக உள்ள தீவுக் கூட்டங்களுள் ஒன்றான நாகதீபம் எனப்படும் நயினாதீவில் அமைந்துள்ளது. இங்குள்ள அம்மன் நயினை நாகபூசனி, நாகம்பாள், நாகேஸ்வரி என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றாள். இவ்வாலயத் தல விருட்சம் வன்னி மரம், தீர்த்தம் சித்தாமிர்தபுட்கரணி ஆகும். தினமும் நான்கு காலப்பூசைகள் இடம்பெறும். ஆனிமாதத்தில் பதினைந்து நாட்கள் கொண்ட மகோற்சவம் இடம் பெறுகின்றது. நயினை நாகபூசனி அம்மன்மீது பலர் பல பிரபந்தங்களைப் பாடியுள்ளனர்.



K&S 1233 F.N-8



யாழ்ப்பாணத்திலிருந்து வடக்கு நோக்கி காங்கேசன்துறைக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் காங்கேசன்துறைக்குத் தெற்கில் ஐந்து கிலோமீற்றர் தொலைவில் தெல்லிப்பளை என்ற கிராமத்தில் துர்க்கை அம்மன் ஆலயம் காணப்படுகின்றது. பதினெட்டாம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆலயம் 1865, 1981 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கும்பாபிசேகங்களின் மூலம் பிரசித்தி பெற்றது.

இங்கு அடியார்கள் தாம்பாளத்தில் சக்கரபூசை செய்து வழிபடும் சிறப்புப் பெற்றது. இவ்வாலயத்தின் தல விருட்சம் இலுப்பை மரம், தீர்த்தம் துர்க்கா புஷ்கரணி என்பதாகும். ஆவணி மாதத்தில் பன்னிரெண்டு நாட்கள் கொண்ட மகோற்சவம் இடம்பெறும். பௌர்ணமி, மகாசிவராத்திரி, மாசிமகம், நவராத்திரி, கார்த்திகைத் திருவிளக்கு என்பன இங்கு சிறப்பாக நடைபெறும்.



இலங்கைத் தீவின் மத்திய மலைப்பிரதேசத்தின் வடக்குவாசல் எனப்படும். மாத்தளை நகரின் மத்தியில் முத்துமாரி அம்மன் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. பதினெட்டாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட இந்த ஆலயம், 1958 இல் புதுப்பிக்கப்பட்டு 1960, 1973 ஆம் ஆண்டுகளில் கும்பாபிடேகம் நடந்தேறியது. இருபத்தொரு நாட்கள் கொண்ட மகோற்சவம் இடம்பெறுகிறது. பஞ்சரத உற்சவம் சிறப்பானது.

இவ்வாறான அம்மன் ஆலயங்களைத் தவிர நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயம், திருகோணமலை பத்திரகாளி அம்மன் ஆலயம் மட்டகளப்பு கல்லடி உப்பேடை பேச்சியம்மன் ஆலயம், பாண்டியிருப்பு திரௌபதி அம்மன் ஆலயம் என்பனவும் சிறந்த அம்மன் ஆலயங்களாகும்.

## பயிற்சிகள்

01) இலங்கையிலுள்ள அம்மன் ஆலயங்கள் இரண்டினைத் தருக.
02) நயினை நாகபூசனி அம்மன் ஆலயத்தின் தீர்த்தம் யாது?
03) தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தின் தலவிருட்சம் எது?
04) மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தில் கும்பாவிசேகம் நடைபெற்ற காலங்கள் எவை?
05) நயினாதீவு நாகபூசனி அம்மன் வேறு எப் பெயர்களால் அழைக்கப்படுகின்றாள்?

## ௐ செயற்பாடு

01) இலங்கையிலுள்ள அம்மன் ஆலயங்களைப் பட்டியல்படுத்தி, அவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

* பிரசித்தி பெற்ற அம்மன் ஆலயங்கள் பல உள்ளன.
* இவ்வாலயங்கள் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புடையவை.
* மகோற்சவங்கள், விசேட விழாக்கள் அம்மன் ஆலயங்களில் சிறப்பாக நடைபெறுகின்றன.

## ஈ) முருகன் ஆலயங்கள்.

### சித்தாண்டி முருகன் ஆலயம் :-

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடபால் ஏறத்தாள பத்தொன்பது கிலோமீற்றர் தொலைவில் சித்தாண்டி என்னும் கிராமத்தில் சித்தாண்டி முருகன் ஆலயம் அமைந்துள்ளது.

பல நூற்றாண்டுகளுக்கு முன் சிகண்டி என்னும் முனிவர் பெருமான் இங்கு வந்து தம்மிடமிருந்த இரும்பு வேலாயுதத்தை வழிபட்டாரெனவும், இம்முனிவர் பெருமான் பல அற்புதச் சித்துக்களைச் செய்தமையால் சித்தர் எனவும் நீறு பூத்த மேனியுடனும் உருத்திராக்கக் கோலத்துடன் விளங்கியமையால் ஆண்டி என்ற பெயரும் கொண்டு அழைக்கப்பட்டார். இவ்விரு பெயரும் சேர்ந்து (சித்து + ஆண்டு) "சித்தாண்டி" எனக் காரண இடுகுறிப் பெயராக அமைந்ததாகக் கூறப்படுகிறது.

இச் சித்தாண்டி முருகன் ஆலயத்தில் மகோற்சவம் ஆவணிமாத பிரதமையில் கொடியேறி பதினைந்து நாட்கள் திருவிழாவின் பின் பௌர்ணமி தினத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறும். இவ் உற்சவத்தில் முதல் மூன்று நாட்களும் கோயில் திருவிழாக்களாகும். நான்காம் நாள் முருகன் வள்ளியம்மை தெய்வானை சமேதராய் பவனி வருவார். ஏழாம் நாள் "பட்டியன்குடி" திருவிழாவும் பன்னிரண்டாம் நாள் "மயில்கட்டுத் திருவிழாவும்" கொடியிறக்கத்தன்று "இடும்பன் பூசையும்" நடைபெறும் இதில் "பூசணிக்காய் பலியிடுதல்" முக்கிய நிகழ்வாகும்.


இங்கு தெய்வானை அம்மன் கோவிலில் மட்டும் திரைதிறக்கப்படாது பூசை நடைபெறும். மூலஸ்தானமும் மற்றைய பரிவாரக் கோயில்களும் வள்ளியம்மன் கோவிலும் பூசையின் போது திரை திறக்கப்பட்டு பூசை நடைபெறும்.

தீர்த்தோற்சவத்தினத்தன்று மாலை தலைப்பற்றோலை, குடை, கொடி, ஆலவட்டம், தீவட்டி முதலிய ஆசாரங்களுடன்

வண்ணக்காரரான வன்னியனார் வீட்டுக்குச் செல்வதும், வன்னியனார் அனைவருக்கும் உணவு வழங்கி கௌரவிப்பதும் வழக்கமாகும். பின்னர் பலகாரப் பெட்டிகளுடன் வள்ளியம்மன் கோவிலுக்கு அனைவரும் வந்து சேர்வர். இது வள்ளியம்மனுடைய திருமணத்தை நினைவூட்டுவதாக அமையும்.

இங்கு பாரம்பரிய கலைநிகழ்வுகளான வசந்தன் கூத்து, காவடியாட்டம், கரகம், கொம்பு விளையாட்டு என்பனவும் விசேட தினங்களான தைப்பொங்கல், தைப்பூசம், வருடப்பிறப்பு, கார்த்திகை விளக்கீடு, சிவராத்திரி, கந்தசஷ்டி, விநாயகர் சதுர்த்தி போன்றனவும் இடம்பெறுகின்றன.

கோவில் பற்றிய தல புராண நூல் ஒன்று ஆரப்பற்றை அழகேச முதலி என்பவரால் சித்தாண்டி தலபுராணம் என்னும் மகுடமிடப்பட்டு சிறப்பிக்கப்பட்டுள்ளது. திருவாளர் பிள்ளையான் சிவலிங்கம், பணிக்கன்-மயில்வாகனம் என்போர்; தனிப்பிரபந்தப் பாடல்களும், பட்டயம் என்னும் தலைப்பற்று ஓலையிலான ஏடு ஒன்றும் இக்கோயில் பற்றிய பண்டைய வரலாற்றுக் குறிப்புகள், மானியங்கள், நடைமுறைகள் பற்றிக் குறிப்பிடுகிறன.



## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

01) சித்தாண்டி முருகன் ஆலயம் எங்கு அமைந்துள்ளது?
02) "சித்தாண்டி முருகன்" என்ற பெயர் எவ்வாறு ஏற்பட்டது?
03) இவ் ஆலயத்தின் மகோற்சவம் எப்போது நடைபெறுகின்றது?
04) சித்தாண்டி முருகன் ஆலயத்தில் நடைபெறும் பாரம்பரிய கலைநிகழ்ச்சிகள் மூன்று தருக.

## ௐ செயற்பாடு

01) இலங்கையிலுள்ள முருகன் ஆலயங்களையும் அவற்றின் அமைவிடங்களையும் அட்டவணைப்படுத்துக.
02) சித்தாண்டி ஆலயத்தில் நடைபெறும் பாரம்பரிய நடைமுறைகளைத் தொகுத்து எழுதுக.

## பாடச் சுருக்கம்

* சித்தாண்டி முருகன் ஆலயம் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயமாகும்.
* ஆலயத்தின் மகோற்சவம் ஆடிமாதப் பிரதமையில் ஆரம்பமாகி பதினைந்து நாட்கள் நடைபெறும்.
* தீர்த்தத்திருவிழா தினத்தன்று விசேட நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.
* ஆலய விழாக்களின் போது பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.
* சித்தாண்டி முருகன் மீது பலர் பாடல்கள் பாடியுள்ளனர்.

**பேராதனைக் குறிஞ்சிக் குமரன் ஆலயம் :-**



மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி நிலம் எனப்படும். குறிஞ்சி நிலத்தின் அழகுத் தெய்வம் முருகன். அவன் குன்றுதோறும் அமர்ந்து குறைதீர்க்கும் குமரன். ஈழத்தில் உள்ள முருகன் கோயில்களில் பேராதனை குறிஞ்சிக் குமரன் ஆலயமும் ஒன்றாகும்.

இவ்வாலயம் இயற்கை எழில்கொஞ்சும் மலையகத்தின் தலைநகரான கண்டியிலிருந்து நான்கு மைல் தொலைவில் பேராதனைப் பல்கலைக்கழகத்தை அடுத்துள்ள மலைப்பாங்கான இடத்தில் அமைந்துள்ளது. இலங்கையின் தேசியப் பல்கலைக்கழகம் என்ற சிறப்பைப் பெற்ற பேராதனைப் பல்கலைக்கழகம் இளம் சமுதாயத்தினரிடையே சமய உணர்வுகள், மனத்திருப்தி, சமூக உறவுகளைப் பேணுதல் ஆகிய நல்ல நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு அனைத்து மத மாணவர்களுக்கும் உரிய அந்தஸ்தினை வழங்கியுள்ளது. அவ்வகையில் இந்துப் பட்டதாரி மாணவர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோரின் ஆன்மீக வாழ்வு நலன் கருதி எழுந்ததே பேராதனைக் குறிஞ்சிக்குமரன் ஆலயம் ஆகும்.

போராதனைக் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தை அமைப்பதில் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் அளப்பரிய பணிகளை ஆற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்து மாணவர் சங்கம் 1952 ஆம் ஆண்டு பேராசிரியர் ரீ.ஆர்.வீ .மூர்த்தி அவர்களின் தலைமையில் உருவாகியது. ஆரம்பத்தில் கலைப்பீட அறை ஒன்றிலேயே சமய வழிபாடு இடம் பெற்றது. இந்துப் பட்டதாரி மாணவரின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக நெருக்கடி ஏற்பட்டது. அதனால் இந்துப்பட்டதாரி மாணவர்க்கென ஆலயம் ஒன்று அமைக்க வேண்டும் என்ற சிந்தனை ஏற்பட்டது.

1956 ஆம் ஆண்டில் இந்து மாணவர் சங்கத்தின் பெருந்தலைவராகப் பொறுப்பேற்ற பேராசிரியர் த.நடராசா அவர்கள் தமது தாயாரின் ஞாபகார்த்தமாக கோயில் திருப்பணிக்கு முதன் முதலில் நிதியை வழங்கினார். இவ்வாலயத் திருப்பணி வளர்ச்சிக்குப் பேராசிரியர் கனகசபாபதி பேரம்பலம் அவர்கள் அளப்பரிய பணியை ஆற்றியிருந்தார். பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோரின் அயராத முயற்சியினால் ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தாறாம் ஆண்டு கார்த்திகை மாதம் இருபத்தேழாந்திகதி ஆலயத்திற்கான அத்திவாரக்கல் நாட்டப்பட்டது. 1968 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் இருபத்து நான்காம் நாள் வியாழக்கிழமை அத்தநட்சத்திரம் பொருந்திய சுபமுகூர்த்த வேளையில் மகாகும்பாபிசேகம் நிறைவேறியது.

ஆலயத்தில் பிரதிட்டை செய்யப்பட்ட திருவுருவங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டுப் பக்தர்கள் புடைசூழ அடியவரின் பஜனைக் கோசம் வானதிர ஒலிக்க வவுனியா, அனுராதபுரம், மாத்தளை, ஊடாகக்கண்டி, கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயத்தை அடைந்து பின் பேராதனைக் குறிஞ்சிக்குமரன் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டன. இவ் ஆலயத்தின் சிற்பங்கள் இந்திய, இலங்கைச் சிற்பிகளின் கைவண்ணத்தில் உருவானவை.

இவ் ஆலயத்தின் மூல மூர்த்தி குறிஞ்சிக் குமரன் ஆவார். ஆலயத்தின் அயலில் ஓடுகின்ற மகாவலி கங்கையின் கிளை

ஆறு தீர்த்தமாகும். வெள்ளைக்காரப்பாதிரியார் ஒருவர் ஆலய அமைவிட அழகையும் அமைதியையும் கண்டு முருகன்பால் மனதைப்பறிகொடுத்து அங்கிருந்து தொண்டு செய்து வந்தமை இவ் ஆலயத்தின் சிறப்புகளில் ஒன்றாகும். விநாயகர், சிவன், நடேசர், விஷ்ணு, வைரவர், நவக்கிரகங்கள் ஆகிய பரிவாரத் தெய்வங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆலய விமானத்திலுள்ள சிற்பங்களில் தெய்வயானை திருமணம், முருகப் பெருமான் சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகளாகத் தோன்றிய காட்சி, மன்மதனை எரித்த காட்சி, முருகப் பெருமான் தந்தைக்கு உபதேசம் செய்த காட்சி என்பன குறிப்பிடத்தக்கவை. குறிஞ்சிக் குமரன் ஆலயத்தில் நித்திய பூசைகளும், நைமித்திய பூசைகளான நவராத்திரி, சித்திரா பௌர்ணமி, கந்தசஷ்டி, திருவெம்பாவை, தைப்பூசம், திருக்கார்த்திகை உற்சவம், நடேச தரிசனம், அலங்கார உற்சவம் ஆகியன வெகு சிறப்பாக நடைபெறுகின்றன.

இவ் ஆலயத்தின் நிருவாகம் பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக இந்து மாணவர்கள், இப்பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பட்டதாரி மாணவர்கள் ஆகியோரை உள்ளடக்கிய பொறுப்பாண்மைக் குழுவினால் நெறிப்படுத்தப்பட்டு வருகின்றது. மாணவர்களைப் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் மூலம் அரிய சாதனைகளை நிலைநாட்டலாம் என்பதற்குப் பேராதனைக் குறிஞ்சிக் குமரன் ஆலயம் ஓர் உதாரணமாகும்.

## பயிற்சிகள்

01) குறிஞ்சிக்குமரன் ஆலயம் எங்கே அமைந்துள்ளது?

02) குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் அனுட்டிக்கப்படும் விரதங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

03) இவ் ஆலயத்தில் காணப்படும் பரிவாரத் தெய்வங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

04) குறிஞ்சிக் குமரன் ஆலயத்தில் பிரதிட்டை செய்யப்பட்ட திருவுருவங்கள் எங்கிருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டன?

## செயற்பாடு

01) உங்கள் ஊரில் உள்ள முருகன் ஆலயங்களுக்குச் சென்று அவை தொடர்பான தகவல்களைச் சேகரித்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## பாடச் சுருக்கம்

* குறிஞ்சிக் குமரன் ஆலயம் பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ளது.

* பேராதனைக் குறிஞ்சிக் குமரன் ஆலயம் இந்து மாணவர்கள், விரிவுரையாளர்கள், பொது மக்கள் ஆகியோரின் ஆன்மீகத் தேவைகளை நிறைவேற்றி வருகிறது.

* ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட திருவுருவங்கள் மாவிட்டபுரத்தில் இருந்து கொண்டு வரப்பட்டவை.

* குறிஞ்சிக்குமரன் ஆலய விமானத்தில் முருக வரலாற்றுச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

* விசேட பூசைகள், விழாக்கள் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினால் நடாத்தப்படுகின்றன.

## பாடத்திட்டம்

**1.0 அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.** (24 பாடவேளைகள்)

1.1 கடவுள் ஒருவரே உண்மை என்பதைச் சமயக் கதைகள் ஊடாக விளக்கி அவற்றை வாழ்வில் பின்பற்றுவர்.
- **தாயுமானவர் கதை**

1.2 நாளாந்தக் கடமைகளை இறை சிந்தனையுடன் செய்வர்.
- **பாடசாலையில் சைவம்**
- பாடசாலையில் நாள்தோறும் கடைப்பிடிக்கும் சைவப்பழக்க, வழக்கங்கள் பற்றிக் குறிப்பிடல்.
  . காலைப்பிரார்த்தனை
- விசேட தினங்களில் பின்பற்ற வேண்டிய அம்சங்களை விபரித்தல்
  . வெள்ளிப் பிரார்த்தனை
  - கூட்டுப்பிரார்த்தனை, பஞ்சதோத்திரம், சிவபுராணம்
  . சரஸ்வதி பூசை - மகாநோன்பு, ஏடு தொடக்குதல்
  . நால்வர் குருபூசை

1.3 சமய ஒழுகலாறுகளையும், வழக்காறுகளையும் பின்பற்றுவர்.
- **பாடசாலை ஒழுங்கு**
  . பாடசாலையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் பற்றி விளக்குதல்
    - நேரத்துக்கு வருதல்
    - காலைக்கூட்டத்திலும் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளல்.
    - பாடசாலை ஒழுங்கு விதிகளுக்கு மதிப்பளித்து ஒழுகுதல்
    - சக மாணவர்களுடன் இயைந்து நடத்தல்
    - அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கு மதிப்பளித்தல்
- **வாழ்வியல் நற்பண்புகள்**
    - பிறர் நலம் பேணுதல் (கதை)

- நல்லவற்றைக் கடைப்பிடித்தல் (விளக்கம்)
  பணிவு, மன்னிப்பு, நீதி, நேர்மை, பஞ்சமாபாதகங்களைத் தவிர்த்தல்.
- சகோதரத்துவம் (கதை)
- பொறுமை (கதை)

1.4 வாழ்க்கை முன்னேற்றம் பெற வேண்டும் என்னும் நம்பிக்கையில் வாழ்வியல் சடங்குகளை அறிந்து, அவற்றை முறைப்படி பின்பற்றுவர்.

◆ **புதுமனை புகுதல்**
  - புதுமனை புகுதலில் இடம் பெறும் நிகழ்வுகள் பற்றியும், அவற்றின் முக்கியத்துவம் பற்றியும் விளக்குதல்

◆ **விரதங்கள்**

| | | |
|---|---|---|
| நாள் விரதங்கள் | : | வெள்ளிக்கிழமை விரதங்கள் |
| | | செவ்வாய்க்கிழமை விரதம் |
| மாத விரதங்கள் | : | வைகாசி விசாகம் |
| | | ஆனி உத்தரம் |
| | | ஆடிப்பூரம் |
| கடவுளுக்குரிய விரதங்கள் | : | விநாயகர் சதுர்த்தி |
| | | திருக்கார்த்திகை விரதம் |
| | | வரலட்சுமி விரதம் |

**2.0 சமய நம்பிக்கையே பக்தியின் அடிப்படை என்பதை உணர்ந்து, அவற்றை வாழ்வில் பின்பற்றுவர்.**

(03 பாடவேளைகள்)

2.1 நாயன்மாரின் வரலாறுகள் மூலமாக, அவர்களது சமய நம்பிக்கையையும், சிறப்புகளையும் உணர்ந்து, அவற்றின் வழி ஒழுகுவர்: அவர்களது பக்தியின் சிறப்புகளையும், பணிகளையும் எடுத்துரைப்பர்.

- குங்கிலியக்கலய நாயனார்

**3.0 திருமுறைப்பாடல்களையும், தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும், பக்தியோடும் பாடுவர்.**

(14 பாடவேளைகள்)

3.1 பஞ்ச புராணங்கள், தோத்திரப் பாடல்கள் பற்றி அறிந்து, அவற்றைப் பாடுவர். அவற்றுக்குப் பொருள் கூறுவர்.

- **பஞ்ச புராணங்கள்**

- பஞ்ச புராணங்களைப் பாடும் ஒழுங்கு முறையை அறிதல்
- பாடல் பாடியவர், பாடப்பட்ட சந்தர்ப்பம், தலம், பாடல், அடங்கியுள்ள திருமுறை ஆகியவற்றைக் குறிப்பிடல்.
- பாடலுக்குப் பொருள் குறிப்பிடல், அருஞ் சொற்களை விளக்குதல்
- பொழிப்புரை எழுதுதல், பாடல்களை மனனம் செய்தல், பிழையறப் பாடுதல், பண்ணோடு பொருள் உணர்ந்து பாடுதல், கூச்சமின்றிப் பாடுதல் என்பவற்றின் அவசியத்தைக் குறிப்பிடல்.

**தேவாரங்கள் (06)**

01. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்
 "நிரைகழலரவம்........................................."
 "விருது குன்ற மாமேருவின் ....................."
02. திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்
 "மாதர்ப் பிறைக்............................................"
 "நங்கடம்பனைப்..........................................."
03. சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்
 "நத்தார்படை................................................"
 "தம்மையே புகழ்ந்து..................................."
04. மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்
 "அம்மையே அப்பா......................................."
05. திருவிசைப்பா
 "கற்றவர் விழுங்கும்....................................."

06. திருப்பல்லாண்டு
"பாலுக்குப் பாலகன்........................................"

07. பெரியபுராணம்
"வேதநெறி தழைத்தோங்க..........................."

08. திருப்புகழ்
"இறவாமற் பிறவாமற்................................"

## 4.0 சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுவர்.
(03 பாடவேளைகள்)

4.1 ஆலய வழிபாடு, ஆலயத்தில் நிகழ்த்தப்படும் கிரியைகள் பற்றி அறிந்து, அவற்றுக்கு மதிப்பளித்து ஒழுகுவர்.

- **ஆலய வழிபாடு**
  - பூசைப் பொருட்கள் - விளக்கம்
  - எடுத்துச் செல்லும் முறை
  - வழிபடும் முறை அறிமுகம் (ஒழுங்கு முறைப்படி) ஆலயமும் தொண்டுகளும் - அறிமுகம்

## 5.0 சமயப் பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து, அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகுவர்.
(07 பாடவேளைகள்)

5.1 நாயன்மார் (நால்வர்) வரலாறுளை அறிந்து, அவர்கள் செய்த சமயத் தொண்டுகளை இனங்காண்பர்: அவற்றுக்கு மதிப்பளிப்பதுடன் அவற்றைத் தமது வாழ்வில் கடைப்பிடிப்பர்.
நால்வரின் சமயப்பணிகள்

- நாயன்மார்கள் நால்வரின் வரலாற்றுச் சுருக்கங்களைக் குறிப்பிடல்
- சமயப்பணிகளை எடுத்துரைத்தல்
- நால்வரின் சமயப்பணிகளை முன்மாதிரியாகக் கொண்டு, செயற்பட வழிநடத்தல்.

5.2 ஈழத்தில் சமயம் வளர்த்த பெரியார்களையும் அவர்களது பணிகளையும் அறிதல், அவர்களுக்கு மதிப்பளிப்பர்.

- ஈழத்தில் சமயம் வளர்த்த பெரியார்கள் பற்றிய விபரங்களை அறிதல்

◆ **சுவாமி விபுலானந்தர்**

- சுவாமி விபுலானந்தரின் பணிகளை, பின்வரும் அடிப்படையில் பகுப்பாய்வு செய்தல்
  . வரலாற்றுச் சுருக்கம் (காலமும் பின்னணியும் பிறப்பும்)
  . பணிகள் - சமயம், இலக்கியம், கலை, சமூகம்
  . மதிப்பீடு

**6.0 சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளக்கி, அவை தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்துவர்.**
(03 பாடவேளைகள்)

6.1 சைவ சித்தாந்தத் தத்துவத்தில் முப்பொருள் உண்மை என்பதையும், அதன் இயல்புகளையும் நூலாதாரங்களுடன் விளக்குவர்.

◆ **பதி**

- பதியின் இலக்கணம்
- பசுவின் இலக்கணம்
- பதிக்கம் பசுவுக்குமுள்ள தொடர்பு

**7.0 நாட்டார் சமய வழிபாடுகளையும், வழக்காறுகளையும் அறிந்து, அவற்றுக்கு மதிப்பளிப்பர்.**(05 பாடவேளைகள்)

7.1 நாட்டார் தெய்வங்கள், அவற்றின் வகைகள் பற்றி விளக்குவர்.

◆ **பெண் தெய்வங்கள்**

- கண்ணகியம்மன்
- மாரியம்மன்
- திரௌபதியம்மன்

இத் தெய்வங்களைப் பின்வரும் அடிப்படையில் பகுப்பாய்வு செய்தல்

- வழிபடும் இடங்கள்
- வழிபாட்டு முறைகள்
- சமய, சமூக முக்கியத்துவங்கள்

**8.0 ஈழத்து சைவ மரபுகளைப் பேணிக்காக்க வேண்டும் என்னம் மனப்பாங்கினை விருத்தி செய்வர்.**(05 பாடவேளைகள்)

8.1 ஈழத்து சைவ ஆலயங்களையும், அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பர்.

* விநாயகர் ஆலயம் - மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்
* சிவாலயம் - திருக்கேதீச்சரம்
* அம்மன் ஆலயம் - அம்மன் ஆலயங்கள் அறிமுகம்
* முருகன் ஆலயம் - சித்தாண்டி முருகன் ஆலயம்
  - பேராதனை குறிஞ்சிக்குமரன் ஆலயம்

# සිංහල වර්ණ මාලාව

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අ | ආ | ඇ | ඈ | ඉ | ඊ |
| උ | ඌ | ඍ | ඎ | ඏ | ඐ |
| එ | ඒ | ඓ | ඔ | ඕ | ඖ |
| (අ)ං | (අ)ඃ | | | | |
| ක | ඛ | ග | ඝ | ඞ | ඟ |
| ච | ඡ | ජ | ඣ | ඤ | ඦ |
| ට | ඨ | ඩ | ඪ | ණ | ඬ |
| ත | ථ | ද | ධ | න | ඳ |
| ප | ඵ | බ | භ | ම | ඹ |
| ය | ර | ල | ව | | |
| ශ | ෂ | ස | හ | ළ | ෆ |

நம் நாட்டு இளஞ் சந்ததியினரின் நலன் கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந் நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க வகையில் வைத்துப் படியுங்கள்.

பாடசாலையின் பெயர் ..........................................................................

| | மாணவர் பெயர் | வகுப்பு | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 2012 | ஜோ. நிலோத்தமன் | 7 | |
| 2013 | | | |
| 2014 | | | |
| 2015 | | | |
| 2016 | | | |

හින්දු ධර්මය (දෙ) - 7
2012/T/07/117/40,000